ஓம் பரப்பிரம்மணே நம:

அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கவல்லதான விகடமும் ஆநந்தகரமான அநுபவ விநோத ஞானகலா விலாஸங்களும் நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் எஸ். ஜி. இராமாநுஜலுநாயுடு

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்." (திருக்குறள்.)

COPY RIGHT | REGISTERED

கமலம்-8.	சென்னை ஸ்ரீமுகஹு ஆடிமீ 1௨	இதழ் 88.
Vol. 8.	1933-ம்ஹு ஜூலைமீ 16௨	No 88.

ஆநந்த  தர்சனம்

"மருந்திருக்கிறது ராமநாம மருந்திருக்கிறது" என்று ஒரு பக்தர் துள்ளிக் குதித்துப் பரவசராவதுண்டு. ராமஸ்மரணை ஆத்மலாபத்திற்கு மட்டுமே மருந்தன்று; எத்தனையோ லௌகிக கஷ்டங்களையும் நிவர்த்தித்து நலம் தரும் திவ்யமானதோர் ஔஷதமாகும். பிரதிதினமும் படுக்கையைவிட்டெழுந்ததும் ராமத்தியானம் செய்து, அவ்விதமே இரவில் சயனத்திற்குச் செல்லுகையிலும் ராமமந்திரத்தை ஜெபித்த பிறகே உறங்குவதென்ற வழக்கத்தைக் கொண்டால் அதனால் உண்டாகும் பலன்கள் அதிகம். ஒரு காரியத்திற்குச் செல்லும் தருவாயிலும், ஒரு ஆபத்தான பிணி நேர்ந்த காலத்தும் ராமநாமத்தை முறைப்படி 108-தரமாவது, 1008-தரமாவது ஜெபித்தால் அதன் பலன் வெற்றிகரமாய் முடியும். இடையே அவரவர் கர்மாநுசாரமும் வந்து கலப்பதைத் தடுப்பதற்கில்லையாயினும், பகவத்தியானம் என்றைக்கும் நன்மையையே செய்யும். மரணசிக்ஷை விதிக்கப்பட்டு ஒருவன் சிறைச்சாலையிலிருந்தான். அவனைத் தூக்கிவிடும் தினத்தைக் குறிப்பிட்டு மேலதிகாரி உத்திரவொன்றை அனுப்பினார். இது நடந்த மூன்று தினங்கட்குப் பிறகு கொலையுண்டதாக எண்ணப்பட்டவனே எதிரில் தோன்றியதனால், தூக்கு தண்டனையை நிறுத்தி நிரபராதியென்று விடுதலை செய்யும்படி மற்றொரு உத்திரவையும் அந்த அதிகாரி அனுப்பினார். இந்தப் பிந்தியனுப்பிய விடுதலை உத்தரவே முதலில்போய்ச் சேர்ந்து அக்குற்றவாளியும் விடுதலையானான். இது நடந்த வாரத்திற்குப்பின், தூக்கிட்டுவிடும்படி முதலில் அனுப்பிய உத்திரவு சிறைச்சாலை யதிகாரிகளுக்குக் கிடைத்தது. ஸமுத்திர மத்தியில் புயல்காற்றால் கப்பல் திசைதப்பிச் சென்று தாமதமானதால் இந்த உத்திரவும் தாமதப்பட்டுக்கொண்டு வரும்படியாயிற்று. சிறைச்சாலை உத்தியோகஸ்

தர் ஆச்சரியத்துடன் விடுதலை பெற்றுச் சென்றவனிருந்த அறையைப் பார்க்கையில் சுவர் முற்றிலும் ராம ராம ராம என்று எழுதப்பட்டிருந்ததைக் கண்டார். ராமஸ்மரணையின் பலத்தினாலேயே முதலில் அனுப்பிய தூக்கு உத்திரவு பிறகும், பின் அனுப்பிய விடுதலை உத்திரவு முன்னுமாகக் கிடைத்து நிரபராதியின் உயிர் தப்பவும் முடிந்தது. ஆதலின், பக்தி பூர்வமாய்ப் பரந்தாமனைத் துதித்து ராமநாமஸ்மரணை செய்யக்கடவோம்.

ஃ

"கர்மமே தர்மம்" பகவானாகிய ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா பகவத் கீதையில் கர்மத்தைச் செய்வதுதான் தர்மம் என்று கூறியிருக்கிறார். ஒவ்வொருவரும் தாம் செய்யவேண்டிய கடமைகளைத் தவிர்க்காமல் செய்து முடிப்பதையே தர்மமெனக் கொள்ளவேண்டும். மனிதர்களாய் ஜெனித்தவர்கள் இரண்டு வித கர்மங்களைச் செய்யவேண்டும். ஒன்று தங்களுக்கு ஹிதத்தை நாடுவது. மற்றொன்று பிறருக்கு ஹிதத்தைத் தேடுவது. இவ்விரண்டு கடமைகளில் எதைச் செய்யத் தவறினாலும் சிரேயஸ் உண்டாகாது. எவன் கர்மபிரஷ்டனாய்த் திரிகிறானோ, அவனுக்கு சோம்பல் அதிகரித்து, சித்தம் கலங்கி, மனது ஒரு நிலையிலின்றி அங்குமிங்கும் ஓடிப் பாப கர்மங்களில் பிரவர்த்திக்கும். ஆகவே, சித்த சுத்தி என்பது உண்டாகாமற் போம். இதற்காகவே முற்றுந் துறந்த ஸந்யாசிகள்கூடத் தங்கள் கருமத்தைச் செய்யாது விடுகிறதில்லை. இதன்றி, இன்பமென்பது ஒரு காரியத்தைச் செய்த பிறகே அடையக்கூடிய தாதலின், அந்த இன்பத்தின் நிமித்தம் தன் காரியமாகிய கடமையை ஒழுங்காகச் செய்து முடித்து பகவத் பிரீதிக்குப் பாத்திரராக வேண்டும்.

ஃ

"ஆலயந் தொழுவது சாலவும் நன்று" ஆலயத்திற்குச் சென்று பகவானைத் தரிசித்தவர்களின் மனதில் அந்தப் பரமமூர்த்தியின் நினைவே ஸதா பதிந்திருக்கும். ஸ்வாமி தரிசனம் செய்வதற்காகக் கோயிலுக்குச் செல்வானேன்? வீட்டிலிருந்தே பிரார்த்தித்துத் தியானிக்கலாகாதா என்பர். ஆனால், அவ்வாறு தியானிப்பதற்கு ஸாத்தியப்படுமோ? மகா யோகிகளுக்குக்கூட மனம் ஒரு நிலையில் நிற்கவில்லை. பிரதிதினமும் உலகத்திலுழன்று திரியும் அற்பமானவர்களாகிய நாம் மனதை ஒரே யொரு பொருளில் நிறுத்த முடியுமா? அதற்காகவே, கோயிலுக்குப்போய் ஸ்வாமியையும் அம்மனையும் தரிசனம் செய்து அவ்வுருவங்கள் நம்முடைய மனதில் ஸ்திரமாயிருக்கும்படியான பழக்கத்தைச் செய்துகொள்ளவேண்டும். பசித்த குழந்தைகட்குத் தாயின் நினைவும், காமத்தால் பீடிக்கப்பட்ட புருஷனுக்கு ஸ்திரீயின் நினைவும், யாசகர்கட்குத் தர்மவான்களின் நினைவும் உண்டாவதுபோல், ஸம்ஸாரத்திலடிபட்டு உழன்று திரியும் பாபிகளாகிய நமக்கு பகவானுடைய நினைவு உண்டாகும்படி முன்னோர்கள் ஆலயங்களைப் பிரதிஷ்டை செய்து மூர்த்திகளை ஸ்தாபித்தார்கள். அவர்களுடைய ஆழ்ந்த யோசனையை அறியாமல் கோயில் அவ

யௌவன பிராயத்தினர் லைப் இன்சூரன்ஸ் கம்பெனியில் சேருவதைப்பற்றி அலக்ஷியமாய் எண்ணுகின்றனர். அதிக வயதாகிவிட்டவர்களோ தாங்கள் ஏற்கெனவே சேர்ந்துகொள்ளத் தவறிவிட்டோமே யென்று வாடுகின்றனர்.

சியமில்லே யென்று பிதற்றித் திரியலாமா? விக்கிரகாராதனையைப் பழிப்போர்கள், விக்கிரகரூப ஸாதனமின்றியே நேராகவே கடவுளை நோக்கித் தியானிப்பதாகத் தாங்கள் செய்யும் பக்திச் சடங்குகளின் மூலமாய் தங்கள் மனத்தை ஒரே நிலேயாய்க் கடவுளிடம் செலுத்த முடிகிறதா என்பதை யோசித்துப் பார்ப்பதில்லே. ஓ! முடியும் என்று வீரம் பேசலாமேயன்றி, மகா ஞானிகளால் செய்யக்கூடிய ஏகதியானத்தை ஸாமான்ய நிலேயில் மண்—பொன்—பெண் எனும் மூவகை ஆசைகளின் சேற்றில் வீழ்ந்துகிடக்கும் மனிதர்கள் செய்ய முடியுமென்பது அர்த்தமற்ற சொல்லேயாகும். ஆகவே, ஆலயங்களும் அவசியம், மூர்த்திகளும் அவசியம். அவற்றை நாம் தரிசிப்பதும் அவசியம். புருஷன் வேளைக்கொரு முறையோ, அல்லது நாளுக்கு ஒரு தடவையோ விதம் விதமான உடைகளை யணிந்து அலங்காரம் செய்துகொள்வது அவனிடம் ஸ்திரீக்கு அதிக பிரேமையை விளைப்பதுபோல், பகவானைப் பல வித அலங்காரங்கள் செய்து உத்ஸவாதிகள் நடத்துவது பக்தர்களாகிய நமக்கு அவரிடம் அதிக பிரேமையை உண்டாக்கும். என் புருஷன் தானே; அவருக்கு அழுக்கு வஸ்திரமிருந்தால் பாதகமில்லே; அவருக்கு ஸ்நான பானங்களில்லாவிட்டாலும் கெடுதலில்லே; அவருக்கு நான் உபசாரம் செய்யாவிட்டாலும் ஹானியில்லே யென்று எந்தப் பதிவிரதையேனும் சொல்வளா? அதுபோல் பக்தனுயிருப்பவன், "என் ஸ்வாமிதானே, அவருக்கு அபிஷேகமேன்?—தூபதீப ஆராதனே என்?—ஷோடசோபசாரம் என்?—நைவேத்தியமேன்?—என்று சொல்லமாட்டான். ஆகவே, ஆலயம் தொழுவதும், ஈசுவரனைப் பலவாறு உபாஸிப்பதும் ஹிந்துக்களுடைய கடமை.

ஃ

"ஷட்குணம்" என்பது ஐசுவரியம், வீரியம், கீர்த்தி, ஸம்பத், வைராக்கியம் ஆகிய இவைகளே. ஈசுவரானுக்கிரகம் எந்த மனுஷ்யனுக்குப் பூர்ணமாயிருக்கிறதோ அவன் எடுத்த காரியம் வெகு எளிதாயும் இனிதாயும் முடியும். ஈசுவர பிரஸாதமே ஐசுவரியமாகும். கீர்த்தியானது லோகோபகாரமான ஸத்கருமங்களால் லபிக்கத்தக்கது. இதை அடையத்தக்கவன் ஸரள ஹிருதயனே. எவனுக்குப் பிராணிகளிடம் கருணையில்லேயோ அவனுக்குக் கியாதி உண்டாகாது. எவனுக்கு ஸகல ஜனங்களிடமும் துவேஷம் இருக்கிறதோ அவன் அபகீர்த்தியை யடைவான். வீரியம் என்பது இங்கு பலத்தைக் குறிக்கும். இது இரண்டு வகை. ஒன்று சரீரபலம், மற்றொன்று மனோபலம். எவ்விதமான கஷ்டத்தையும் ஏற்று அனுபவிக்கும் வன்மையுள்ளவனே வீரியவான். அரோகதிட சரீரமில்லாத மனுஷ்யன் பிரேதஸமானனுவான். பிறந்தும் பிரேதமெனத் தக்கவன் பலஹீனனே. மலேபோல் பருத்த தேகமிருந்தாலும், இரத்தம், மாம்ஸம், என்பு முதலியன அளவுக்கு மிஞ்சி வளர்ந்தாலும் திடமனஸ் இல்லேயேல் எவ்வித கருமமும் நிறைவேருது. இன்ன காரியத்தைச் செய்து தான் முடிக்கவேண்டு மென்ற தீர்மானமும், அவ்விதமே செய்து முடிக்கும் ஆற்றலுமுள்ளவன் வீரியவான். ஸம்பத் என்பது பொருளையும்

நமக்கு வேண்டிய முக்கியமான இடங்களைப் பிறருக்குத் தெரிவித்து அவர்களையும் அங்கு அழைத்துச் செல்வதில், அவர்களால் அங்கு ஒரு கலகமுண்டாகி, நாமும் பிறகு அவ்விடத்திய நன்மதிப்பை இழக்கும்படியாகிறது. பிறகு அங்கு கால்வைக்கவும் முடியாமற் போகிறது.

சுகமனுபவிப்பதற் கேதுவான மற்ற வஸ்துக்களையும் குறிக்கும். ஸகல ஸம்பத்துகளுமுள்ளவன் இவ்வுலகத்தில் எல்லா ஸுகங்களையும் அனுபவிப்பதோடு, தனது சுற்றத்தார், நண்பர், அதிதிகள்—முதலிய ஸகல ஜனங்களுக்கும் உபகாரம் செய்து, இறந்தபின்பு ஸ்வர்க்காதி போகங்களையும் அனுபவிப்பான். ஞானம் என்பது பகுத்தறியும் தன்மை. நித்திரை செய்வோன் ஸுக ஸம்பாஷணையால் அடையக்கூடிய ஆநந்தத்தை யடையாமல் ஏமாந்து போவதுபோல், ஞானமில்லாதவன் எத்தனை ஸுகங்கள் இருக்கப் பெற்றாலும் அவற்றை யனுபவிக்கின்றோமென்கிற அறிவில்லாமல் மண்ணையும் கல்லையும் போலிருக்கிறான். வைராக்கியத்தாலே துக்க சமனமாவதால் அந்த குணம் உத்தமமாகிறது. ஆகவே, மேலே கூறிய ஷட்குணங்களும் பொருந்தியவனே ஸர்வோத்தமனாவன். அவனுக்கே பகவத் பக்தியும் எளிதில் சித்திக்கும்.

ஃ

"பிறப்பு, இறப்பு, மூப்பு, நோய், துக்கம்" இவைகளிலிருக்கும் தோஷங்களை யறியவேண்டும். பிறப்பில் கர்ப்பவாஸம் என்னும் தோஷம் இருக்கிறது. சிசுவானது தாயினுடைய உதரத்தில் படும் அவஸ்தையைச் சொல்லி முடியாது. மரணகாலத்தில் ஜீவன் கூட்டைவிட்டுப் பிரியும்போது வெகு அவஸ்தைப்படுகிறது. இதற்கே மரணாவஸ்தை என்கிறோம். ஸகல அவஸ்தைகளிலும் அதிகமானது மரணாவஸ்தை. இதுதான் இந்தப் பிறப்பிலுள்ள தோஷம். இனி, மூப்பிலிருக்கும் தோஷங்களாவன:—ஸ்வ ஜனங்கள் செய்யும் ஏளனம்; இன்பத்தை யனுபவிக்க முடியாத அசக்தி முதலியன. நோயிலுள்ள தோஷங்களாவன:—பசியின்மை, நாவரக்ஷி, சரீர பலக்குறைவு முதலியன. துக்கத்தால் எந்தக் காரியமும் நடைபெறுகிறதில்லை. 'இந்த ஜன்ம மேதுக்கு' என்ற கேள்வி யுண்டாகிறது. முகத்தில் ஒளி மழுங்கி, மனதில் இருளடைந்து, துக்கத்துக்குக் காரணமாயிருந்த வஸ்துவை யழிக்க வெண்ணி பாபகர்மத்தைச் செய்யத் துணிகிறோம். ஆகவே, மேலே கூறிய பிறப்பு, மூப்பு, நோய், துக்கம் முதலியன நம்மை வந்து அணுகாதபடி ஸதா ஸர்வேசுவரனைப் பிரார்த்திக்கக் கடவோம்.

கதை கட்டிவிடுதல்.

சம்பாத்திய நிமித்தம் மனைவி மக்களைவிட்டுத் தூரதேசம் வந்து, கிடைத்ததை யுண்டு, அகப்பட்ட இடத்தில் கால் நீட்டி உறங்கிக் கஷ்டப்பட்டுக்கொண் டிருக்கையில், அவனது கஷ்டமறியாத மனிதர்கள் அவன் ஏதோ பலத்த குற்றம் செய்துவிட்டு, அல்லது விசேஷமாகக் கடன் பட்டுவிட்டு அதனால் சொந்த ஊர்விட்டு இங்கு வந்து வசிப்பதாகக் கதைகட்டி விடுகிறார்கள். இதைக் கேட்பவர்கள் உண்மையாகவே அதை நம்பியும் விடுகின்றனர்.

அமிர்தகுணபோதினி

ஸ்ரீமுக௵ ஆடி௴ 1௳

நம் நாட்டின் பூர்வ புஸ்தகசாலைகள்.

ஆதிக்கியம், ஐசுவரியம், தேசீய வித்தை ஆகிய இவைகளைப் பொருத்தே ஒரு தேசத்தின் நாகரீகத்தை நிதானித்தறிகிறோம். தேசாபிவிர்த்திக்கு இன்றியமையாத கல்வி வியாபகமானது பாடசாலைகள் கலாசாலைகள் இவற்றோடுங்கூட புஸ்தக சாலைகள், வாசக சாலைகள், காட்சிச் சாலைகள் முதலியவற்றாலும் உண்டாகின்றது. ஜன ஸமூகத்தில் வித்தையை வியாபிக்கச் செய்வதே புஸ்தக சாலைகளின் பிரதம நோக்கமாகும். 'கல்வி' ஒருவனைச் சரியான மனிதனாகவும், 'சங்கம்' அவனை ஜாக்கிரதை யுள்ளவனாகவும், 'எழுதுதல்' கண்டிதமானவனாகவும், 'சரித்திரங்கள்' புத்தியுள்ளவனாகவும், 'கவிகள்' யுக்தியுள்ளவனாகவும், 'கணிதம்' குசாக்கிர புத்தியுள்ளவனாகவும், 'பிரகிருதி சாஸ்திரம்' ஆழ்ந்த யோசனையுடையவனாகவும், 'நீதி சாஸ்திரம்' கம்பீரியனாகவும், 'தர்க்க சாஸ்திரம்' நியாயவாதம் புரிபவனாகவும் செய்விக்கின்றன.

ஃ

புஸ்தகசாலைகளானது ஸகல கலைகளையும் போதிக்கவல்ல ஒரு ஸர்வகலாசாலை பொன்றுமுள்ளன. கல்வியின் பல துறைகளிலும் அறிவை விர்த்தி செய்துகொள்ளப் புஸ்தக சாலைகளில் ஏற்ற வசதிகள் இருக்கின்றன. அவரவரது மனதுக்கு இயைந்த அறிவைப் புஸ்தகசாலைகள் பெரிதும் ஊட்டவல்லன. ஒரு புஸ்தகசாலைக்குள் செல்வோன் வேதாந்தியாயின், அவனுக்கு வேதாந்த உணவை ஊட்டும். சங்கீத வித்வானாயின், அவனது சங்கீத வித்தையை விர்த்தியடையச் செய்யும். கைத்தொழில் வல்லோனுக்கு இன்னும் மேன்மையான ஜீவன வழியைப் போதிக்கும். வியாபாரிகளுக்கு வேண்டிய வர்த்தக யுக்தியை வளர்க்கும். இவ்விதமே, பிரபஞ்சத்தின் நாலா திசைகளிலுமிருக்கிற அறிவடைந்த மேதாவிகள் மிகு பிரயாசையுடன் வரைந்த அறிவுரைச் சிந்தனைகள் யாவும் நூல் வடிவமாகப்

ஒருவன் தனது ஜீவாதாரமான இடங்களை மற்றவர்களுக்குத் தெரியாமல் எவ்வளவு காலம் மறைத்துவைக்கிறானோ அவ்வளவு வரைக்குமே அவனுக்கு க்ஷேமகாலம்.

புஸ்தக சாலைகளில் நிறைந்திருக்கின்றமையின், ஒருவன் எப்பொழுது அவற்றை வாசிக்க ஆவல் கொள்கின்றானோ அப்பொழுது முதற்கொண்டு அவைகள் அவனுக்கு முழு வெளிச்சத்தையும் தீர்க்க ஞானத்தையும் கொடுத்து உயர்த்துவிக்கின்றன. உத்தம நூல்கள் பேரறிவாளருடைய மேலான யூகஸமத்காரங்களைத் தன்னுள் அடக்கிக்கொண்டு நிற்றலால், அவைகள் உலகோருக்குத் தக்க லௌகிக ஞானத்தையும், மேன்மையான வைதீக ஞானத்தையும் அளிக்கவல்ல சக்தி தத்துவம் வாய்ந்துள்ளவைகளாகும்.

ஃ

ஒருவனுக்கு மனக்கிலேசங்களால் மனவமைதியில்லாதபோது அவன் ஒரு சிறந்த நூலினை வாசிப்பானாயின், அவன் தனது ஸஞ்சல ஸாகரத்தைச் சற்று நேரமேனும் மறந்திருக்கவோ, அல்லது ஒருவித தேறுதல் கொள்வதற்கான ஆற்றலை யடைவதற்கோ கூடியவனாகின்றான். துயரக்கடலில் ஆழ்ந்திருக்கும் ஒருவனை அவனது அரிய நண்பர்களைவிட நல்ல கிரந்தங்களே நன்கு தேற்றுகின்றன; புதிய எண்ணங்களையும், புதிய சக்திகளையும் வளர்க்கின்றன. ஜனங்கள் ஒன்றாய்க் கூடுவதும், தாங்கள் அறிந்த உண்மைகளை ஒருவரோடொருவர் தர்க்கித்துத் தெரிந்துகொள்வதும் புஸ்தக சாலைகளிலும் வாசக சாலைகளிலும்தான். இந்த அறிவுச்சாலைகளுக்குச் செல்வோரில் அநேகர் மகா வித்துவான்களாயும், சுகுண சம்பத்துடையவர்களாயும் பரிமளிப்பரென்பது திண்ணம்.

ஃ

நமது புராதன காலத்துப் புஸ்தகசாலைகள் தர்மஸ்தாபனக் கட்டிடங்களிலும், கோவில்களிலும், சந்நியாஸ ஆச்சிரமங்களிலும் நிர்மிக்கப்பட்டிருந்தன. அவை வானப்பிரஸ்தர்களது ஆதீனத்திலிருந்தன. அன்னோர் தமது அவகாசப் பொழுதில் நூல்கள் வரைவதும், தமது புஸ்தக சாலைகளில் அநேக இளஞ் சிறுவர்களுக்குக் கல்வி போதிப்பதுமாய்க் காலங்கழித்தனர். நமது தேயத்து மகாத்மாக்களும் யோகிகளும் செய்த அரும்பெரும் வேதாந்த சாஸ்திரங்களை அந் நாட்களிலேயே அன்னிய தேசத்தார் அறிந்துகொண்டதும், நம் நாட்டிற்குரித்தான ரேகை, அக்ஷரகணிதம் ஆதிய சாஸ்திரங்களை அன்னியர்கள் கற்று மேல் நாடுகளில் கணித சாஸ்திரத்தைப் பரவச்செய்ததும், வராகமிகிரர் கண்டுபிடித்த கிரகணங்களின் காரணமும், பூமியின் சலனமும் ஆதிகாலத்திலேயே வெளி நாடுகளுக்குப் பரவினதும், பழய கோவில்களில் செதுக்கப்பட்டுள்ள

அவர்கள் நமது வீட்டுக்கு வருவதாகக் கடிதம் வந்திருக்கிறதென்று சந்தோஷத்துடன் பலரிடம் சொல்லிக்கொண்டது ஒரு காலம்! பிறகோ அவர்களின் வரவைப்பற்றிச் சலித்துக்கொள்வதும் ஒரு காலம்.

சிற்பவேலைகள் எகிப்து, ரோமாபுரி முதலிய நாடுகளுக்குப் பரவி ஜ்வலித்ததும், ஆயுர்வேத முதலிய வைத்திய சாஸ்திரங்களை நம்மிட மிருந்து மேல் நாட்டார் கைக்கொண்டதும், நம் தேயத்தின் பதி பக்தி, பரோபகாரம் போன்ற சுகுணங்கள் தற்காலம் மேனாட்டு ஸ்திரீ ஸமூகத்தினுள்ளும் புகுந்து பிரகாஸிப்பதும், நமது புராதன புஸ்தக சாலைகளால்தா னென்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும்.

ஃ

புத்தமத வியாபக காலத்தில் நம் நாட்டில் புதிதாய் அநேக கிரந்தங்கள் உண்டாயின. சாணக்கியன் முதலிய நூல்வல்லோர் பல நூல்களை இயற்றினர். நம் நாட்டில் தக்ஷசிலா, அமராவதி, சக்யா, விக்ரமசிலா போன்ற பல இடங்களிலும் ஸர்வகலாசாலைகள் நிர்மாணிக்கப்பட்டன. அவற்றுடன் புஸ்தகசாலைகளும் சேர்க்கப் பட்டன. இச்சாலைகளில் அநேகம் மாணவர்கள் கல்வி கற்றுவந்தனர். பர்மா, திபேத், சீனா முதலிய பிறநாடுகளிலிருந்தும் கல்வியைக் கோரி அநேகர் இந்த ஸர்வகலாசாலைகளை யடைந்தனர். நம் நாட்டில் அக்காலம் புஸ்தகசாலைகள் உன்னத தசையிலிருந்தன. சந்திரகுப்த அரசரின் நாளில் இப்புஸ்தகசாலைகள் விசேஷித்த அபிவிர்த்தியைப் பெற்றன. காஷ்மீர் தலைநகரான ஸ்ரீநகர், வல்லபபுரி, உஜ்ஜயினி, நவத்வீபம், பாடலிபுத்திரம் முதலிய ஸ்தலங்களிலும் புஸ்தக சாலை கள் மகோன்னதமாய் இலங்கின. அசோக சக்ரவர்த்திக்குப் பின்னால் புஸ்தகசாலாபிவிர்த்தியை ஏற்றுக்கொண்டவர் அக்பர் பாதுஷா ஆவர். பல மதங்களைப்பற்றி விசாரணைசெய்து அம்மதங்களைச் சார்ந்த மதிப்புள்ள கிரந்தங்களைச் சேகரிப்பதில் அவருக்கு அதிக பிரீதியுண்டு. 1582-ம் வருஷத்தில் மகா பாரதத்தை மொழிபெயர்க் கச் செய்தார். 1589-ம் வருஷத்தில் இராமாயணம், அதர்வணவே தம், லீலாவதி (கணிதம்), ஒரு ஜோதிஷ கிரந்தம், சமஸ்கிருதத்தி லுள்ள காஷ்மீர் சரித்திரம், ஹரிவம்சம், பஞ்சதந்திரம், நைடதம் முதலிய நூல்களைத் தக்க பண்டிதர்களைக்கொண்டு பாரசீகபாஷை யில் மொழி பெயர்ப்பித்தார். இவ்விதமே மொகலாயவமிச அரசர்க ளது சரித்திரங்களையும் எழுதச் செய்தார். அவரிடமிருந்த பண்டி தர்களில் பிரதானஸ்தரான 'பைஜி' இறந்த பின்னர், அப்பண்டிதரின் புஸ்தகசாலையில் 4500-கிரந்தங்கள் இருந்தன. அக்பர் பாதுஷா அவைகளையும் தமது புஸ்தக சாலையுடன் சேர்த்து மூன்று வகுப்பா கப் பிரித்து, ஆக்ராக் கோட்டையில் தமது புஸ்தகசாலைக்கு ஏற்ற

நாம் ஓரிடத்திற்கு இன்ன தினத்தில் வருகிறோமென்று எழுதியகாலில் தான் அவ்விடத்திலுள்ளவர்கள் அவசர காரியமாய் வேறிடத்திற்குப் புறப் பட்டுப்போய் விடுகிறார்கள். அன்புள்ளோர் இதை முன்னதாகத் தெரிவிக்கி றார்கள். மற்றவர்களோ அதுவும் தெரிவிப்பதில்லை. போய்க் காணாது திருப் பிய அலைச்சலே லாபம்.

ஸ்தானம் கொடுத்துப் புஸ்தகசாலைகளை விருத்தி செய்தார். இவற்றை நாளைக்கும் பார்வையிடலாகும். அக்பருக்குப் பிறகு புஸ்தகசாலைகளின் ஆதரணை குறைந்து க்ஷீணிக்கத் தொடங்கின.

ஃ

நாம் வசிக்கும் தக்ஷிண தேசத்தைக் கவனிக்கும்போது, பல்லவ அரசர்களின் இராஜதானியாகிய காஞ்சிபுரத்திலும் புஸ்தகசாலைகள் இருந்தனவாகத் தெரிகிறது. அதற்கு அடுத்ததாய் தஞ்சாவூரிலும் புஸ்தகசாலைகள் பிரகாஸித்தன. தஞ்சாவூர் அரசரது புஸ்தகசாலையை நம் இந்தியாவின் புஸ்தகசாலைகளிலும் விசேஷமானதெனக் கூறுவர். 16-ம் நூற்றாண்டின் இறுதியிலும், 17-ம் நூற்றாண்டின் துவக்கத்திலும், தஞ்சைமாநகரம் தெலுங்கு நாயக்க அரசர்களால் ஆளப்பட்டபோது இப்புஸ்தகசாலை ஸ்தாபிக்கப்பட்டது. இச்சாலையில் தெலுங்கில் எழுதப்பட்ட அநேக கையெழுத்துக் கிரந்தங்கள் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன. 18-ம் நூற்றாண்டில் மகாராஷ்டிரர் தஞ்சையை ஜெயித்தபோது இப்புஸ்தகசாலை விருத்தியடைய ஆரம்பித்தது. சிவாஜிமகாராஜா சில புஸ்தகங்கள் சேர்த்தார். சரபூஜிராஜன் 1820-1830-ம் வருஷங்களில் காசி யாத்திரைக்குச் சென்றபோது அநேக புஸ்தகங்கள் சேகரித்தார். இச்சாலையில் தேவநகரி, நந்தி நகரி, தெலுங்கு, கன்னடம், ஸமஸ்கிருதம், மலையாளம், வங்காளம், பஞ்சாபி, உரியா, காஷ்மீரம் முதலான பாஷைகளில் எழுதப்பட்ட 18-ஆயிரம் கையெழுத்துக் கிரந்தங்களும், 8-ஆயிரம் பனையோலைக் கிரந்தங்களும் இருந்தன.

ஃ

புராதன காலத்தில் அச்சுயந்திரம் நம் நாட்டுக்கு வராமுன்னர் அதிகப் புஸ்தகங்கள் கிடைப்பது அருமையாயிருந்தது. ஒரு புஸ்தகத்தின் பிரதி வேண்டுமாயின் பனை ஓலையும் எழுத்தாணியும் கொண்டு ஒரு மனிதன் பல மாதங்கள் எழுதித்தான் பெறவேண்டியிருந்தது. பின்னும், தீ, கறையான் இவற்றிலிருந்தும் காப்பாற்ற வேண்டிய கஷ்டமுமிருந்தது. 10-வது நூற்றாண்டில்தான், அதாவது ஆயிரம் வருஷங்களுக்கு முன்தான் அச்சடிக்கும் சாதனம் ஐரோப்பா தேசத்தில் கண்டு பிடிக்கப்பட்டது. நம் நாட்டில் அச்சுயந்திரம் கொண்டுவரப்பட்டது 17-ம் நூற்றாண்டிலாகும். தங்களின் மதத்தைப் பரவச் செய்வதற்கு 17-ம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த கிறிஸ்துமத போதகாசிரியர்கள் அதற்குச் சாதனமாக அச்சுயந்திரத்தையும் இங்கு கொண்டுவந்ததன்றி இத்தேசத்தின் பாஷை

முதலில் ஒரு காலணா ஏமாற்றப் பழகியவன்தான் பிறகு ஆயிரத்துக்கும் துணிகிறான். முதலிலேயே நாம் காலணாவில் எச்சரிக்கையாக இருந்து பெற்றிருக்கக் கூடாதாவெனில், நம்பாமல் உலககாரியங்கள் முடிகின்றனவா?

களைக் கற்று நூலாராய்ந்து பண்டிதர்களாகிப் பல நூல்களும் இயற்றுவாராயினர். 'பிரௌன்துரை' என்பவர் தெலுங்கு இங்கிலீஷ் அகராதியும், தெலுங்கு வியாகரணமும் எழுதினர். தமிழ்ப் பாஷையில் 'போப்' என்பவர் திருக்குறள் உரை, தமிழ் இலக்கணம் போன்ற நூல்களும் வரைந்தார். சிறுவர்களின் மனதிற் பதியும் வண்ணம் 'போப்பையர் இலக்கணம்' என்ற ஒரு அணு விலையுள்ள சிறிய இலக்கணநூல் எழுதியவரும் இவரே. அந்த இலக்கணத்தையே விரிவாகக் கூறிய பெரிய நூலும் ஒன்றுண்டு. அது இப்பொழுது அகப்படவில்லை. மற்றொரு கிருஸ்துவ போதகாசிரியரான வீரமாமுனிவர் என்ற தமிழ்ப்பெயர் கொண்டவர் கொடுந்தமிழ், தேம்பாவணி, சதுர அகராதி போன்ற நூல்களும் இயற்றுவதானார். சென்னை, பம்பாய், கல்கத்தா போன்ற முக்கிய இடங்களில் இப்போதகாசிரியர்கள் அச்சு யந்திரம் ஸ்தாபித்து நலம் புரிவதாயினர்.

ஃ

தற்காலம் நமது நாட்டிற் காணும் புஸ்தகசாலைகளைக் கவனிக்கும்போது அவை தமது புராதன மேன்மையை இழந்து மிகப் பரிதாபமான நிலைமையிலுள்ளன. நம் நாட்டின் ஒவ்வொரு இராஜதானித் தலைநகரிலும் துரைத்தனத்தாரது ஆதரணையில் பொதுப் புஸ்தகாலயங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு இராஜதானியின் ஸர்வகலாசாலைக்கும் ஒரு புஸ்தகசாலை இருந்து வருகின்றது. நம் சென்னை இராஜதானியின் தலைநகரான சென்னையிலுள்ள கன்னிமோரா புஸ்தகசாலையில் பல பாஷைக் கிரந்தங்களுள்ளன. எவரும் அங்கு சென்று இலவசமாய்ப் புஸ்தகங்கள் பெற்று வாசிக்கலாம். இவ்விதமே கல்கத்தாவில் 'இம்பீரியல் லைபிரரி' என்ற பெரிய புஸ்தகசாலையொன்றுண்டு. சுதேச இராஜ்யங்களிலுள்ள புஸ்தகசாலைகள் யாவற்றிலும் பரோடா சமஸ்தான புஸ்தகசாலை மிக்க மேலானது. சிறுவர்களுக்கான தனித்த புஸ்தகசாலைகளும் இங்கு உள்ளன. இப் புஸ்தகசாலைகளைத் தவிர்த்து, பொது ஸ்தாபனங்கள், சங்கம், அல்லது ஸமூகம் ஆகிய இவைகளால் பரிபாலிக்கப்படும் புஸ்தகசாலைகளின் தொகை ஸ்வல்பமாகவே காண்கிறது. 1919-ம் வருஷக் கணக்கின்படி நமது ஆந்திர தேசத்தில்மட்டும் 360-புஸ்தகசாலைகள் உள்ளன. ஜனஸமூக விருத்திக்குரிய எந்த இயக்கத்தையும் நமது ஆந்திர தேசத்தவர்களே முன்னதாகக் கைக்கொண்டு பாடுபடுவோராயிருக்கின்றனர். தெலுங்கு தேசத்தாரின் பாக்கிய விசேஷத்தால் வீரேசலிங்கம் பந்துலு என்ற பெரியார் தோன்றி அவரால் ராம்மோஹன புஸ்தகசாலை யொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் 5000-கிரந்தங்களுள்ளன. ஹைதராபாத்திலுள்ள 'கிருஷ்ண தேவராய ஆந்

திமிர் பிடித்தவர்களையும், தந்த கடனைக் கேட்கவந்தோரைக் கன்னத்தில் அறைபவர்களையும் தெய்வம் வேறிடத்தில் குடியேற வைத்துவிடுகின்றது.

திர பாஷாநிலயம்' என்ற புஸ்தகசாலையானது 1500-புஸ்தகங்களுடன், ரூபாய் 1166-மூலதனத்துடன் பிரகாஸிக்கின்றது. நம் தமிழ் நாட்டிலோ ஆந்திரதேசத்திற் காணும் புஸ்தகசாலைகளின் தொகையில் பாதிகூடக் காண்பதற்கில்லை. மதுரைத் தமிழ்ச் சங்கத்தைச் சேர்ந்த புஸ்தகசாலை யொன்றை மட்டுமே சிறப்பாய்க் கூற முடிகின்றது. இங்கு பனையோலைக் கிரந்தங்களும், அச்சுப் புஸ்தகங்களும் விசேஷமாயுண்டு.

ஃ

மேற்றிசை நாடுகளில் ஆண்களும் பெண்களும் சரிசமமாய்ப் புஸ்தகசாலைகளுக்குச் சென்று வாசிக்கும் வழக்கமுள்ளோரா யிருக்கின்றனர். நமது தமிழ் நாட்டில் புஸ்தகசாலைகளும் சொற்பமே. அவற்றை வாசிக்கச் செல்வோர் இன்னும் குறைவாகவே இருப்பர். அதிலும் பெண்மக்களுக்கோ புஸ்தகசாலைகளுக்குச் செல்ல எவ்வித வசதியுமில்லை; முயற்சியுமில்லை. 'தான் கற்ற நூலளவே யாகுமாம் நுண்ணறிவு' என்றபடி அவரவர்களின் நூல் வாசிப்புக்கு ஏற்ற வண்ணமே அவரவர்களின் அறிவுப் பெருக்கும் வித்தியாபி விருத்தியுமிருக்கும். ஆங்காங்குள்ள ஹைஸ்கூல்களிலும், காலேஜ்களிலும் மாணவர்களுக்கெனப் புஸ்தகசாலைகள் இருந்துவருவது பெரும் உபகாரமாகும். இவ்வித புஸ்தகசாலைகளுக்குச் செல்வோர் அங்குள்ள நூல்களை நன்கு ஆராய்ச்சி செய்து வாசிக்கவேண்டும். நுனிப்புல் மேய்வது கூடாது. எந்த நல்ல புஸ்தகத்தையும் வாசிக்காமல் அலக்ஷியம் செய்யவொண்ணாது. இன்னொரு விஷயத்தையும் இங்கு குறிப்பிடவேண்டும். சிலருக்குப் புஸ்தகங்களை மூலை சுருங்கிக் கிழிந்து கெட்டுப் பாழாக்கி விடுவதில் அதிக சாமர்த்தியம் உண்டு. இவர்கள் மிக்க அபாயகரமான மனிதர்களாவர். ஒரு நல்ல கிரந்தத்தைத் தங்களின் அலக்ஷிய ஈனபுத்தியால் பாழாக்குவது தேவாம்ஸம் பொருந்திய ஒரு மனிதனைக் கொல்வதற்கும், ஒரு விசேஷ ஜந்துவைக் கொல்வதற்கும் ஒப்பாகுமெனவும், ஒரு நல்ல புஸ்தகத்தைப் பாழாக்குகிறவன் விவேகத்தையே கொல்லுகிறானெனவும் ஆங்கில மஹா கவியான மில்டன் (Milton) கூறுகின்றார்.

ஃ

ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு புஸ்தகசாலை இருந்துவர வேண்டியது அவசியமாகும். "வீட்டுப் புஸ்தகங்கள்" என்ற பெயருடன் அவைகள் விளங்கவேண்டும். இரவல் கேட்கும் பாபிஷ்டர்களை ஒருபோதும் ஆதரிக்கவொண்ணாது. இரவலும் தரக்கூடாது. வீட்டிற்குள்ளேயே இருந்து வாசித்துச் செல்லும்படி செய்யவேண்டும்.

"நானாக ஒரு கார்டு உனக்கு எழுதினால்தானே நீ இந்தப் பாவிக்கு ஒரு கடிதம் எழுதப்போகிறாய்" என்று அங்கலாய்ப்புடனே ஒருவர் தமக்கு வேண்டியவருக்கு எழுதினாராம்.

ஒவ்வொருவரும் தம் வயிற்றையும் வாயையும் கட்டியாவது, செலவுகளைக் குறைத்தாவது உத்தம நூல்களை அவைகள் கிடைக்கும் காலங்களில் சேகரித்து வைத்துக்கொள்ள ஓயாத முயற்சியாயிருக்கவேண்டும். தமிழ் நாட்டிலுள்ள நூலாசிரியர்களிற் பெரும்பான்மையோர் எளிய நிலையிலேயே உள்ளாராதலின், அன்னோர் வெளியிடும் நூல்களை அவ்வப்பொழுதே பெற்றுக்கொண்டாலன்றிப் பின்னர் கிடைப்பது பிரயாசையேயாகும். பணம் பிறகு கிடைக்கலாம், புஸ்தகம் பிறகு கிடைப்பதரிது. உதாரணமாக, ஆறு வால்யங்களுடன் கூடிய "ஆநந்தகதா கல்பகம்" என்ற நாவல் களஞ்சியத்தின் முதல் வால்யத்தை நாம் 1913-ம் வருஷத்தில் இயற்றிப் பதிப்பித்தோம். இரண்டு வருஷங்களில் முதல் வால்யத்தின் பிரதிகள் யாவும் செலவாகித் தீர்ந்து, பிறகு அதனை விரும்பியவர்கட்கெல்லாம் 'இல்லை' யென்று சொல்லும்படியாக முடிந்தது. 1913-ம் வருஷம் பதிப்பித்த முதல் வால்யத்திற்கு இந்த 1933-ம் வருஷத்தில்தான் இருபது வருஷங்கட்குப் பிறகு இரண்டாம் பதிப்பு மூன்று ரூபாய் விலையில் வெளிவந்துள்ளது. நம்மைப்போன்றும் எத்துணை ஆசிரியர்கள் இவ்விதம் மறுபதிப்புக்குக் காலதாமதமாய்த் தவிக்கின்றனரோ? ஆகவே, தமிழ்ச் செல்வர்கள் தமிழாசிரியர்கள் வெளியிடும் நூல்களை அந்தந்த காலத்திலேயே பெற்றுப் பத்திரப்படுத்திக் கொள்வதே உத்தமமாகும். அது அவர்களுக்குக் குடும்பப் பொக்கிஷமாவதுடன், தமிழ் நூலாசிரியர்களை ஆதரித்துக் காத்திட்ட மஹா புண்ணிய கைங்கரியமாகவும் இருக்கும். இதை நமது அன்பர்கள் மனதிற்கொள்ள வேண்டுகிறோம். குடும்ப சொத்துகளும், வீடு வயல் தோட்டங்களும், மற்றும் ஆபரணங்களும் ஒரு வீட்டில் லக்ஷ்மீதேவி வாஸமாய் விளங்குவதற்கு அறிகுறியாகும். அவ்விதமே, ஒவ்வொரு வீட்டிலும் புஸ்தகங்கள் நிறைந்துள்ள பீரோவ்களும் பெட்டிகளு மிருப்பதானது சரஸ்வதிதேவி வாஸம்செய்து வருவதாய்க் காட்டும். புஸ்தகங்க ளில்லாத வீடு ஒரு வீடாகவே மாட்டாது. ஆதலின், ஒவ்வொரு வீட்டையும் ஒரு சிறு புஸ்தகசாலை யாக்குவதுடன், அந்தந்த ஊர்களிலும் ஒரு பொதுப் புஸ்தகசாலையையும் ஏற்படுத்தி அறிவைப் பெருக்க முயலவேண்டும். ஒரு ஊருக்குக் கோவில், குளங்கள் எவ்வளவு முக்கியமோ, அவ்விதமே பொதுப் புஸ்தகசாலைகளும், வீட்டுப் புஸ்தக சாலைகளும் அவசியமாக வேண்டற்பாலதாகு மென்பதை நாம் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறோம். இன்றே துணிவீர்களாக.

உலகில் நாகரீகம் பெற்ற மக்கள் கவலையுள்ளவர்களாகவும், சந்தோஷமில்லாதவர்களாகவும் இருக்கின்றனர் என்றும், நாகரிகமில்லாதவர்கள் கவலையற்றவர்களாகவும் சந்தோஷம் உள்ளவர்களாகவும் இருக்கின்றனரென்றும், தமது 29-தேசயாத்திராஸஞ்சாரத்தில் கண்டறிந்த உண்மை இதுவாமென்றும் புகழ்மிக்க ஆசிரியராகிய பர்னர்ஷா கூறினர்.

தாயாதிக் குப்பையின் நாற்றம்!

உன் தாயாருடன் கூடப் பிறந்த பெண்கள் உன் தாய்க்குப் பின்னும் உனக்கு உதவி செய்வோராக இருக்கலாம். ஆனால், உன் தந்தையுடன் கூடப் பிறந்த சகோதரர்களோ ஜென்ம ஜென்மத்திற்கும் உனக்குப் பகையாளிகளே தான். அவர்களுக்கே தாயாதிகளென்று உலகம் சொல்லும். உன் தந்தை தனது சகோதரனுக்கு அவன் பாகத்துக்கான வீட்டின்மேல் அடமானமாகக் கடன் கொடுத்துப் பத்திரம் எழுதி வாங்குகிறாரென்று வைத்துக் கொள்வோம். அதன் முடிவு என்ன? உன் தந்தை தற்செயலாய்க் காலம் சென்று விடுகிறார். உனக்கோ சிறுவயது. வருஷங்கள் பல சென்று விடுகின்றன. ஒருநாள் ஒரு அன்பர் உன்னிடம் வந்து, உன் தந்தையின் காலத்தில் அவர் தன் தம்பிக்குக் கொடுத்த பணம் திரும்பி வந்துவிட்டதா என்று பழய கதையைக் கிளறுகிறார். உடனே ஞாபகம் வந்து அடமான பத்திரத்தை எடுத்துப் பார்க்கும்போது 12-வருஷங்கள் தாண்டிப்போயிருப்பது தெரிகிறது. வக்கீலிடம் சென்று கேட்டால், பத்திரத்தில் வட்டி வரவு வைத்துக் கையெழுத்திட்டிருந்தால் பத்திரம் செல்லுபடியாகு மென்றும், அப்படியொன்றும் செய்யாமலே 12-வருஷங்களாய் விட்டதால் இந்த அடமான பத்திரம் இப்போது செல்லாதென்றும் அவர் சொல்லிவிடுகிறார். உடனே நீ உன் சிற்றப்பாவிடம் போய் அடமான பத்திரத்தில் வட்டி கண்டு கையெழுத்திடும்படிக் கேட்கிறாய். அவர் எவ்விதமாவது 12-வருஷங்கள் போய் பத்திரம் பயன்படாததாக வேண்டுமென்று காத்திருந்தவராயிற்றே! அவரா இப்போது பத்திரத்தில் கையெழுத்து போடுவார்? கண்டபடி உன்னை வைது நாசமாய்ப் போ என்று சபித்துக் கையெழுத்திட மறுத்து விடுகிறார். கடைசியில் நீ ஏமாறவேண்டியதே. எவ்வளவு தந்திரமாக நீ வஞ்சிக்கப்பட்டா யென்று உனக்கு இப்போதுதான் தெரிகிறது. தெரிந்து என் செய்ய? நினைக்க நினைக்கப் பெருமூச்சே!

ஃ

உன் தகப்பனார் இறக்கும்போது உனக்குச் சிறுவயதென்றும், நீ வெகு தூரத்தில் உன் தமக்கையின் வீட்டில் இருப்பதாகவும் வைத்துக் கொள். உன் தகப்பனாரின் பேருக்குள்ள நிலங்களை யெல்லாம் உன் சிற்றப்பா மேல் பார்த்துக் கவனித்து வருவதாக உனக்குக் காண்பித்துக் கொள்கிறார். அதையும் நீ நம்பி விடுகிறாய். நிலத்தில் விளைந்ததை யெல்லாம் உன் சிற்றப்பா விற்றுத் தன் வயிற்றில் கொட்டிக்கொண்டு விடுகிறார். உன் கண்ணிலே ஒருபிடி நெல்

பிறர் தன்னைச் செய்யத்தூண்டும் ஒரு தொழிலோ, யோசனையோ அந்தப்படி செய்வது தனக்குக் கஷ்டமாகப் படுகிறது. தானே செய்யமுயல்வதில் எவ்வளவு கஷ்டங்கள் எதிர்ப்பட்டாலும் அதை ஒரு பொருட்டாக நினைப்பதில்லை.

லேயோ, ஒரு காசையோ காட்டுவ தில்லே. நிலவரிமட்டும் நீ செலுத்திய படி யிருக்கிறுய். பிறகு சில வரு ஷங்கள் பொறுத்து நிலத்தை உன் னிடம் ஒப்புவிக்கும்படிக் கேட்கிறுய். உன் சிற்றப்பாவுக்கு வயிறு எரிகி றது! உன்னேக் கண்டபடி பேசி உனக்கேது நிலம் என்று விடுகிருர். ஆனல், பத்திரங்கள் உன் பேருக்கே யிருப்பதால், நீ மீறி நின்று உன் பேருக்குக் குத்தகைக்கு விட்டு குத்த கைப் பத்திரங்கள் எழுதி வாங்கி விடுகிறுய். அதைக்கண்டு உன் சிற் றப்பா குதிக்கிற குதிப்புக்குக் கணக்கே கிடையாது!

ஃ

உனக்குப் பிதிரார்ஜித சொத் தாக ஒரு வீடிருக்கிறதென்று வைத் துக்கொள். உன் தாயாதி ஒருவன் தன் வீடு ஏலத்தில் போய்விட்ட தென்றும். உன் வீட்டில் சிலநாள் தங்கியிருக்க அனுமதி தரும்படியும் தூரத்திலிருக்கிற உன்னே வேண்டிக் கொள்ள. நீயும் ஐயோ பாவம் என்று சம்மதிக்கிறுய். இதன் முடிவு என்ன? பல வருஷங்களாகியும் உன் தாயாதி வீட்டைக் காலிசெய்வது மில்லே; வாடகை தருவதுமில்லே. பிறகு நீ அவனிடம்போய் வீட்டைக் காலிசெய்யும்படி வற்புறுத்த, அந்த தாயாதியோ உனக்கேது வீடு என்று உன்னே அடித்துக்கொல்ல வழி தேடி விடுகிருன். அதன் பிறகு நீ கோர்ட்டில் வழக்கு தொடுத்தே உன் தாயாதியை வீட்டை விட்டு வெளிக் கிளப்பும்படியாகிறது. கொஞ்சம் உன் வீட்டில் தங்குவதற்கு உன் தாயா திக்கு இடம் கொடுத்ததில் கதை இவ்வளவு விபரீதத்திற்கு எட்டிவிடு கிறது! இன்னும் தாயாதிக் குப்பை யின் கசுமால நாற்றங்கள் எவ்வ ளவோ உண்டு. ஆகவே, உன் தாயாதி வர்க்கத்தாரை நீ நம்பாதே. நம்பி மோசம் போகாதே. ஜாக்கிரதை!

வேண்டாதவரின் வருகை.

ராமன் தனது நண்பருக்குப் பலத்த விருந்துகள் செய்து உபசரிக்கக் கருதி ஏராளச்செலவிட்டு யாவும் தயார் செய்ய, அந்த நண்பர் அன்று வராமல், அதற்குப் பதிலாகப் பலகாலும் ராமனேக் கேவலமாய்ப் பேசி மிதித்து நடத்திய வர்கள் வந்து அந்த விருந்துப் புசிப்பை யுண்டு செல்லும் போது ராமனின் மனம் படும்பாடு சொல்லுந்தரமல்ல. பிற ருக்கு விருந்திடுவதாக இல்லாமல், தமக்கென்றே வாய்க்கு ருசியாக விசேஷ பதார்த்தங்கள் செய்து சமைக்கும்போது அந்த வேளேக்கு வெட்டி ஜன்மங்கள் வீட்டுக்குள் வந்து கூடிக்கொண்டு விடுவதுமுண்டு. வந்தவர்கள் சந்தோஷமாய்ப் புசிக்க வேண்டியதுதான். அன்போடு உபசரிக்கவும் தயார் தான். ஆனல் சாப்பிட்ட விஸ்வாசம்காணேமே!



நமது கதாப் பிரஸங்கி.

சுந்தரி

ஒற்றுமையுள்ள ஒரு குடும்பம்.

(ஓர் சிறிய நாடகம்)

(மீனாக்ஷி அம்மாளும் பார்வதி அம்மாளும் சம்பாஷணை.)

பார்வதி:—என்னடி, மீனா! உங்காத்திலே சாப்பாடு ஆயிட்டுதா?

மீனாக்ஷி:—வா! உட்காரு, சாப்பாடு ஆயிட்டுது.

பார்வதி:—என்ன வீட்டிலே சத்தத்தையே காணோமே! உன் நாட்டுப்பெண் சுந்தரி எங்கே?

மீனாக்ஷி:—யாரோ சினேகிதி வீட்டிற்குப்போய், பாட்டுக் கச்சேரியாம், அங்கேயும் போய்விட்டு சாயந்தரம் வருவதாகச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறாள்.

பார்வதி:—சரிதான்! குடித்தனம் பண்றவளாச்சுதே! பாட்டுக் கச்சேரியாவது; சினேகிதி வீட்டுக்குப் போவதாவது. அதென்னமோ அம்மா எனக்கு இதெல்லாம் பிடிக்காது.

மீனாக்ஷி:—அதனாலென்ன? இந்தக் காலத்துப் பொண்களையெல்லாம் நம்பமாதிரி இருக்கச் சொன்னா! அவா யிருப்பாளா? செறுவயசு. அவா இஷ்டப் பிரகாரம்தான் போய் வரட்டுமே. வீட்டிலே யிருந்துக்கிண்டு என்ன செய்யக் கிடக்கு?

பார்வதி:—உன் பேரன் மணி எங்கே? அவனை உன் நாட்டுப்பெண் சரியா கவனிக்கிறாளா? என்ன இருந்தாலும் உன் மகனுக்கு அவள் இரண்டாம் தாரந்தானே? மணிக்கு அந்த அழகு சிங்காரி மாற்றாந்தாய் தானே. பெற்ற தாயைப்போல் கவனிப்பாளா! அவன் செய்த பாவம் அது; தாய் செத்தாள், மாற்றாந்தாய் வந்தாள்.

மீனாக்ஷி:—சிவ சிவா! நாராயணா!! இந்த மாதிரி பேசாதே அம்மா. என் நாட்டுப்பெண் சுந்தரி ரொம்ப நல்லவளாக்கும். தன் பிள்ளை முத்துவுக்குச் சமதையாக மணியையும் பிரியமாய் நடத்துகிறாள். என்னிடம் மரியாதையாக இருக்கிறாள். என் பிள்ளையிடமும் பதிபக்தியாய் நடக்கிறாள். நான் செய்த புண்யம் எனக்கு சாதுவான நாட்டுப்பெண் கிடைத்திருக்கிறாள். அவள் என்றைக்கும் க்ஷேமமாய் வாழவேணும்.

பார்வதி:—(மனதிற்குள்) இங்கே குடும்பம் பிரிக்கிற என் சூழ்ச்சி பலிக்கவில்லையே. (உரத்தகுரலில்) சரிதான். உன் பெண் எப்போ வரப்போகிறாள்?

ஒருவரை இன்னொருவர் மிகத் தெரிந்ததுபோல் பேசிப் பேசி நெருங்குகிறார். அந்த ஒருவருக்கோ அவர் யாரென்றே தெரிகிறதில்லை. தெரியவில்லையென்று கூறினும் இலகுவில் விடுவதில்லை.

மீனாக்ஷி;—அவளை வரச்சொல்லி ஓயாமல் சுந்தரி கடிதம் எழுதிக் கிண்டே யிருக்கா. ஒருவேளை ஆனி தரிசனத்திக்கு வரலாம். அவளைக் கண்டாலே என் நாட்டுப் பெண்ணுக் குக் கொண்டாட்டம்தான். அவாள் இரண்டுபேரும் ரொம்ப நேசம்.

பார்வதி:—ஸரி, போய் வருகி றேன்.

[பிரித்துவைத்து நடுவிலே லாபம் தேட முடியவில்லையென்று வாடிய முகத்துடனே போகிறாள்.]

II

(கோபாலன் சுந்தரி இருவரும் சம்பாஷணை.)

சுந்தரி:—இன்றைக்கு நான் ஒரு பிசகு செய்துவிட்டேன்.

கோபாலன்:—என்ன செய்தாய்?

சுந்தரி:—மணியைக் கொஞ்சம் அடித்துவிட்டேன்.

கோபாலன்:—எதற்காக?

சுந்தரி:-அடுத்தாத்து குழந்தைகள் பந்து விளையாடும்போது, பந்து நம்ம முத்தத்தில் விழுந்துவிட்டது. மணி சிறுபிள்ளைத்தனமாக அதை எடுத்துவைத்துக்கொண்டு அவர்களி டம் தராமல் சண்டைபோட்டுக் கொண்டிருந்தான். நான் போய் பந்தை அவாளிடம் கொடுத்துவிட்டு, பொய் சொன்னதற்காகவும், சண்டை போட்டதற்காகவும் மணியை ஒரு அடி அடித்துவிட்டேன். இப்போ என் அடித்தோமென்று பரிதாபமா யிருக்கு. அவன் தாயில்லாப் பிள்ளை யாச்சுதே, அவனிடமா என் கோப மூஞ்சியைக் காட்டுகிறது. போதும் என் மனசு இன்றைக்குப் பட்டபாடு.

கோபாலன்:—சரி, இதிலே உன் பிசகென்ன இருக்கிறது? அவன் செய்தது கண்டிக்கத் தகுந்த குற்றம் தான். நீ அடித்துப் புத்திசொல்ல வும் வேண்டியதுதான். இதெல்லாம் கொடுமையாகுமா? வருத்தப்படாதே.

சுந்தரி:—என்ன ஆனாலும் நான் அடித்தது கூடாதுதான். அடிபட்ட தற்கு வெகுமதியாக அவனுக்கு ஒரு சின்ன ஸைகிள் ஒன்று வாங்கித் தர ணும். அப்போதுதான் எனக்கு மனத்திருப்தியாகும். நல்ல சட்டை பட்டுகளும் வாங்கிக் கொடுக்கணும். ஒரு பந்தும் வாங்கித் தந்துவிட்டால் இனி தப்பு செய்யமாட்டான்.

கோபாலன்:—ஏழு வயசுக்காரனு க்கு இப்பவே ஸைகில் எதுக்கு? இவ னுக்கு வாங்கினால் முத்துவுக்கும் வேண்டாமா?

சுந்தரி:—முத்துவுக்கு மூணுவயசு தானே ஆகிறது. அவனுக்கு ஒண் ணும் வேண்டாம். அதோ வந்துட் டானே மணியும்.

ஃ

(மணி உள்ளே வருகிறான்)

மணி:—அம்மா! எனக்கு தரிசனத் துக்கு என்ன வாங்கித் தர்ரே. நல்ல பட்டு சரிகை வேஷ்டி எல்லாம் வாங் கித் தர்ரையா?

கோபாலன்:—மணீ! அம்மாவண் டை போகாதேடா. அவதான் உன்னை அடிக்கிறாளே. என் கிட்டேவா, உனக்கு எல்லாம் நான் வாங்கித் தர்ரேன்.

மணி:—வேண்டாம். எனக்கு அம் மாதான் வேணும். அடிச்சாலும் நான் கேட்டதை எல்லாம் வாங்கித்

பகைத்த இருவரும் ஒன்று கூடிவிடும்போது, பகைக்குத் தூண்டிவிட்ட வர்கள் தூர ஒதுங்கிப் போய்விடுகிறார்கள்.

தர்ராளே எனக்குத்தான். அம்மா! நான் பெரியவனுப் போனு உனக்குக் கூட எல்லாம் வாங்கித் தர்ரேன்.

கோபாலன்:—(தனக்குள்) இவனுக்கு சுந்தரியிடத்தில் தாய்ப்பற்றுதல் இருக்கிறது. அவளும் தன் பிள்ளை முத்துவைக் காட்டிலும் இவனிடம் பிரியமாய் இருக்கிறுள். இப்படிப்பட்ட உத்தம மனைவி எனக்கு வாய்த்தது என் பாக்கியமே.

சுந்தரி:—ஸரி, எழுந்திரு. முத்துவையும் கூப்பிடு. உங்கள் இரண்டு பேருக்கும் குளிப்பாட்டி சாதம் போடுகிறேன், வா ! மணி.

III

(சுந்தரியும் பார்வதி அம்மாளும் சம்பாஷணை)

பார்வதி:—உன் மாமியார் எங்கே? கொஞ்சம் வேலையா வந்திருக்கேன்.

சுந்தரி:—ஜானகி அம்மாளாத்துக்குப் போயிருக்கிறுர்கள். உட்காருங்கள். இதோ வந்து விடுவார்கள்.

பார்வதி:—உங்க அப்பா அம்மா சௌக்கியமா இருக்கிறுர்களா? கடிதாசி வர்ரதா? நீ மறுபடியும் பொறந்தாத்துக்கு எப்போ போகப் போறே?

சுந்தரி:—நோம்புக்கு வரச்சொல்லி எழுதி யிருக்கா. ஸௌகரியப் பட்டால் 'போவோம்.'

பா:—யாராரு போப்போறு? கோபாலன் கூடவர்ரானு?

சுந்:—அவருக்கு லீவு கிடைக்காதாம். நான், மனி, முத்து மூணுபேரும் போப்போகிறோம்.

பா:—மணி எதுக்கு? அவன் உன் பிள்ளையா என்னடி? நாளைக்கு உன் பிள்ளைக்குச் சேரவேண்டிய சொத்திலே பாகத்துக்கு நிற்பான்.

சுந்:—எனக்கு முத்து எப்படியோ அப்படியேதான் மணியும். ஒன்றும் வித்தியாசமில்லை. எதிலும் இரண்டு பேருக்கும் பங்குதான். எனக்கு அவ்விருவரும் தின்று மீந்தது கிடைத்தால் போதும்.

பா:—உன் மாமியாருக்கு மட்டும் மணிமேல்தான் அதிக ஆசை. அதென்னடீ அம்மா! அவளுக்கு உன் பிள்ளை எப்படியோ அப்படிதானே அவனும். இந்த வஞ்சனை எதுக்கு? நீ உன் சங்கதி தெரியாமே மோசம் போகிறுயே?

சுந்:—இருக்கலாம் தான். அவனுக்குத் தாயார் இல்லாததால் அப்படியிருப்பார்களே யல்லாமல், என் மாமியாருக்கு எங்கள் எல்லார் பேரிலும் ஒரேவிதமான பிரியம் தான். அவங்கதான் என் குலதெய்வம், இன்னும் நூறு வருஷம் இருக்கணும்.

பா:—(மனதிற்குள்) அம்மம்மா! இவர்களுக்குள் கலகமூட்ட என்னல் முடியாது. நான் வந்த காரியம் பலிக்கவில்லை. ஏதாவது பறிக்கப் பார்த்தேன். அதுவும் முடியாது. (உரத்த குரலில்) அம்மா நான் போயிட்டு வாரேன். உன் மாமியார் வந்தால் நான் வந்துட்டுப் போனதாகச் சொல்லு.

சுந்:—நல்லது, அப்படியே செய்கிறேனம்மா.

வீட்டிலிருப்பவர்களுக்கு வெளியூருக்குச் சென்றவன் இன்னும் பணம் அனுப்பவில்லையே என்று விசாரம்! வெளியூரில் தங்கியிருப்பவனுக்கோ தான் வந்த காரியங்களின்மீது விசாரம் ! அவன் போகும் இடங்களிலோ ஆசாமியே நேரில் வந்துவிட்டானே என்று விசாரம்.

IV

(சுந்தரி ஜுரந்துடன் கட்டிலில் கிடக்கிறாள். மீனாக்ஷி அம்மாள், கோபாலன், டாக்டர், மணி, முத்து,

கோபாலன்:—நேற்றையதைவிட இன்றைக்குத் தேவலையா?

டாக்டர்:—அப்படியேதான் இருக்கிறது. அனேகமாய் நாளைக்கு ஜுரம் நின்றுவிடும்.

மீனாக்ஷி:—டாக்டர் ஐயா! என் சுந்தரியை எப்படியாவது பிழைப்பித்து விடுங்கள். உடம்பு குணமாகி வர்ரதா? எல்லாம் உங்கள் பொறுப்பு தான்.

டாக்டர்:— பாட்டீ, நீங்கள் ஒன்றும் பயப்படவேண்டாம். நாளைக்குப் பாருங்களேன் முழுதும் குணமாகி விடும். அதுவரையில் இந்த மருந்தையே கொடுங்கள்.

மணி;—எங்கம்மாவுக்கு நான் மருந்து தர்ரேன் சார்.

முத்து:—நான் டம்ளரைக் கழுவிக் கொண்டு வர்ரேன்.

மணி:—(கட்டிலருகில் சென்று) அம்மா உன் காலைப் பிடிக்கட்டுமோ?

சுந்தரி:—வேண்டாம்டா அப்பா.

மீனாக்ஷி:—டாக்டர் ஐயா! என் நாட்டுப்பெண் படுத்துவிட்டதும் வீடு எப்படி கிடக்கிறது பாருங்கள். ஏதாவது களை யிருக்கிறதா? நல்ல மருந்தாகக்கொடுத்து சீக்கிரத்தில் சொஸ்தம் செய்ய மாட்டீர்களா.? (கண்ணீர் விடுகிறாள்.)

டாக்டர்:—நீங்கள் வீணாக அதைரியப்படாதீர்கள் பாட்டீ! நான் போய் வருகிறேன். இந்த மருந்தையே கொடுங்கள். நாளை மறுபடியும் வந்துபார்க்கிறேன். (செல்கிறார்)

மீனாக்ஷி:—பகவானே! கருணாநிதியே! என் நாட்டுப் பெண்ணிற்கு, சீக்கிரத்தில் ஜுரம் வடிந்து உடம்பு குணமானால், என் பிள்ளையையும் நாட்டுப் பெண்ணையும் உன் ஸன்னதிக்கு அனுப்பி வைக்கிறேன். என் முறையைக் கேட்கவேணும்.

V

கொஞ்ச நாளில் சுந்தரி குணம் அடைகிறாள். மீனாக்ஷி அம்மாளும் தன் பிள்ளையையும் நாட்டுப் பெண்ணையும் ஸ்வாமிமலைக்கு அனுப்பி வைக்கிறாள். அவர்கள் அங்குசென்று ஸ்வாமி தரிசனம், அர்ச்சனை, தான தருமம் முதலியவை செய்து வீட்டிற்கு வந்து சேருகிறார்கள். "அம்மா! குழந்தாய்! உன்னுடைய இளகிய மனதும் நற்குணமும் உன்னைக் காப்பாற்றட்டும்; நான் செய்த புண்யத்தால் நீங்களெல்லாம் சௌக்கியமாயிருக்கிறதைப் பார்க்கிறேன். ஸ்வாமி உன்னைக் காப்பாராக. ஸகல ஸௌபாக்ய ஸம்பத்துகளும் உனக்கு உண்டாவதாக" என்று சொல்லி ஆசீர்வதிக்கிறாள். மீனாக்ஷி அம்மாள் ஆ! எவ்வளவு ஒற்றுமையான குடும்பம்! இதைவிட வேறு பாக்கியமும் வேண்டுமோ? இங்கே பிரித்து வைக்க மூன்றுவது மனுஷி நெருங்க முடியுமா?

தருகாமாக்ஷி அம்மாள்.

பழங்காலத்துப் பத்திராசிரியர்களும், நூலாசிரியர்களும் வெகுபேர் மறைந்துவிட்டனர். இப்பொழுது புதுப்பத்திரிகைகளும் புதுநூல்களும், புதிய ஆசிரியர்களும் புது தினுசில் தோன்றி யிருக்கின்றனர். நாடகக் கம்பெனிகளிலும் இவ்வாறே!

மார்பக உவமை

பெண்மணியின் இருதனங்களையும் உவமானமாகக் குறிப்பிட்டுப் பல விஷயங்கள் சொல்லப்பட்டுள்ளன. எத்துணையோ வர்ணனைகளும் செய்யப்பட்டுள்ளன. ஒருவன் தனது முப்பதாவது ஆண்டுக்குள் கல்வியோ, செல்வமோ, எதையோ ஒன்றை அடையப்பெறுனாயின், அந்த முப்பது வயதுக்குள் அவன் பெற்றவரையுமே தான் அவனது முடிவுமிருக்கு மென்பதற்கு "முலையாவே யாதுமாம் முப்பு" என்று ஸ்திரீயின் தனங்களை உதாரணமாகக் குறிப்பிட்டுள்ளார். மார்பகத்தின் யௌவன விலாஸ அளவினைப் பொருத்து ஒரு நங்கையினது யுவதித் தன்மையின் அளவு மிருக்கும் என்றனர். ஒரு பெண்ணுக்குத் தனங்களும் கேசங்களுமே அழகு தருவனவென்றும், அவ்விரண்டும் பெற்றவளே 'பெண்' என்னும் சிறப்புக்கு உரியவளாவாள் என்றும் கருத்தமைத்து வடமொழியில் ஒரு பெரியார் "ஸ்தன கேசவதீ ஸ்திரீ ஸ்யாத்" என்று கூறியிருக்கின்றார். இதைத் தழுவித் தமிழ் மொழியிலும்,

"கல்லாதான் சொற்
காமுறுதன் முலையிரண்டு
மில்லாதாள் பெண்
காமுற்றற்று"

என்று ஸ்திரீ தனங்களை உவமையாகக் குறிப்பிட்டுள்ளார். கல்லாதவனின் சொற்களிலே விருப்பங்கொள்ளுதலானது தனங்களிரண்டு மில்லாத பெண்ணொருத்தியின்மேற் காமுற்றதற்கு ஒப்பாகும் என்பது மேற்குறித்த செய்யுளின் கருத்து. தனங்கள் இரண்டுமட்டுமே ஒரு பெண்ணின் அழகைப் பிரகாசமாய்ப் புலப்படுத்தி, அவளது சரீர உறுப்புகளிலெல்லாம் மேன்மைப் பட்டதாய் விளங்குவதுபோல், ஒருவன் பெற்ற கல்விச் செல்வமே மற்ற எல்லாச் செல்வத்திலும் உயர்ந்ததாய் மலைமீதிட்ட விளக்குபோன்றும் இலங்குவதாகும். வியாகரண மகோபாத்யாயவை. இராமசாமிசர்மா அவர்கள் ஸ்திரீயின் தனங்களை உதாரணமாகக் குறிப்பிட்டுச் செய்துள்ள வியாக்கியானம் மிக்க ரஸமா யிருத்தலின் அதன் சாரத்தை இங்கு தருகிறோம்.

ஃ

"கலைமாதின் இருதனங்களாகக் கருதப்படுவன இசையும் இலக்கியமுமாம். இசை என்பது தன் இன்னோசைகொண்டு மன்னுயிர்களின் மனத்தை உருக்குவதாகும். இலக்கியம் என்பது உள்ளுந்தோறும் உணர்வுடையார் உள்ளத்தில் உவகை முதலாகிய மெய்ப்பாடுகளை ஒன்றன்பின் ஒன்றாய் உணர்த்தி நிற்பதாகும்"

ஃ

"ஆடவரின் மனத்தைக் காந்தம் போன்று விரைவில் வலித்திழுக்கும் ஓர் மின்சார சக்தியானது மெல்லியல் மடந்தையரின் மேனியில் வளருகின்ற இளமை பொருந்திய

தங்களுக்கு அந்த மனிதனால் இப்போது எவ்விதகாரியமும் நடக்க வேண்டியதில்லை யென்று தெரிந்ததும், அந்த மனிதனே வலியவந்தாலுங் கூடக் கவனிப்பதில்லை.

தனங்களுக்கன்றி வேறு எவ்வுறுப்புக்கு உண்டு? வேற்கண்ணும், ஒண்ணுதலும், மொய்குழலும், பணிமொழியும், வேய்த்தோளும் இவை போன்ற மற்றவைகளும் துணைக்கருவியாய் நின்று ஸ்திரீயின் தனங்களுக்கு உதவி செய்வனபோன்று விளங்குவனவேயாகும் இதைப்போலவே, இசை, இலக்கியம் என்ற இரு கலைகளும் மக்களின் உள்ளத்தூடே உருவிப்பாயும் ஓர் காந்த சக்தி படைத்தவை யென்றும், ஏனைய கலைகள் அனைத்தும், இவ்விரு கலைகளுக்கும் துணைபோகுவன என்றும் மற்றொரு சிறப்பு பெற்றுள்ளதாகவும் பேசலாம். மெல்லியல் மடந்தையரின் வளரிளந் தனமோ, உருவும், திருவும், பருவமும், குலனும், குணமும், அன்பும் ஆதியவற்றால் தன்னோடு ஒப்புமைகொண்ட ஓர் தலைவனுக்கே பயன்பட்டு நிற்கும். இந்த உதாரண ஒற்றுமை போலவே, இசை, இலக்கியம் என்ற இருகலைகளும் உணர்வுடைய மக்களுக்கே பயன் சுரக்கும் என்று வேறு ஓர் சிறப்பான உவமானமாகவும் கூறலாம். கண்ணானது கண்ணுடையவனுக்கே பயன்படும். பெண்மணியின் தனங்களோ தனக்கென வாழாது பிறர்க்கே பயன்படுவதான உரிமைபூண்டு விளங்குவதாகும். ஒரு பெண்மணியின் ஸ்தனங்கள் பிறருக்குப் பயன்படாவிடில் அவை தம்மளவில் தாமே பிரகாசித்துப் பெருமை பெறுதல் என்பது ஒருபோதுமில்லை."

ஃ

பிறருக்கு அதாவது தன் நாயகனுக்கும், தன் குழந்தைக்கும் பயன்படாதபடி ஒரு பெண் ஸ்தனங்களைப் பெறுவதாயின், அதனாற் பிரயோஜனமில்லாததுபோலவே, தான் கற்ற இசை, இலக்கியம் ஆதியவற்றை உலகுக்கு உணர்த்த உபயோகமாக்காவிடில் அக்கலைகளால் சிறப்படைதலும் கூடாமையாகுமென்ற கருத்தும் இதனில் விளங்குதல் காண்க.

உதவிக்காகமட்டும் வந்தனம்.

அயோக்கியர்களும், ஸ்திரீ சிந்தகர்களும் நமக்கு உதவிகள் புரியும் சமயங்களில், அவர்கள் செய்த உதவிக்கு நன்றி கூறுகிறோமேயன்றி அவர்களுடன் பழக நமது மனம் இடம் தருவதில்லை. சிலருக்கு மிக்க மரியாதையுடன் உபசார விருந்துகள் நடத்துவதுண்டுதான். ஆயினும், அவர்களை வீட்டில் இருக்கவைத்து வெளியே செல்ல சிலர் விரும்புவதில்லை. ஏனெனில், அவர்களின் ஒழுக்கக் குறைவும், இதற்கு முந்திய அவர்களின் சங்கதிகளும் அவர்களைச் சந்தேகிக்கச் செய்து விடுகின்றன. ஆகவே, அவர்கள் செய்கிற உதவிக்காகமட்டும் வந்தனமளித்து மரியாதையாகவே வெளியில் அனுப்பி அவ்வளவில் விலகி விடுகிறோம்.

குழந்தைகளுடன் ஒரு மணி நேரம்.

(ச—ஸ்ரீ)



எங்கள் வீட்டில் குழந்தைகளுக்குப் பஞ்சம்கிடையாது. ஈசுவரன் ஏதோ தன் கிருபையைக் காண்பித்திருக்கிறான். நான் எப்போதும் குழந்தைகளுடன் காலத்தைக் கடத்துவேன். ஆகையால், குழந்தைகளுக்கும் என்னிடத்தில் அபார பிரீதி. எப்போதும் குழந்தைகளுக்கு அவர்களின் கற்பலகையில் படங்கள் எழுதி அவர்களை அது என்ன, இது என்ன என்று சொல்லச் செய்வதில் எனக்குக் கொஞ்சம் பொழுதுபோகும்.

ஒருநாள் எனக்குக் காலையிலேயே தூக்கம் அதிகம் வந்தது. குழந்தைகள் என் அருகே விளையாடிக்கொண்டிருந்தனர். அவர்களைப் பக்கத்தில் கூப்பிட்டேன். உடனே அவர்களில் ஒருவன் கற்பலகையையும், ஒரு அங்குல நீளமுள்ள பலபத்தையும் எடுத்து வந்து கொடுத்து, படங்கள் வரையும்படிக் கேட்டுக்கொண்டான். முதலில் என் தங்கை லக்ஷ்மி ஒரு குரங்கு போடச்சொன்னாள். அதற்குள் என் தம்பி ஹரிராம் பிசாசு போடச் சொன்னான். நான் அப்போது குரங்கு முகம் மாத்திரம் போட்டிருந்தேன். ஹரி ராமுவிற்கு கோபம் பிறந்துவிட்டது. "இது பிசாசு மாதிரியேயில்லை; ஏதோ யானை போடுகிறாய்" என்றான். எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. நான் போட்டுக்கொண்டிருந்ததோ குரங்கு. தம்பி ஹரிராம் சொல்வதோ நான் போடுவது யானையென்று. திரும்பவும் நான் போட்ட படத்தையே பார்த்தேன். அது யானையாகவாவது, குரங்காகவாவது, பிசாசாகவாவது தோன்றவில்லை. அழித்துவிட்டு குரங்குபோடப் போனேன். தம்பி ஹரிராம் பிசாசை ஞாபகப்படுத்தினான். இருவரையும் சமாதானப்படுத்த குரங்கின் உடம்பும் பிசாசின் தலையும் போட்டேன். இருவருக்கும் அவரவர்களுக்குத் தேவையானதைக் காட்டினேன். குழந்தை கிட்டு இவ்வளவையும் கவனித்துக்கொண்டிருந்தவன் அடுத்த படம் தன்னையே போடச் சொன்னான். அவன்மாதிரிப் போட எனக்கு வருகிறதா! ஏதோ மனித உருவம்போட்டேன். தனக்குக் கோடிட்ட சொக்காய் போட்டதாகப் போட வேண்டுமென்று லக்ஷ்மி ஒரு மூலையிலிருந்து கூவினாள். நான் யாருக்குத்தான் நல்லவனாக நடப்பது? பார்த்தேன் இவர்கள் தொந்தரவை; பொறுக்க முடியவில்லை. முதலில் "எனக்குத் தூக்கம் வருகிறது போங்கள்" என்று சொல்லிப் பார்த்தேன். போகும்வழியாகக் காணோம். தொந்தரவுதான் அதிகமாயிற்று. "நான் செத்துப்போகிறேன்" என்று கண்களை மூடி வாயைப் பிளந்துகொண்டு பிணம்மாதிரிக் கிடந்தேன். அடுத்த நிமிஷத்தில் பளீர் என்று ஒரு அடி என் கன்னத்தில் விழுந்தது. அதே சமயம் மற்றொருவன் ஒரு டம்ளரில் கொதிக்கும் நீரைக் கொண்டு வந்து என் தலையில் ஊற்றி ஸ்நானம் செய்வித்து விட்டான். நான் "செத்தது" போதுமென்று எழுந்து ஓடி விட்டேன்.

காரியமென்பது கட்டுவதே.

—இடிப்பதல்ல—

ஒன்றுபட்ட இடத்தில் சுகமும், வேறுபட்ட இடத்தில் துக்கமும் ஸம்பவிக்கிறது. ஐக்கியத் தன்மைக்குக் காரணமாயிருப்பது அன்புதான். அன்புள்ள இடத்தில் ஒற்றுமையும், அது இல்லாத இடத்தில் வேற்றுமை வித்தியாஸமும் உண்டாகி வருவது பிரத்தியக்ஷ அனுபவமாயிருக்கிறது. உலகுய்ய அவதரித்த மஹா புருஷர்களெல்லோரும் இதை வற்புறுத்திக் கூறியிருக்கிறார்கள். இயேசுநாதர் "அன்பே தெய்வம்; அன்பு பாராட்டி அன்பில் வளர்ந்து அன்புருவாகிறவன் தெய்வப் புதல்வன், அல்லது கிறிஸ்து ஆகிறான்" என்று போதித்தார். போதித்ததன்றி காரியத்திலும் அப்படியே நடந்தும் காட்டினார்.

ஃ

பரிசுத்தமான அன்பு ஒன்று மட்டுமே பூர்ணமாயிருந்தால், ஆகாத காரியம் எதுவுமில்லை. தெய்வத்தினிடத்துச் செலுத்தும் அன்பு பக்தியாகும் அந்தப் பக்திவைராக்கியத்தாலுண்டாகும் உறுதிக்குச் சிரத்தை என்றுபெயர். பக்தி சிரத்தையுண்டானால், எதிரிலுள்ள மலையைப் பார்த்து,"நீ பெயர்ந்து போய் ஸமுத்திரத்தில் விழு" என்று சொன்னாலும் அது விழும் என்று கிறிஸ்து நாதர் தமது சிஷ்யர்களுக்குப் போதித்தார். மகம்மது நபியும் அப்படியே சொல்லியிருக்கிறார் புத்தரும் இவ்விதமே மொழிந்துள்ளார். "பகையைப் பகையால் வெல்லலரிது; ஆனால், பகையைப் பிரியத்தால் வெல்லல் எளிது" என்று அவர் போதித்திருக்கிறார். வேதாந்தத்திலும் இந்த உண்மையே மிக நன்றாக உறைக்கும்படி பலவாறாக எடுத்துச் சொல்லப்பட் டிருக்கிறது. கபடமான ஹிருதயமும், சுயநலமும், மோகமுமான நடத்தையுமுள்ள மனிதர்களைக் கோபத்தால் வெல்வதைவிட அன்பால் வெற்றியடையப் பார்ப்பதே சாமர்த்தியமென்று ஒரு பிரபல கவி கூறியிருக்கிறார்.

ஃ

ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்ஸர் யார் வந்தாலும், அவர்களிருந்த நிலைமையிலிருந்து ஒன்றுபட உழைத்து முன்னுக்குவரும் வழியைச் சொன்னாரேயன்றி ஒன்றையாவது அழிக்க முயன்றாரில்லை. "நான் கட்டி முடித்துக் கடைத்தேறச் செய்யவந்தேனேயன்றி, எதையும் அழித்து நாசம்செய்ய வரவில்லை" என்று கிறிஸ்து நாதர் கூறியிருக்கிறார்.

ஃ

மனத்தின் அழுக்கைவிட தேகத்தின் அழுக்கும், ஆடையின் அழுக்குமே அதிகமாக வெளியில் கவனிக்கப்படுகிறது. ஒரு குடும்பத்தின் உள்நாற்றத்தையோ, ஒருவனுடைய உள்ளே அழுகிக்கிடக்கும் குணங்களையோ யார் கண்டார்கள்? வெளியிலுள்ள பெயருக்கே மதிப்பு.

ஸ்வாமி விவேகாநந்தர் பின் வருமாறு பேசியிருக்கிறார்:—"நமக்குள்ள வேற்றுமைகளை வகுத்தெடுக்க வந்தவ னல்லேன். ஒற்றுமையை எடுத்துரைக்க வந்தவனாவேன். நாம் எப்பொழுதும் சகோதரர்களாகவே இருக்கக்கடவோம். எதிர்த்து உடைத்துச் சிதைத்தலல்லாது கூட்டிக் கட்டியமைக்கற் பாலனவான சில விஷயங்களை எடுத்துரைக்க யத்தனம் செய்கின்றேன். குறை கூறிக் கண்டிக்கும் காலம் இஃதன்று. அது முன்னரே கழிந்துவிட்டது. நிறைத்துக்கட்டி நிறுத்தக் காலம் இஃதாகும். குணங் குறைகளை எடுத்துரைத்தல் உலகத்திற்குச் சில வேளை அவசியமேயாம். அஃது உட்புகுந்து உறுத்தத்தக்க கடமை பொருந்தியிருத்தல்தேவையாயிருப்பதுமுண்டு. ஆனால், அது கொஞ்ச காலத்திற்குத்தான் அப்படித் தேவையாயிருக்கும். நாளடைவில் அபிவிருத்திக்கும், அமைப்பதற்கும் வழிதேடுதல்தான் பிரயோஜனமுள்ளகாரியமாகுமேயன்றிக் குறை கூறுதலும், குறைத்துப் பேசுதலும் ஆகாவாம். காரியமென்பது கட்டுவதேயன்றி இடிப்பதன்று. எனவே, நாம் ஒன்றுபட்டிருப்பதற்காக நம்மாலானவரையும் அன்பின் வழியிலேயே முயன்று பார்க்கக்கடவோம். அதன்பின்னரும் கபடமனிதர்கள் பிரிக்கிறதாயின் அவர்களின் பிரியம்போல் செய்யட்டும். அதைப் பற்றிய கவலை நமக்கு வேண்டாம்.

தேவை.

நமது அமிர்த குணபோதினிப் பத்திரிகைகளை எல்லா ஊர்களிலும் விற்பனை செய்யவும், புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துக்கொடுப்பதற்கும், விளம்பரம் சேர்த்து கொடுப்பதற்கும், தக்க சாமர்த்தியம் வாய்ந்த ஏஜெண்டுகள் தேவை. முழு விவரத்துக்கு எமக்கு எழுதித் தெரிந்துக் கொள்ளலாம். நமது அமிர்த குணபோதினிக்கு ஏஜெண்டாகச் சேர்ந்து அதிக லாபம் அடைந்து திருப்திபெறுவீர்களாக.

மானேஜர்.

வெகு காலம் கழித்து வெளிநாட்டிலிருந்துத் தன்னூர் வந்தவர்களுக்கு எல்லா பந்துக்களும் உத்தமர்களாகவும் அன்புள்ளவர்களாகவுமே தோன்றுகிறார்கள். இது நீடித்திருப்பதற்கு அவர்கள் உடனே வெளியூர்களில் வாசம் செய்யதொடங்குவதே க்ஷேமம். இல்லையாகில் முன்பு புகழ்ந்தோர் இகழத் தொடங்கி விரோதிகளாகவும் ஆவர்.

சென்னை மியூஸியத்தில் எத்தனையோ விக்கிரகங்கள் மிக்க அழகுடன் விளங்குகின்றன. அவைகட்கு எவ்வித பூஜையும் இல்லை. அவ்விதமே சக்திவாய்ந்த புனிதர்களும் துரதிர்ஷ்டத்தால் ஒளியற்று இருளிற் கிடக்கின்றனர்.



1. எவ்வளவு நல்லவிதமாக நடந்துகொண்டாலும் திருப்தியுறாத முதலாளியை விட்டு விலகக் காலம் வராதாவென்று பெரும் ஏக்கத்துடன் காத்து நிற்கின்றான்-உழைத்து உழைத்துச் சோர்ந்த ஓர் உத்தம வேலையாள்.

2. உன்னைக் கண்டவுடன் முக மலர்ச்சியுடன் உபசாரங் கூறி வாவென்ழைக்கும் அந்த நண்பரே இன்று உனது பகைவரின் துர்ப்போதனையினால் கண்டும் காணாதது போல் பராமுகமாய் இருக்கின்றாரென்பது தெரிந்தும் உனக்கு அவர் வீட்டில் வேலை என்ன? அப்போது சாடையாகத் திரும்பிவந்து விடுவதே மேல்.

3. எவ்வளவு மதிக்கப்பெற்ற சிறந்த அறிஞனே எனினும், அவன் இரகசியத்தில் நடத்திவந்த துர்ச்செய்கைகளைச் சனங்கள் சிறிது அறிவார்களாகில், அந்த நிமிஷமே அவன் பேரில் கொண்டிருந்த உயர்ந்த எண்ணங்களை விட்டு விடுகின்றனர். இதனால் ஒழுக்கமில்லாத மனிதன் சிறந்த அறிவாளியே ஆகிலும் மதிக்கத் தக்கவனில்லை என்பது பெறப்படுகின்றது.

4. அருமையான பிரசங்கம் நடக்குமிடத்தில் சிலர் தங்கள் குடும்ப சமாச்சார மெல்லாவற்றையும் தன்னருகிலுள்ள நண்பரிடம் கொட்டி அளக்கின்றார்கள். அவர்களுடைய எண்ணம் தாங்கள் மெதுவாகப் பேசுவதனால் பிறருக்கு இடஞ்சலில்லை என்பது. இந் நினைப்புடனேயே பலரும் பேச, அங்கு ஓர் பேரிரைச்சலாகி அதன் மூலம் மிக்க கவனமுடன் உபன்னியாசமாகிய இன்பத் தேனைப் பருகிக்கொண்டிருக்கும் பல்லோருக்கும் பெருந்துன்பத்தைத் தருகிறார்கள். குடும்பப் பேச்சுகளைக் கூட்டத்தை விட்டு வேறிடத்தில் வைத்துக் கொள்ளலாகாதா?

5. சிலர் எவ்வளவு பணம் தருமத்தின் பொருட்டுச் செலவு செய்யினும், அதனைப் பிறரறியக்கூடாதெனக் கருதுகின்றனர். வேறு சிலரோ தாங்கள் மற்றொருவருக்கு ஒரு அணு கொடுப்பினும் அதனைப் பெருமையாகத் தாங்களே வெளியிட்டுக் கொள்ளுகின்றார்கள்.

6. வாய்ப்பகட்டாகப் பேசித் தன் காரியத்தைச் சாதித்துக்கொள்வோரிடத்தில் சீக்கிரம் மயங்கி அவர்கள் கேட்டதெல்லாம் ஈவதும், உண்மை அன்புடன் பாடுபட்டுப் பின்னர் உழைத்த கூலி கேட்பவனிடம் கடுகடுத்துப் பெரு வெறுப்புடன் கொடுப்பதும் சிலரது சுபாவம்.

7. ஓர் அன்பர் ஒரு காரியார்த்தமாக வேறொருவரின் இல்லத்திற்குச் சென்றார். அங்கு மேசையின்மேல் கடிதங்கள் சில கிடந்தன. அதனை ஒவ்வொன்றாகப் பிரித்துப் பார்க்க ஆரம்பித்தார். வீட்டுக்காரரோ தன்னுள் பொங்கியெழும் சினத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டு அக்கடிதங்கள் வேறு விஷயமானவைகளென்று கூறியவாறே அவர் கையிலிருந்ததை வாங்கி மற்றவைகளுடன் சேர்த்து உள்ளேவைத்துப் பூட்டி

விட்டார். கடிதங்களில் வாழ்க்கையின் இரகசியங்கள் பல பொதிந்து கிடக்குமாகையின் அன்னியர் கடிதங்களைப் பார்க்க ஆவலுற்றுத் திரிவது அறிவுள்ள செய்கையாகாது. வஞ்சகர்களின் வேலையே அது.

8. நாவல் புத்தகங்களை இரவல் வாங்கி வாசித்துப் பின்னர் திருப்பிக் கொடுப்பவர் எங்கோ சிலர்தான். சிலர் தங்கட்கு வாசிக்க ஒரு புஸ்தகமில்லையென்று கூறித் தருமாறு கேட்கிறார்கள். புஸ்தகம் இல்லாவிட்டால் விலைக்கு வாங்கிக் கொள்கிறது தானே!

9. நாம் நம்மிடத்திலுள்ள குறைபாடுகளை ஒரு நிமிஷநேரம் யோசித்துப் பார்ப்போமாயின், பிறரைக் குற்றம் கூறி இகழ்ந்து தூற்ற நம்மனம் ஒருபோதும் ஒருப்படாது.

10. சில தொழிலாளர்கள் ஒரு பொருளைப் பார்த்த அளவிலேயே அதுபோன்ற பிறிதொன்றைச் செய்ய முடியுமெனச் செப்புவதுடன் செய்தும் தந்து விடுகிறார்கள். வேறு சிலரோ எத்தனை முறை அப்பொருளைப் பிரித்துப் பார்ப்பினும் செய்ய முடியாமல் தவிக்கின்றார்கள். பார்த்த சாமான்போலச் செய்வதென்பது சாதாரண சங்கதியல்ல. அதற்குக் கடவுள் ஒரு தனிச் சக்தி தந்திருத்தல் வேண்டும்.

சீ.வி.நா. நாராயணன் செட்டியார்,
நேமத்தான்பட்டி.

II

11. வண்ணானுக்கு வண்ணாத்தி மேலாசை, வண்ணாத்திக்குக் கழுதை மேலாசை என்பதுபோல், நம் நலங் கருதுவோரை விலக்கி, நம்மிடம் இனியமொழிபேசி மறைவில் நம்மை இழிவாய்த் தூற்றுவோரின் உறவைத் தேடுவதே அதிகம்.

12. "என்னைத் தேடிவந்து வலுவில் நேசம் பாராட்டிய காலமெல்லாம் போய், இப்போது என்னைப் புறக்கணிக்கிறாளே? என்று ஒரு வாலிபன் தன் நண்பனிடம் அங்கலாய்க்கிறான். அந்நண்பன், "அவள் என்னைச் சுற்றுக்காலிடுகிறாள், ஆனால், நான் அவளைச்சட்டைசெய்வதில்லை." என்கிறான். இதற்கு நடுவில் அப்பெண்மணி தன்னை வேண்டாமென்ற மூன்றாவது மனிதனை மணக்க முயற்சி செய்கிறாள். முடிவு தலைவிதிப்படியே தான்.

13. தங்கைக்கும் தனக்கும் எழாம் பொருத்தம். ஆனாலும், அவள் பர்த்தாவின் க்ஷேமலாபங்களை அறிய ஆவலதிகமாகையால் பின்வரும் கடிதம் எழுதப்படுகிறது:—"சிரஞ்சீவி செளபாக்கியவதி......க்கு. க்ஷேமம், க்ஷேமத்திற்கு பதிலெழுதவும். நீங்கள் என்னை முற்றிலும் மறந்துவிட்டீர்கள். உங்களைப் பார்க்க வேண்டுமென்று ஆவலதிகமாய் இருப்பதால் கூடிய சீக்கிரம் ரஜா எடுத்துக் கொண்டு வருவீர்களென்று நம்புகிறேன்..." இக்கடிதம் தங்கைக்கா, அவள் கணவருக்கா?

16. நம்மிடம் ஓர் மனிதன் ஓர் இரகசியத்தைச் சொல்கிறான். அதை நாம் மற்றொரு மூட ஓட்டை வாயனிடம்இரகசியமாய்ச் சொல்கிறோம்.மறுநாள் அவ்விஷயம் உலகறிந்த இரகசியமாய் விடுவதன்றி படிப்படியாய் வந்து நம்மிடம் அது ஆரம்பித்ததென்றும் தெரிந்துவிடுகிறது. அச்சந்தர்ப்பத்தில் நண்பனைக் காட்டிக்கொடுக்காமலும் தானகப்படாமலும் தப்ப வழி தெரியுமா? என் விழிக்கிறீர்கள்?

உண்மைவிளம்பி.

யாருக்கு எப்படி சலாம்?

சலாம்போடுதலை எடுத்துக்கொண்டால் உலகில் பலவித சலாம்கள் இருக்கின்றன. நான் தங்கள் முன் சலாம் போட்டுக்கொண்டு என் "சலாம்" வியாசத்தைப் படியுங்கள் என்றுகேட்டுக் கொள்ளும் சலாமிற்கும், ஒரு போலீஸ்காரன் தன் மேல்அதிகாரிக்குப் போடும் சலாமிற்கும் எவ்வளவோ பேதமிருக்கத்தான் செய்கிறது.

ஃ

பள்ளிக்கூடத்துப் பையன்கள் முக்கால்வாசிப் பேருக்கு உபாத்தியாயரைக் கண்டால் நடுக்கந்தான். அவருடைய நல்ல அபிப்பிராயத்தைப் பெறுவதற்கு இன்றியமையாததாக உதவுவதில் சலாமும் ஒன்றாகும். கடைத்தெருவில் உப்பு, புளி வாங்கிக்கொண்டு வரும்போது தங்கள் முன்னால் வாத்தியார் ஒருவர் வந்தால் முட்டைகளுடன் ஒரு சலாம் வைக்க மறந்து விடுவதில்லை. ஆனால், எனக்கு மாத்திரம் அவருக்கென்ன சலாம் என்றுதான் தோன்றும். எனினும் நான் கையில் சாமான்கள் வைத்துக்கொண்டிருந்தாலும் சாமான்களைக் கீழே வைத்துவிட்டு உபாத்தியாயருக்கு இருகரம் கூப்பித் தலை குனிந்து வணங்குவேன். இதில் என் எண்ணம் என்னவெனில், உபாத்தியாயர் 'கோழிமுட்டை' மார்க்கு போடாமல் இரண்டொரு மார்க்காவது எனக்குத் தரமாட்டாரா என்பது தான்.

ஃ

கிருஷ்ணன் தன் சினேகன் கோவிந்தனுக்கு சலாம் போடுவது மற்றொரு வகை. கிருஷ்ணன் கோவிந்தனிடமிருந்து எவ்வித வகையிலும் லாபம் பெற நினைக்கவில்லை; இருந்தாலும் அவனை ஒரு நாளில் முதலில் காணும்போது, ஈ ஓட்டுவதைப்போன்று மேலே கை உயர்கிறது. அதே சமயத்தில் பற்களும் தன் வரிசைகளைக் காட்டுகின்றன. கோவிந்தனும் இதே சின்னங்களுடன் கிருஷ்ணனுக்கு ஒரு சலாம் போட்டுவிடுகிறான். இருவரும் அவரவர்கள் வேலையைப் பார்த்துக்கொண்டு போய்விடுகிறார்கள். இந்த சலாமிற்கும், வாத்தியாருக்குப் போடும் சலாமிற்கும் எவ்வளவோ வித்தியாசமிருக்கிறது.

ஃ

அதோ போலீஸ் உடையுடன் இருக்கிற சேவகரான முனியப்பர் தன் போலீஸ் இன்ஸ்பெக்டரைக் கண்டவுடன் எவ்விதம் சலாம் செய்கிறார் என்று பாருங்கள். கையை நன்றாய் உயர்த்தி முறை சிறிதும் பிறழாது, வாய்பொத்தி, சிரம் நிமிர்ந்து, ஒரு சலாம் காட்டுகிறார். அந்த சலாமிற்கு அந்த இன்ஸ்பெக்டர் ஈயை ஓட்டும் பாவனையில் கடைக்கண் பார்வையுடன் மறு சலாம் ஒன்று போட்டாலும் போட்டார்; இல்லாவிட்டால் கண்பார்வையுடன் நின்றாலும் நின்றார். அவரைக் கேட்பார் யாருமில்லை. இந்த சலாமிற்கும் முன் கூறிய சலாமிற்கும் எவ்வளவோ பேதமிருக்கிறது. இதே போலீஸ் இன்ஸ்பெக்டர் தன் மேலதிகாரியைக் கண்டால் போலீஸ் சேவகன்போட்ட சலாமிற்கும் மேலா

கப் போடுகிறார் ஒரு சலாம்! எல்லாம் அந்தஸ்தைப் பொருத்தது.

ஃ

நாடக மேடையில் தோன்றும்போது நடிகர்கள் போடும் சலாம் வேறுவிதம். வரும்போதே தலைகுனிந்து சபையோர்களுக்கு ஒரு நீண்ட சலாம் இட்டுவிட்டுத்தான் தன்னுடைய பாட்டுகளையும் ஆடல்களையும் ஆரம்பிப்பார்கள். அவர்கள் நாடகப் பாத்திரத்தில் அச்சமயத்தில் கோபம் மிகுந்தவராய்த் தோற்றி ஆவேசம் கொண்டு, குதிக்கவேண்டிய தருணமாயிருந்தாலும் அப்போதுங்கூட, கோபத்தை அங்கே நில் என்று சொல்லிவிட்டு, முதலில் சபையோரை நெடுகப் பார்த்து ஒரு நீண்ட சலாம் போட்டுவிட்ட பிறகே தான் தங்கள் குதிப்பை ஆரம்பிப்பார்கள்.

ஃ

மூன்னும் பின்னும் தெரியாதவன் ஒருவனைக் கண்டு, தான் முன் எங்கேயோ பார்த்திருப்பதுபோன்று எண்ணி அவனுக்கு ஒரு சலாம் போட்டுவிடுகிறது. அவன் இந்த ஆள் யாரென்று புரியாமல் தன் மூளைக்கு வேலை கொடுத்தும் ஆராய்ந்தும் யாதும் பயன் படாது தவித்துப் பிறகு எந்த விவரமும் தெரியாமலே பதில் சலாம் போட்டுத் தொலைப்பது இன்னொரு தினுசாகும். இதற்கு அறியாமைச் சலாம் என்றே கொள்ளலாம்.

ஃ

எல்லாவற்றிற்கும்மேல் "காக்காய் பிடிக்கும் சலாம்"தான் முதன்மையானது. அவரால் ஒரு காரியம் நமக்கு சித்திபெற வேண்டுமென்றிருந்தால் அவரைக் காணும்போதெல்லாம் ஒரு சலாமைப்போட்டு வைப்பது. தபாலாபீசில் மணி மூன்று அடித்துவிட்டது, மணியார்டர் அதற்குப் பின் எடுக்கமாட்டார்கள் என்று தெரியும், நாம் அப்போது என்ன செய்கிறோம்? மணியார்டர் கிளார்க்கிடம் நேரே சென்று, முதலில் ஒரு நீண்ட சலாமைப்போட்டுப் பல்லை இளிக்கிறோம். பின் பேச ஆரம்பிக்கிறோம். இதற்குக் காக்காய் பிடிக்கும் சலாம் எனலாம்.

ஃ

முருகப்பச் செட்டியார் நாம் கடைவீதிவழியே போய்க்கொண்டிருந்தால் நம்மைப் பார்த்துப் பல்லைக் காட்டிக்கொண்டு ஒரு சலாம் போடுகிறார். அவர் போடும் சலாமின் அர்த்தமென்ன? அவர் கடையை மறந்துவிடாதிருக்கும் பொருட்டே. தங்களிடம் ஒரு புஸ்தகம் இரவலில் வாங்கிப்போகவேண்டுமென்றிருக்கும். முருகன் தங்களிடம் வந்து முதலில் ஒரு "கள்ளக் கும்பிடு" என்பது போன்று "கள்ள சலாம்" ஒன்று போட்டுவிட்டு, தங்கள் யோக க்ஷேமங்களை மிகவும் வினவிவிட்டு, பின்னால் தன் காரியத்தை முடித்துக்கொண்டு போகிறான். இவ்விதமான சங்கதிகளில் பொதுவாக. சலாமே "காக்காய் பிடிக்கத்தான்" என்பது சிலரின் அபிப்பிராயம். என்னைப் பொருத்த மட்டில் நான் அதை ஒப்புக்கொள்வதற்கில்லை. தலைவிதிக்காகவும் சில சமயங்களில் நாம் நம்முடைய சலாமைப் போடவேண்டிய திருக்கிறது. கடைசியாக, உனக்கு ஒரு சலாம் போடுகிறேனப்பா என்னை விட்டுவிடு என்று என்னையும் நீங்கள் துரத்தலாம். ஆகையால் நான் இத்துடனேயே விடைபெற்றுக் கொள்கிறேன்.

S. ஸ்ரீரங்கராஜு.



பெரியாரின் மொழிகள்



"டிக்கன்ஸ்" மொழிகள்.

This world is not an utterly misserable one, with all its faults

எவ்வளவோ பிழைகளிருப்பினும் இந்த உலகம் முற்றிலும் வருத்தந் தரக் கூடியதல்ல.

We can see no more to the bottom of the next few hours than we can see to the bottom of this river.

இந்த ஆற்றின் ஆழத்தை எப்படிக் கண்டறிய முடியாதோ, அதைவிட சிலமணி நேரத்தில் நடக்கப்போகும் விஷய எல்லையை நாம் காணமுடியா.

Dignity, and even holiness too sometimes, are more questions of coat and waistcoat than some people imagine.

சிலர் எண்ணுவதைவிட, பெருந் தன்மையோடிருப்பதும் பக்தியோ டிருப்பதும் கூட சில சமயத்தில் வெளி மயக்கத்துக்குத் தக்கதாயிருக் கிறது.

No one is useless in this world ... who lightens the burden of it for any one else.

மற்றவனின் உலக (வாழ்க்கை யின்) பாரத்தைச் சுலபமாக்கி விடுப வன் இந்த உலகத்தில் உபயோக மற் றவனாக மாட்டான்.

There is little doubt that troubles are exceedingly gre-sous in their nature, and flying in floks, are apt to perch capriciously.

துன்பங்கள் இயற்கையாகவே கூட்டங்கூடுந் தன்மையுள்ள தென்ப தும், கும்பலாகப் பறந்து சென்று கண்டபடி (மனிதரைக்) கஷ்டம் கொடுக்கப்படுபவை என்பதிலும் சந் தேகமில்லை.

Pride is one of the seven deadly sins; but it cannot be the pride of a mother in her children, for that is a compound of two cardinal virtues — faith and hope.

கர்வம் ஏழு வகைப் பயங்கரமான பாபங்களுள் ஒன்றாகும். ஆனல் தாய் தன் குழந்தைகளால் அடையும் கர்வம் அப்படிப்பட்டதன்று. ஏனெ னில், அது (தாயின் கர்வம்) இரண்டு குணாதிசயங்களைச் சார்ந்து நிற்கி றது—அவை (தன் மக்களிடம் கொண்டுள்ள) உறுதியும் நம்பிக்கையு மாகும்.

II

"லாங்க் பெல்லோ" மொழிகள்:—

Who knows what may happen? Patience, and shuffle the cards?

தான் செய்த ஒரு உதவிக்கு நிந்தையே பலனாகில், அதற்கு அடுத்த தடவை அவன் உதவிசெய்ய முன்வரான். அவன் சித்தம் சலித்துப்போய், இனி உதவியும் செய்யவேண்டாம், இதிற் குறைசொல் பெறவும் வேண்டாம் என்று ஒதுங்கிவிடப்பண்ணும்.

என்ன நடக்குமென்று யார் அறிவர்? பொறுமையுடன் வாழ்க்கையாகிய சீட்டுக்கட்டைக் குலுக்குவாயாக.

All that inhabit this great
 earth,
Woatever be their rank or
 worth.
Are kindred and allied by
 birth,
And made of the same clay.

அந்தஸ்தும், யோக்கியதையும். எவ்வாறிருப்பினும், இப்பெரிய உலகத்தில் குடியிருப்பவை யெல்லாம், பிறப்பில் ஒற்றுமையுடையதாயும், உறவின் முறையாயும், ஒரே மண்ணில் வனையப்பட்டவையாயும் இருக்கின்றன.

At the flaming forge of life.
Our fortunes must be wrought ;
Thus on its sounding anvil
 shaped.
Each burning deed and thought.

வாழ்க்கையாகிய சுடர்விட்டெரியும் கொல்லுலைக்கூடத்தில் நம்முடைய அதிர்ஷ்டத்தைச் செய்து கொள்ள வேண்டும்; இவ்விதமாக அக்கூடத்தின் பட்டடைக் கல்லில் சுடர்விட்டெரியும் ஒவ்வொரு செய்கையையும், எண்ணத்தையும் அடித்து உருவாக்கிக் கொள்ளவேண்டும்.

Let us do our work as well,
Both the unseen and the seen;
Make the house where Gods
 may dwell,
Beautiful, entire, and clean.

வெளிப்படையானதும், வெளிப்படையாக இல்லாததுமான நம் வேலையை நாம் நன்றாகச் செய்வோம். கடவுள் வசிக்கத் தகுந்தபடி வீட்டை அழகாகவும், பகுத்திடாமலும், சுத்தமாகவும் வைத்துக் கொள்வோம்.

Wander from holiness onward to holiness.

தூய்மையிலிருந்து தூய்மைக்கே நடந்து செல்வோம்.

Deeds are better things than
 words are,
Actions mightier than boastings!

வார்த்தைகளை விட செய்கையே மேலானது. தற்புகழ்ச்சியை விட செய்கையே வன்மை வாய்ந்தது.

III

'ஷேக்ஸ்பியர்' மொழிகள்:—

Mercy ... is twice bless'd;
It blesseth him that gives, and
 him that takes.

தயை இரண்டு விதத்தில் இன்பத்தை ஊட்டுகிறது. தயையைக் காட்டுகிறவனுக்கும், அதைப் பெறுகிறவனுக்கும் இன்பத்தைத் தரும்.

A little fire is quickly trodden
 out,
Which, being suffer'd rivers
 cannot quench.

நெருப்பு கொஞ்சமாக இருப்பின் அதை அதிவிரைவில் அணைத்துவிடலாம். ஆனால் அதை அதிகரிக்கும்படி

கும்பகோணம் மகாமகக்குளத்தின் புண்ணிய ஸ்நானத்திற்காக 10-லக்ஷம் ஜனங்கள் முன்புவந்ததும் ஒரு காலம்! இப்போது அக்குளத்தில் பலர் அசுசியுடன் வந்து கால் அலம்பிச்செல்ல நேர்ந்திருப்பதும் ஒரு காலம்! எத்தகைய தீர்க்கதரிசிக்கும் தன் நாட்டில் மதிப்பில்லை. அவ்விதமே க்ஷேத்திரம், தீர்த்தம் முதலியவைகளுக்குங்கூட.

விட்டால் ஆறுகள் கூட அணைக்க முடியா.

My crown is in my heart, not on my head.
Not deck'd with diamonds and Indian stones.
Nor to be seen; my crown is called content.
A crown it is that seldom kings enjoy.

என்னுடைய கிரீடம் என் இருதயத்திலிருக்கிறது. என் தலையிலில்லை. அது ரத்தினங்களாலும், இந்திய தேசத்தின் கற்களாலும் அலங்கரிக்கப்பட்டில்லை; அதைப் பிறர் பார்க்கவும் முடியாது. என்னுடைய மகுடம் 'திருப்தி' என அழைக்கப்படும். இந்த மகுடத்தை அரசர்களும் அபூர்வமாக அனுபவிக்க முடியும்.

A dream itself is but a shadow.

கனவு நிழலை ஒத்திருக்கிறது.

ஃ

How for that little candle throws its beams!
So shines a good deed in a naughty world.

அச்சிறு மெழுகுவர்த்தி தன் கிரணத்தை எவ்வளவு தூரம் செலுத்துகிறது! அவ்வாறே நற்காரியமொன்று கொடிய உலகத்திலும் பிரகாசிக்கும்.

We do pray for mercy,
And that same prayer doth teach us all to render.
The deeds of metcy,

தயவிற்காக நாம் பிரார்த்தனை செய்கிறோம். அதே பிரார்த்தனை தயவுள்ள கார்யத்தைச் செய்யும்படி நம் எல்லோருக்கும் கற்பிக்கிறது.

P. G. குலசேகரன்.
'மனோரஞ்சினி விலாஸ்' ராயபுரம்.

யோக்கியமே பெரிது.

ஒருவன் ஏழையாயிருப்பினும் யோக்கியனாயின், அவனது வாய்ச் சொல்லுக்கு இருக்கும் மதிப்பு, அயோக்கியன் செல்வவந்தனாயிருப்பினும் மதிக்கப்படுவதில்லை. இவ்விதமே, ஒரு ஏழைப்பெண்ணின் உத்தம குணங்களுக்குள்ள நன்மதிப்பை கற்புகுன்றிய சீமாட்டி பொருத்தியின்மீது வைப்பதில்லை. அவளை வீட்டிற் சேர விடுவதுமில்லை. எத்தனை உறவாயினும் விபசாரக்கள்வனை வீட்டைவிட்டுத் துரத்தியே தீர்கின்றனர். வாங்கிய கடனைத் திருப்பித் தராதவன் செல்வனாயினும், அவன் மற்றொருமுறை கடன் கேட்க வருகையில் இல்லையென்றே கூறிவிடுவார். யோக்கியதையுள்ள ஏழை கடன் கேட்பினோ உடனேகிடைத்துவிடும்.

வீட்டிலேயே இருந்தால் அதிக செலவில்லை. வெளியில் புறப்பட்டு விட்டால் பணப்பை பல செலவுகளில் வெகு சீக்கிரம் கரைந்துவிடுகிறதாம்.

பழமொழிக் குறிப்புகள்

4. மக்கள்.

(173-ம் பக்கத் தொடர்ச்சி.)

---

330. "சோற்றுக்குக் கேடும் பூமிக்குப் பாரமுமா யிருக்கிறான்."

சிலருடைய ஜென்மம் இப்படிக் கேடுகெட்ட விதமாய் வியர்த்தமாக இருக்கிறது. இவர்களால் குடும்பத்துக்கு எவ்வித பிரயோஜனமுமில்லை. எவ்வளவோ இழிவான நாயும் தன் வயிற்றுக்கு வழி தேடிக்கொள்கிறது. அவ்விதமாகத் தன் வயிற்றுக்குமட்டும் சம்பாதித்துக்கொண்டால் போதுமா? உலகத்தில்தான் ஒரு பிள்ளையாய்ப் பிறந்ததற்கு எல்லோராலும் நல்லவனென்று மதிக்கும்படியான காரியங்கள் செய்யவும், பிறருக்கு உபகாரியாயிருக்கவும் வேண்டாமா? முக்கியமாய்த் தன்னை ஈன்ற மாதா பிதாக்களைப் போஷித்தும் தன்னை நம்பியவர்களைக் காத்தும் வராத ஒரு பிள்ளை பிறந்தென்ன?—பிறவாமற் போனாலென்ன?

331. "காதவழி பெயரில்லான் கழுதையோ டொக்கும்."

தன்னைப்பற்றி ஊரார் புகழும்படியான செயல்கள் சிலவற்றையேனும் ஒருவன் கொண்டிருக்கவேண்டும். அவனது கீர்த்தியையும் பெயரையும் அவன் உள்ள ஊரில் மட்டுமல்ல. வெளியிடங்களிலும் அவன் பெயர் வியாபித்திருக்கும்படி அவன் நடந்துகொள்ளவேண்டும். அதிகமில்லாமற் போயினும், ஒரு காதவழி தூரத்திற்கேனும் அவன் பெயர் எட்டி யிருக்க வேண்டும். அவ்வளவுக்குக்கூடப் பேர் எடுக்காதவனின் ஜன்மம் கழுதைப் பிறப்புக்கே ஒப்பானதென்று இப்பழமொழி எடுத்துக் காட்டுகிறது.

332. "குருமொழி கேளாதவனும், தாய்வார்த்தைக் கடங்காதவனும் சண்டி."

'குரு' என்பதைச் சாதாரணமாக உபாத்தியாயருக்கே உபயோகிப்பினுங்கூட அவர் வார்த்தையைக் கேளாத சிறுவன் உருப்படான். ஒவ்வொரு வித்தைக்கும் ஒரு 'குரு' தேவை. 'குரு'என்பதற்கு கடைத்தேற வழிகாட்டுகிறவரென்று பொருள். அத்தகைய உத்தமரின் சொல்லுக்கு உட்படாதவன் விருத்தியடைவது யாங்ஙனம் இவ்விதமே தாய்வார்த்தையைத் தட்டி, நடப்பவனும் தடுக்கிவிழுந்து தடுமாறியே போவான்.

ஒருவனுக்கு அவன் கோரிய உதவியைச் செய்தாலும் செய்யவிட்டாலும், அவன் தன்னிடம் கதறித்தெரிவித்ததை மற்றவர்களிடம் சொல்லிக்கேவலப்படுத்தி விடக்கூடாது. பிறரது மானத்தைக் காப்பது ஒரு பெரியதர்மம்.

333. "கெட்ட குடிக்கொரு துஷ்டப்பிள்ளை"

பெரிய நிலையிலிருந்து காலகதியால் கெட்டுப்போன குடும்பத்தை இன்னும் கெடுப்பதற்கே ஒரு துஷ்டப்பிள்ளையும் பிறக்குமாம். கெட்டகுடி என்பதில். ஊராருக்குக் கொடியவனாகி தனது உத்தியோகத்திலிருந்த கால முழுதுக்கும் தீங்குகளையே செய்துவந்தவனின் குடும்பத்தையும் குறிக்கும். அவ்விதம் ஊரைக்கெடுத்து அநியாயம் செய்துபெற்ற சாபத்தின் பயனாக ஒரு துஷ்டப்பிள்ளை அந்தக் குடும்பத்திற் பிறந்து அநியாயமாய்த் தேடிய வற்றையெல்லாம் கண்டபடி செலவிட்டு அழித்துப் பாழ்படுத்திவிடும் என்பது மற்றொரு கருத்து. உத்தம தானசீலர்களாய் வாழ்ந்த குடும்பத்தினர் யாவற்றையும் இழந்து குதிரையைக் கட்டுமிடத்தில் சமைத்துண்ணும்படி காலம்வர, அந்த இழி நிலையில் ஒரு உத்தம புத்திரன் பிறந்து அவனால் பூர்வமிருந்த மகோன்னதசைக்கு உயர்வதுமுண்டு. இவ்விதமின்றி ஒரு துஷ்டப் பிள்ளை பிறப்பினே கெட்டகுடியே இன்னும் கெடும் என்ற முடிவுதான். அவ்விதம் கெடுத்த பிள்ளையைக் குறிப்பிட்டுக் கூறும் பழமொழி இது.

334. "கேட்ட குடிக்கு ஒரு கேட்டை பிறந்தது"

தெய்வ சோதனைக்குள்ளான ஒரு குடும்பத்தில் அதற்கு ஏற்றவாறு ஒரு கேடுகெட்ட குழந்தை பிறக்குமானால் அதைவிடத் துர்ப்பாக்கியம் வேறில்லை. கேட்டை என்ற பதத்திற்கு மூதேவி என்பது பொருள். மூதேவிக் குணத்தையுடைய குழந்தையைப்பற்றிச் சொல்லுகையில் இப்பழமொழி உபயோகமாகும்.

பந்தாட்டமும் தோட்ட வேலையும்.

பந்தாடுவது ஒரு உற்சாகமுள்ள விளையாட்டுதான். ஆனால், ஒரு விவசாய குடும்பத்தில் பிறந்தவன் பந்தாட்டத்தை இரண்டாந்தரமாகவும், தோட்டவேலையிற் பயிற்சி பெறுதலை முதல்தரமாகவும் நினைத்துக்கொள்ள வேண்டும். பந்தாட்டம் நல்ல இரத்தமொன்றையே தருகிறது. தோட்ட வேலை நல்ல இரத்தந் தருவதோடு தொழிலையுங் கற்பிக்கின்றது. ஆகவே, விவசாயிகளின் பிள்ளைகளுக்கு எல்லாம் தோட்ட வேலையையும் வயல் வேலையையும் காலை மாலைகளிற் கற்பிப்பது உடற்பயிற்சியாயும் தொழிற் பயிற்சியாயுமாகும். பந்தாட்டத்தைவிட இது நல்ல பிழைப்பு தருவதுமாகும்.

என்னதான் ஒன்றுக்குப் பதிலாக மற்றொன்றைக் கொண்டாலும், அந்த முந்திரியதின் சுவை பிந்தியதில் இருப்பதில்லை. மூலநூலின் சுவையை மொழி பெயர்ப்பு நூலில் அத்தனையாய்க் காணமுடிகிறதில்லை.



ஹாஸ்ய சஞ்சீவினி



விருந்தாளி:—என்னுடன் அழைத்துவந்தவேலைக்காரப் பெண்எங்கே? கூப்பிடுங்கள்.

வீட்டுக்காரர்:—யாரை வேலைக்காரப் பெண் என்கிறீர்கள்?

[அதற்குள் அங்கு வந்த]

ஒரு பெண்:—என்ன அப்பா நான் வேலைக்காரியா?

விருந்தாளி:—குழந்தாய்! உன்னை வேலைக்காரி யென்றதினால் ஒரு கேவலமும் இல்லை. உன் தந்தையான நான் உனக்குச் சம்பளமில்லாத வேலைக்காரன்போலத் தானே!

ஃ

நோயாளி:—ஆ! தங்கள் மருந்தின் அற்புதமே அற்புதம்! நான் பூரண குணமடைந்து விட்டேன்.

வைத்தியர்:—தங்களுக்குக் கொடுத்தது அவ்வளவு உயர்ந்த மருந்தாகும். அதை வேறொருவருக்குத் தந்திருந்தால் பத்து ரூபாய்க்குக் குறையாமல் வாங்கியிருப்பேன்.

நோயாளி:—அவ்வளவு லாபம் வருமானால் தாங்கள் கொடுத்த மருந்து அப்படியே இருப்பதால் அதை லாபம் வருமிடத்தில் கொடுங்கள். தங்கள் மருந்தைப் பெற்றதும் அதை உண்பதற்கு முன்பே என் ஜுரம் நின்றுவிட்டதால் புசிக்கவில்லை.

ஃ

வேசிப் பிரியர்:—ஏன் இப்படிக் குடியனாகத் திரிந்து கெடுகிறாய்?

குடியர்:—அழகிய மனைவி வீட்டிலிருக்க, ஏன் நாய்போல் கண்டவளோடெல்லாம் அலைகிறாய்?

ஃ

நண்பர்;—உங்களின் நீர் ரோகத்திற்கு இந்தக் காபி கூடாதே.

காபிக் குடியர்:—எவ்வளவு நீர் ரோக பாதையையும் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால், இந்தக் காபியில்லாமல் ஒரு நிமிஷமும் இருக்க முடியாது.

ஃ

புது வேலைக்காரன்:—தங்களுக்கும் அம்மாளுக்கும் ஒரே படுக்கையாகப் போடட்டுமா?

எஜமானர்:—வந்திருக்கிறவர் என் நண்பரின் மனைவி. ஜாக்கிரதையாக நாக்கை இழுத்துப் பேசு. வெவ்வேறாகப் படுக்கை போடு.

ஃ

ஒரு மனிதன் மற்றொரு மனிதனுக்கு ஒரு கண் ஊனமாயிருப்பதைக் கண்டு, "அடே ஒற்றைக் கண்ணா, பொட்டைக்கண்ணா" என்று கூவி யழைத்தான். அதற்கவன், "ஐயா, உமக்கு இரண்டு கண்களிருந்தும், பயனில்லை. உமது இரண்டு கண்களையும் விழித்துப் பார்த்தும் என்னிடமுள்ள ஒரு கண்தான் புலப்பட்டது. அதனால் உம்முடைய பார்வை மட்டு. என்னொரு கண்ணால் உம்முடைய இரண்டு கண்களையும் நான்

ஒரு சங்கதிக்காகவென்று வெகுபத்திரமாக எடுத்திவைத்திருந்த பணத்தை மற்றொன்றுக்காகச் செலவிட்டு எங்கும்படியான வேளைகளும் வருகின்றன.

பார்க்கிறேன். ஆகவே, எனக்கிருக்கும் பெருமை உமக்கு ஒருநாளும் வராது" என்ருன்.

ஃ

பத்மா பி. ஏ.:—விதவா விவாகம் செய்துகொண்டாயே. உன் புதுப் புருஷன் எப்படி யிருக்கிருர்?

சீதா எம். ஏ.:—பழய புருஷன் போல வருமா? அவர் என்னேடு எவ்வளவோ விளையாடித் திரிந்தவராயிற்றே. ஒவ்வொரு தீபாவளிக்கும் அவர் என் தாய் வீட்டுக்கு வரும் போது எவ்வளவோ சந்தோஷமாயிருக்கும். இருவரும் சேர்ந்து பட்டாசு சுடுவோம். என் பாபம் நான் பெரிய மனுஷியான தினமே அவர் அம்மைபோட்டு இறந்தார். இப்போது நான் மணந்துகொண்ட வக்கீலோ எடுத்ததற்கெல்லாம் விவாகரத்து செய்து விடுவதாகச் சட்டம் பேசுகிற இரக்கமற்ற தடியனுயிருக்கிருன். அது என் தலைவிதி!

ஃ

வியாபாரி:—என்ன அதற்குள் பத்திரிகை படித்தாய் விட்டதா? அதில் உங்கள் சாமானை வைத்துப் பொட்டணமும் கட்டிவிட்டீர்களே? அதிலுள்ள நமது பெரிய விளம்பரத்தை நீங்கள் பார்க்கவில்லையே?

உத்தியோகஸ்தர்:—ஒரு பத்திரிகையைப் படிக்க ஐந்து நிமிஷம் போதாதா? விளம்பரங்களைப் படிக்கப் பொழுது எது? சும்மா மேல் போக்காகக் கவனிக்கிற சங்கதிதான்.

ஃ

ஜவுளி வியாபாரி:—நமக்குப் படிக்க ஒரு புஸ்தகம் தரக்கூடாதா?

புஸ்தக வியாபாரி:—தங்கள் ஜவுளிக்கும் நமது புஸ்தகங்களுக்கும் மாற்றிக்கொள்வோமே?

ஜவுளி வியாபாரி:—படித்துவிட்டுத் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்.

புஸ்தக வியாபாரி:—தங்களின் துணிமணிகளையும் நானும் கொஞ்சம் கட்டிக் கிழித்துத் திருப்பிக் கொடுத்துவிடுகிறேனே!

ஃ

தாய்க் கிழவி:—அவரையே நீ சுற்றிக்கொண்டு கிடந்தால் நமது பிழைப்பு நடக்கிறதெப்படி?

தாசி:—அவர் ஏதேதோ தன் சொந்த சங்கதிகளை யெல்லாம் சொல்லுகிருர். நானும் அதை வெகு சிரத்தையுடன் கேட்பதுபோல மயக்கிஞல்தானே நான் அவர்மீது அதிகப் பிரியமாயிருப்பதுபோல அவர் நினைத்துக்கொள்ள முடியும். அவரவர்கட்குத் தகுந்தபடி நடந்து தஞக்கு காண்பிக்கிறதென்ருல் அது என்ன இலேசா?

ஃ

சேஷி:—இந்தக் காசுமாலை உனக்குச் சொந்தமாடி? உன் வீட்டுக்காரர் செய்து போட்டாரா?

ஜானகி:—எனக்குச் சொந்தமல்ல. நான் உயிரோடிருக்கிற வரையில் அதைப் போட்டுக்கொண்டிருக்கலாம். அவ்வளவே. நானே விற்க சுதந்திரமில்லை.

ஃ

தங்கை:—அக்கா! நீ புருஷன் வீட்டுக்குப் போய் வந்ததும் இவ்வளவு பருத்துப் போனயே?

தனது சக்தியைப் பூரணமாக நம்பியவன் பிறர் அதில் எத்தனை தவறுகள் பேசி அதைரியப்படுத்தினும் சோர்ந்து போவதில்லை; தன் முயற்சி குன்றுவதுமில்லை.

அக்கா:—என்ன தங்காய்! நீ இப்படி இளைத்துப்போனாய்? இன்னும் விவாகமாக வில்லையே என்கிற விசாரமா?

ஃ

அவர்:—அந்தப் பையனை என் இங்கேயே உட்காரவைத்துக் கொடுமைசெய்கிறாய்? அவன் அழுகிறானே.

இவர்:—அவன் உள்ளே போனால் மற்றக் குழந்தைகள் அடிக்கிறார்கள். அதற்காக அவனை இங்கு இழுத்து வந்தேன்.

அவர்:—அடிக்கிற குழந்தைகளை அதட்டுவதை விட்டு, அடிபட்ட குழந்தையைக் கண்டித்து அதிகாரம் செய்கிறாயே? மரத்திலிருந்து விழுந்தவனை எறி மிதித்ததுபோலிருக்கிறதே! ஏழைக் குழந்தை யென்றால் அதிக அதிகாரமோ?

ஃ

சுப்பு:—அவன் அந்த வேலையைச் செய்யட்டுமா என்று கேட்கும்போதெல்லாம் அப்படியே செய் என்கிறாயே தவிர வேண்டாமென்று நீ சொல்லவில்லையே?

சுப்பு:—நான் அதைச் செய்ய வேண்டாமென்று சொல்வேன் என்பதாகவே அவன் எண்ணம். அவன் ஒரு வேலையைச் செய்வதாகக் கூறுவானேயன்றி பிறகு மெதுவாக நழுவி ஓடிவிடுவதே அவன் குணம்.

ஃ

—“மழை வருமென்று எல்லோரும் வேகமாக நடக்கும்போது நீ மெதுவாகச் செல்கிறாயே?”

—“கடவுள் என்னை மழையில் நனையவிடார். அந்த மனோ உறுதியினால்தான் இப்படி மெதுவாக நடக்கிறது.*

ஃ

—“இந்தப் பந்து ஒன்றின் விலை என்ன?”

—“இரண்டு பந்தாகத்தான் சேர்த்துப் பேரம்பேசி விற்பது வழக்கம்!”

புதுப் புஸ்தகம் புதிய அறிவு தரும்.

ஒவ்வொரு மாதமும் ஒரு புதுப் புஸ்தகத்தைப் படிக்க ஆவல் தோன்றவேண்டும். நால்வர் ஒன்று சேர்ந்தேனும் ஒரு புதுப் புஸ்தகம் தருவித்து வாசிக்கவேண்டும். எவ்வளவு கஷ்டகாலத்திலுங்கூடப் புதிய நூலை விலைக்குப் பெறுவதை விட்டுவிட வொண்ணாது. புஸ்தக வாசிப்பிலுள்ள நன்மையும் உயர்வும் வேறெதனிலும் இல்லை. தனக்கென்று சில புஸ்தகங்கள் சொந்தமாய்ப் பெட்டியில் இருக்கவேண்டும். அது என்றும் அழியாத பொக்கிஷமாகும். இரவல் தருகிற பீடையான துர்வழக்கத்தை விட்டொழிக்கவேண்டும். புஸ்தகமே ஹஸ்த பூஷணம்.

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

விகடப் பிரதாபன்

RECISTERED TRADE MARK

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

கலப்புக் கண்ணாலத்து ரகசியம்!



என்னவோ நம்ம விகடன் ஏதோ ஒரு பெரிய ரகசியத்தை முதுகிலே சுமந்துவந்து விகட சபையின் முன்னாலே போட்டுப் பிளக்கப் போகிறானென்று நினைக்கிறீர்களா? என் நஞ்சான் குஞ்சான்களுக்குத் தெரியாத ரகசியமென்ன இருக்கிறது? ஆயினும், அதற்கு புதிய வர்ணம் மெருகு கொடுத்து விகடன் இங்கே சொல்லவந்ததைத்தவிர, மற்றபடி எல்லாம் பழய சங்கதிகளே! பழய பந்தத்துவ கொள்வினை கொடுப்பினை உறவுகளை விசாரித்துத்தான் புதிய சம்பந்தம், புதிய உறவுகளை ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதிலே, அந்தப் பழயதுக்கு எப்பொழுதும் ஒரு கனத்த மகிமை இருந்துகொண்டேதான் இருக்கிறது! பழயதை உதாரணமாக எடுத்துக் காட்டித்தான் புதிய சங்கதியையும்—அது சரிதான் என்று ஸ்தாபிக்கவேணும்! பழயதையும், பழையபாட்டுகளையும் சொல்லித் தானே எல்லோரும் பெருமைப்பட்டு வருகிறார்கள்! எதற்கும் வழிகாட்டியவர்கள் முன்னோர்களே! அதைப் பின்னோர்களும் தொடர்ந்து செய்துகொண்டு போகிறார்கள்! ஆகவே, விகடன் அந்தப் பழைய குப்பையிலிருந்து சில செத்தைகளைக் கிள்ளிவந்து இங்கே விகடஞானம் அளக்கப் போவதற்கு எல்லோரும் சந்தோஷ சம்மதம் தருவார்கள்தானே!

ஃ

எதற்காக விகடன் முன்னாலே இவ்வளவு அஸ்திவாரம் போட்டுக் கொண்டு ஆரம்பித்தேனென்றால், சமீபத்திலே சென்ற ஜூன்மாதம் 16-ம் தேதி பூனாவிலே நடந்த காந்தி குட்டி கண்ணாலத்தைப் பற்றித்தான்! தென்னாட்டுப் பிராமணர்கள் என்ன இலேசானவர்களா? அவர்கள் எதற்கும் துணிவார்கள்! எதையும் முடிபோடுவார்கள்! எந்த அபார சங்கதியையும் வெகு சுளுவிலே காரியமாக்கிவிடுவார்கள்! அதிலும், நம்ம ஸ்ரீமான் சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியாரைப் பற்றிக் கேட்கவும் வேணுமா? அவரது சமர்த்து சாமர்த்தியங்களுக்குச் சொல்வானேன்? சும்மா சும்மா பேச்சுமட்டும் விஸ்தாரமாய்ப் பேசிவிட்டு ஒதுங்கியிருந்த ஸ்ரீ மா ன் சத்தியமூர்த்தியையும் துணிந்து முன்னிற்கவைத்துச்சிறை செல்லும்படியான துணிகரத்தை எழுப்பிவிட்டாரென்றால், அவரது வார்த்தை மயக்குகளுக்கு விகடன்

சொல்லவும் வேணுமா? நம்ம காந்தி தாதா எவ்வளவோ பிடிவாதக்கார ராச்சுதே! அவரையும் இந்தக் கலப்பு விவாகத்துக்குச் சம்மதிக்கவைத்து முடிபோட்ட சாமர்த்தியம் என்ன இலேசா? வர்ணாசிரம தர்ம நெறி முறைகள் தவறக் கூடாதென்று அழுத்தமாய்ப் பேசுகிற காந்தி தாதாவை நம்ம ஆச்சாரியார் என்ன சொக்குபொடி போட்டு மயக்கிவிட்டாரோ தெரியவில்லையே யென்று வெகுபேர் நினைக்கலாம்! எப்படியோ நம்ம இராஜகோபாலாச் சாரியார் ஒரு சமர்த்தான வேலையையே செய்து பெரிய முடிபோட்டுவிட்டு அதிலே வெற்றியும் பெற்றுவிட்டாரென்பது நிச்சயம்!

ஃ

இந்தக் கலப்புக் கண்ணாலத்திலே காந்தி தாதா தனது குமாரனுக்கு ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரின் பெண்ணான லக்ஷ்மியை மணக்க ஏற்பாடு செய்யாமல் ஒரு ஹரிஜனப் பெண்ணை மணந்திருந்தால், அது ஹரிஜன உயர்வுக்கு இன்னும் தீவிரமான முன்னேற்றத்தைக் கொடுக்குமல்லவாவென்று என் விகட குட்டிக் குஞ்சுகள் பரிகாசமாகவோ, தர்க்க சாஸ்திர ரீதியாகவோ கேள்விகள் கேட்கப் புறப்பட்டுக் கொள்ளலாம்! ஆனால், ஒரு சங்கதி. இந்த தேவதாஸ்காந்தி—லக்ஷ்மி கண்ணாலம் இன்று நேற்றுப் போட்ட முடிச்சு அல்ல! அநேக வருஷங்களுக்கு முன்பே இந்தப் பேச்சுவார்த்தைகள் நடந்து மகாத்மாதாதாவும் அதற்கு ஒப்புக்கொண்டு, பின்னுக்குச் சில வருஷங்கள் தள்ளிச் செய்யலாமென்று முந்தியே தீர்மானகிவிட்ட சங்கதி! 1927-ம் வருஷத்துக் காங்கிரஸில்தான் இவ்விருவருக்கும் காதல் முற்றிவிட்டதென்று விகடன் கேள்விப்பட்டிருக்கிறேன்! ஆனதால், ஹரிஜனப் பெண்ணை காந்தி தாதா என் மருமகளாகக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யவில்லை யென்பதற்கு இங்கே சற்றும் இடமில்லை! சிலர் இதைக் காமக் கலியாண மென்பார்கள்! ஊர் சங்கதியை மெல்லுகிறவர்கள் எப்படி வேண்டுமானாலும் வம்பு அளக்கலாம்! இந்தக் கலப்புக் கண்ணாலம் சாஸ்திர சம்மதமாகாது என்று பூனா நகரத்து வைதீகர்கள் ஒரு தீர்மானம் செய்தார்களாம்! அதுவும் ஒரு பக்கம் கொட்டுகிற மேளந்தான்! எப்படியோ வைசிய வகுப்பைச்சேர்ந்த மணமகனுக்கும், பிராமண வகுப்பைச்சேர்ந்த பெண்ணுக்கும் கண்ணால முடிச்சு விழுந்து போச்சுது! எவருக்கு எந்தெந்த இடத்திலே பிராப்தமோ அந்தந்த இடத்திலே நடந்தேறி விடுகிறது! மலை நெல்லிக்காய்க்கும் கடல் உப்புக்கும் உறவு செய்தவர்கள் யார்?

ஃ

இந்தக் கலப்புக் கல்யாணத்திலே ஒரு ரகசியமிருக்கிறது! அதைத்தான் விகடனும் இப்போது சொல்லவந்தது! ஒரு ஜாதி மாமரத்தின் கிளையுடன் மற்றொரு ஜாதி மாமரத்தின் கிளையை ஒட்டுப்போட்டு வேறொரு புதிய ஜாதி மரமாய்ப் புதிய ருசியுள்ள கனி தருவதாகும்படி ஆக்குகிற சங்கதி சாதாரணந்தான்! ஆதிகாலமுதற்கொண்டே கலப்புக் கல்யாணம் நடந்தவாறாகத்தான் இருந்திருக்கிறது! பாரதத்திலே குந்திதேவி தன் ஜாதியல்லாதவர்களைச் சேர்ந்து உண்டாக்கின சந்ததிகளான பஞ்ச பாண்

எத்தகைய சக்திவந்தனும் இருகால் மனிதனே! நேர் பார்வைக்குச் சாமானியத் தோற்றத்தினனே! ஆனால், அவனை அவனுடைய வேலையில் விட்டுப்பார்த்தால் அப்போது தெரியும் சங்கதி!

வர்களைத்தான் விசேஷமாய்ப் புகழ்ந்து கொண்டாடப்படுகிறது! பீமன் வேறுஜாதியான இராக்ஷசப்பெண்ணை மணந்து கடோர்க்கஜன் என்கிற புத்திரனைப் பெற்றான்! ஒரு முனிவர் கங்கையில் ஒரு ஓடத்திலே சென்று கொண்டிருக்கையில், அந்த சமயம் ஒரு விசேஷித்த நக்ஷத்திரம் தென்படுவதைக் கண்டு, அந்த அரிய நேரத்தில் ஒரு சந்தான உற்பத்தி ஏற்படுவது மகா விசேஷமென்று அந்த ஓடத்தைச் செலுத்திவந்த மச்சகந்தி என்ற பெண்ணைப் பரிமளகந்தி என்று மறு பெயர் சூட்டிக் கலந்து அதன் மூலமாக உலகம் மதித்தற்குரிய ஒரு பெரியாரை மகவாய்ப் பெறும்படியாகச் செய்தார்! அதாவது ஒரு செம்படவப் பெண்ணை ஒரு பிராமண முனிவர் மணப்பதானார்! விசுவாமித்திரர் பிராமணராகி, அவருக்கும் தேவதாசியான மேனகைக்கும் பிறந்த பெண்தான் சகுந்தலை பிதாவின் வழியில் பார்க்கும்போது சகுந்தலை பிராமணப் பெண்ணாகிறாள்! அவளை க்ஷத்திரிய வமிசத்தைச் சேர்ந்த துஷ்யந்தன் கலப்பு விவாகம் செய்து கொள்கிறான்! இவ்விருவருக்கும் பிறந்த புதல்வனான பரதனின் பெயரால்தான் இந்த நமது நாடு பரதகண்டம் என்று அழைக்கப்படுகிறது! திரௌபதையின் சுயம்வரத்திலே பிராமண ரூபத்துடன் இருந்த அர்ச்சுனனுக்கு, அவன் வில்லை வளைத்து வெற்றி பெற்றுவிட்டதால், அவனைப் பிராமணனென்றே எண்ணி திரௌபதையைக் கொடுக்க ஏற்பாடாயிற்று! இது கலப்பு விவாகமென்று எவரும் தடுத்ததாகக் காணோம்! இந்த சம்பவத்திற்குப் பிறகுதான் நாமெல்லாம் விரும்பிவந்த க்ஷத்திரிய கன்னிகையை ஒரு பிராமணன் கொண்டுபோகிறானேயென்று துரியோதனாதியர் எதிர்க்கத் தொடங்க, அப்போது தான் அர்ச்சுனன் சுய ரூபத்துடன் வெளிக்குத் தோற்றினான்! அடடா! அர்ச்சுன! அரக்கு மாளிகையிலே அந்தப் பஞ்சபாண்டவர்கள் செத்துச் சாம்பராகவில்லையா என்று துரியாதனாதியோர் வியப்புகொண்டு ஆங்காரப்பட்டனர்! மிதிலாபுரியில் சீதையின் சுயம்வரத்துக்கு வில்லை வளைக்க வந்தவர்களில் இராக்ஷஸ வர்ணத்தைச் சேர்ந்த இராவணனும் வந்திருந்ததாகத் தெரிகிறது! எந்த ஜாதியார் வெற்றிபெற்றனரோ அவருக்கே மணப்பெண் சொந்தம் என்ற முறையிலே கலப்பு விவாகம் சாதாரணமாகவே கொள்ளப்பட்டு வந்திருக்கிறதென்னலாம்! இன்னும் ஒரு ராஜ சுயம்வரத்திலே ஒரு கன்னிகை மணமாலையைத் தெய்வத்தைநினைந்து வீசி யெறிய, அது எவர் கழுத்தில் விழுகிறதோ அவருக்கே அவள் மனையாளாவதென்பது ஒரு முறை! அதே சுயம்வரத்தில் ஒரு இராஜ கன்னிகை தனக்குப் பிரியமான எவரையேனும் கணவனாகத்தெரிந்தெடுத்து கொள்வதென்பது மற்றோர் முறை! இதிலும் கலப்பு விவாகம் தடுக்கப்படவில்லை! இவ்வாறாக, விகடன் இந்தக் கலப்பு விவாகத்துக்கு வெகு நீட்டமாய் உதாரணங்கள் சொல்லிக்கொண்டே போகலாம்.

ஃ

பாலுடன் சேர்ந்த நீரும் பாலின் நிறமே பெறுவதுபோல, எந்தஜாதிக் கன்னிகையானாலும் அவள் மணந்து கொண்ட கணவனின் குலத்தோடு சேர்ந்து ஒன்றுபட்டுப் போகிறாள்! இவ்விதமான கலப்பு விவாகங்கள் ஒரு பக்கம் நடந்தாலும், அது ஒரு விசேஷித்த சம்பவங்கள் நிறைந்த சமயத்திலே நேர்ந்ததாக மட்டும் கொள்ளப்பட்டு, அதற்கு ஒரு ஆதரவும் மதிப்பும் தந்து, அந்த விவாகத்தையும் ஜன ஸமூகத்தார் ஒப்பி

ஏற்றுக்கொண்டு, ஒரு ஜாடையாகப் பார்த்தும் பாராதவிதமாய்ச் செல்லும்படியான ஒரு ஏற்பாட்டினைப் பூர்வகாலத்தார் செய்து வைத்திருந்தபடியினாலே தான், இந்தக் கலப்பு விவாகங்களும் பிற்காலத்தவரின் ஆக்ஷேபனைக்கு இடமின்றி ஸர்வஜன அங்கீகாரம் பெறுவதாக ஆயிற்று. தவிர்க்கமுடியாத சந்தர்ப்பங்கள் நேர்ந்துகொண்டு கட்டாயப்படுத்தப்படும் காலங்களில், அந்தந்தக் காலத்தின் முக்கியத்தைப் பிரதானமாக மதித்து கலப்பு விவாகத்துக்கும் இடம் தந்துவிடுவதாயினர்! அபிவிர்த்தியடைகிற ஒரு ஜாதியாருக்கோ, ஒரு பாஷைக்கோ 'கலப்பு' மறுக்க முடியாதபடி எதிர்படும்போது ஒப்புக்கொள்ளத்தான் வேண்டுமென்று முன்னோர் விதித்து அதன்படியே அதை ஒரு ஜாடையில் விட்டு ஒழுகுவதாயினர் என்றும் காண்கிறது! இவ்வாறாகக் கலப்பு மணம் ஏற்றுக்கொள்ளப் பட்டாலுங் கூட, அதையே விசேஷித்துப் பாராட்டாமலும், அதையே எவரும் அனுசரிக்காமலும், அந்தந்த ஜாதிக்குள்ளேயே கொள்வினை கொடுப்பினை நடப்பதே சிலாக்கியமென்ற மற்றொரு பலத்த கட்டுப்பாட்டினையும் பூர்வீகர்கள் கொண்டிருந்தார்கள்! அதே பலத்த கட்டுப்பாடுதான் நாளது வரைக்கும் நிலைத்து நின்று அந்தந்த ஜாதி ஸமூகத்தவருக்குள்ளாகவே பெண்ணைக் கொடுப்பதும் பெறுவதுமாக ஜாதிகுலம் சிதைந்து போகாமல் அந்தந்த ஜாதிகள் ஒழுக்கமும் சுசிலமும் கொண்டு செழிப்புமாக விளங்கிக்கொண்டு வருகின்றன! ஆகவே, விகடன் இவற்றையெல்லாம் நீள நீள ஆராய்ச்சிகள் செய்துகொண்டு போகும்போது, எங்கோ பத்து லக்ஷத்துக்கு ஒன்றாக நேர்பட்டுக்க்கொள்ளுகிற அபூர்வ சந்தர்ப்பத்தில் இவ்விதக் கலப்பு விவாகத்தையும் அதையும் ஒரு சாஸ்திரோக்தமானதாகவே கொண்டுவிட்டு, மற்றபடி எப்போதும் போலுள்ளவாறு அந்தந்த ஜாதி குலத்தவருக்குள் நடக்கிற விவாகத்தையே மேன்மையாகவும் மதித்துப் பாராட்டிச் செல்ல வேண்டுமென்றும், இதுதான் கலப்புக் கல்யாணத்தைப்பற்றிய—அதை ஒரு ஜாடையாகவிட்டு விடுவதாகிய ரகசியமென்பதுமான முடிவுக்கு வரவேண்டியவனா யிருக்கிறேன்! இந்த முடிவுக்கு என் நஞ்சான் குஞ்சான்களாகிய நீங்கள் வருகிறீர்களோ இல்லையோ! எப்படியோ காந்திகுட்டி கண்ணாலம் நடந்தேறிவிட்டது! ஆகிவிட்ட கல்யாணத்துக்கு விகடன் இனி மங்களம் லாலி பாடவேண்டியதுதான்! இந்த விகடனுக்கும் முந்திய பெரிய 'மஹா விகடதூத' தாதா ஒரு கலப்புக் கல்யாணத்துக்குச் சொல்லிய வாழ்த்துதலை நானும் இங்கு—சொல்லி ஆசி கூறுகிறேன்!

ஃ

ஒளி சூர்யனும் திரு சந்த்ரனும்
உறவானதைப் பாரீர்!
உயர் சோபனம் ஜெயமங்களம்
உரைப்போ மிங்கு லாலி!

பாலுந் தெளி தேனும்
சதி பதியாகின பாரீர்!
பண்ணாரெழில் சுபசோபனம்
படிப்போம் ஜெய லாலி!

மாணிக்கமும் வைடூர்யமும்
மணஞ்செய்வதைப் பாரீர்!
மதிமங்கையீர் படிப்போம்
ஜெய ஜெய மங்களம் லாலி!

அபரஞ்சிபொன் மஞ்சந்தனில்
அமர்ந்தமண மகவர்
சுபசோபன மொடுவாழ்ந்திட
சொல்வோம் ஜெய லாலி!

ராம்! ராம்! சுபம்! சு!! சுவாஹா !!!

எவ்விதமும் என்னைப் பிரியாது!



என் கண்கள் நன்றாய்த் தானிருக்கின்றன; ஆனாலும் நான் எப்படித்தான் அந்த இரண்டணா நிக்கல் நாணயத்தை என் கையால் வாங்கினேனோ, எனக்கே அது விளங்கவில்லை. என் ஜோபியில் கையைப் போட்டுப்பார்த்து சில்லரை எண்ணும்போதுதான் அறிந்தேன் அந்த இரண்டணா நாணயத்தின் மகிமையை. தோசைக்கல் எவ்வளவு மள மளவென்று இருக்குமோ அவ்வாறே அதுவும் பிரகாசித்தது. இன்ன வருஷத்தில் இன்ன இராஜாவின் காலத்தில் அது போடப்பட்டதென்று நம்மைப் படைத்த பிரம்மதேவன்தான் அதிலிருந்து தெரிந்துகொள்ளவேண்டும். எப்படியோ நான் அதை வாங்கியாயிற்று. அதை எப்படியும் நான் இன்னொரு கைக்கு மாற்றித் தொலைத்தாகவேண்டும். இல்லாவிட்டால் மனது கேட்கிறதா? கைக்காசு நஷ்டப்பட யார்தான் சம்மதிப்பார்கள்?

∘∘

எப்படி அந்த இரண்டணா செல்லாக்காசைத் தொலைப்பதென்ற பெருங்கவலை என் மனதில் குடிகொள்ள ஆரம்பித்தது. நான் போகும் இடமெல்லாம் அந்த இரண்டணாவையும் கட்டாயம் எடுத்துப்போவேன். கடைக்காரனிடம் சாமான்கள் வாங்கிவிட்டு என் இரண்டணாக் காசை முதலில் எடுத்து, ஏதோ மற்றொரு சம்பவத்தில் மிகவும் ஊக்கம் கொண்டவன் மாதிரி மறுபக்கத்தில் திரும்பிக்கொண்டே, கடைக்காரனிடம் நீட்டுவேன். கடைக்காரன் அந்த இரண்டணாவை முதலில் உற்றுநோக்குவான். பின் தன் கண்களை நம்பமாட்டான். மற்றொரு தடவைக் கண்களை நன்றாய்த் துடைத்து விட்டுப் பார்ப்பான். அப்போதும் வள வளப்பான தோசைக்கல்தான். எப்படிச் சொல்வது என்று அவன் சற்று தயங்கி "சார் இந்த அணா செல்லாது போலிருக்கிறதே கொஞ்சம் பாருங்கள்" என்பான். நான் அவனை நோக்கி இதுவரையில் இந்த விஷயமே ஏதும் அறியாததுபோன்று, "பஸ் கண்டக்டர் பயல் கொடுத்துவிட்டிருக்கிறான், இதோ வேறு நாணயம்" என்று மற்றொரு நாணயத்தை எடுத்து நீட்டுவேன். கடைக்காரனும் என் மனப் பரிசுத்தத்திற்கு சந்தோஷம் கொண்டு நான் ஏமாற்றயிருந்ததை அறியாமற் போய்விடுவான்.

∘∘

இதேமாதிரி நான் எத்தனையோ கடைகளில் என் இரண்டணாவைக் கொடுத்துப் பார்த்துவிட்டேன். எங்கும் என் ஜாலம் பலிக்கவில்லை. நான் எப்போதும் ஜாக்கிரதையான பேர்வழியாக்கும். இன்று ஒரு கடையில் என் இரண்டணாவைக் கொடுத்துப்

நமக்கு அநேக உதவிகளைக் காலசகாயமாகச் செய்திருப்பவர்கள் சில சமயங்களில் நம்மைவிட்டுப் பிரிந்துபோய்விட நினைக்கிறார்கள். விசுவாசமுள்ள நமது ஹிருதயமோ அந்தப்பிரிவினையைத் தாளாது தவித்து அவர்களையே தேடி ஓடுகின்றது. இது மீண்டும் அவர்களிடமிருந்து ஒரு உதவிபெறும் நோக்குடனன்று. பழய பழகிய மனதின் உள்ளுணர்ச்சியினாலேயே யாகும்.

பரீக்ஷை பார்த்துவிட்டால், அந்த கடை யிருக்கும் தெருவிலேயே மறு முறை எங்கும் பரீக்ஷை பார்க்கமாட் டேன். இல்லாவிட்டால் உதையும் திட்டும் கிடைத்தாலும் கிடைக்கு மல்லவோ?

ஃ

பார்த்தேன், கடைகள் விஷயம் நமக்கு ஒத்துவரவில்லை. பஸ்களில் கொடுத்துப் பார்த்தேன். அவசரத்தில் கண்டக்டர் பையில் எப்படியாவது நுழைந்துவிடுமோ என்று பார்த்தேன். அது நுழையமாட்டேன் என்றது. அப்போதும் நான் என் முயற்சியை விட்டேனு? அதுதான் என்னிடத் தில் கிடையாதே.

ஃ

ரொம்ப காலமாகவே என் இர ண்டணு என்னைப் பிரியாது நான் செல்லும் இடமெல்லாம் கூடவே வந்தது. ஒருநாள் சினிமாக் கொட் டகைக்கு நான் போயிருந்தேன். என் இரண்டணுகாசை எடுத்து கைகளில் வைத்துக்கொண்டேன். இருள் மயம் சூழ்ந்தது. ஆட்டம் மிகவும் மும்மர மாக நடக்கிறது. சோடா, வெற்றிலை பாக்குக்காரன் அவ்விடம் தன் வியா பாரத்தைநடத்திக்கொண்டிருந்தான். எனக்கு யுக்தி தோன்றவே, அவனை அழைத்தேன். இரண்டணுவிற்கு வியாபாரம் பண்ணினேன். என்னு டைய, என்றும் என்னைப் பிரியாத செல்லாத இரண்டணுவை, அவன் கையில் மரிவாற்ருமையுடன் வைத் தேன். அவனும் மறைந்தான்.

ஃ

ஐந்து நிமிஷங்கள் சென்றன. திரும்பவும் சோடாக்காரன் நானி ருந்த இடத்தின் பக்கத்தில் வந்தான். நன்ருய் உட்கார்ந்து கொண்டான். நான் மாத்திரம் அவனையே கவனித் துக்கொண்டிருந்தேன். ஏனென்ருல் என் பிரிய இணைபிரியாத இரண்ட ணுவைப் பலாத்காரமாக அபகரித்த வன் அவனல்லவோ! அவன் என் பக் கம் திருப்பி என்னையும், என் இடது பக்கத்தில் இருந்த இரு கனவான்களை யும், என் முன் பெஞ்சியில் இருக் கும் 4 கனவான்களையும், பின் பெஞ் சியில் இருக்கும் 4 கனவான்களையும் எல்லோரையும் தனித் தனியாக அவர்கள் ஏதாவது அவனிடம் வியா பாரம் செய்தார்களா என்று வினு விக்கொண்டிருந்தான். என்னைத் தவிர மற்றெல்லோரும் தலைபாட்டி விட்டனர். நானும் தலையை அசைத் திருப்பேன். ஆனல் என் மனசாக்ஷி என்னை அவ்வாறு செய்ய ஒட்டாமல் சும்மா இருக்கும்படிச் செய்தது. அப்போதுதான் திரைக்காட்சியில் மிகவும் கவனம் செலுத்துவோன் போல் பாவித்து அதையே உற்று நோக்கினேன். திரும்பவும் சோடாக் காரன் தொந்தரவு கொடுத்தான். நான் விடாக்கொண்டன் என்பது அவனறியான். அவனும் விடாக் கொண்டன் தான். ஏனெனில் திரும்பவும் ஒரு நோண்டு நோண்டி ஞன். நான் மிகுந்த உக்கிரகமான ஒரு பார்வையை வருவித்துக்கொ ண்டு "சும்மா தொந்தரவு பண்ணுதே ஐயா" என்றேன். சில நிமிஷங்கள் மௌனம். அந்த நேரத்தில் அவன் உள்ளமும் என் உள்ளமும் ஒரே வித

தாங்கள் சின்ன சிறுமிகளாக இருந்தபோதிலும்கூட ஆடவர்களிடத் தில் சற்று ஒதுங்கிநின்று தமது மரியாதையைக் காத்துக்கொள்வதே ஒழுங் கும் முன்னெச்சரிக்கையுமாகும். ஆடவர்களிடம் அதிக வார்த்தை வைத்துக் கொள்வதானது பிறகு அவர்கள் தன்னைத்தொட்டுப் பேசவும், அதற்குமேல் போகவும் வைத்துவிடும்.

மாகத்தான் நந்தி பேசிக்கொண்டிருந்திருக்கும். பின்னும் என்னைக் கடைசியாக ஒரு தடவை மிகவும் கெஞ்சின பார்வையாகக் கேட்டான். என் மனசாக்ஷி இரக்கம்கொண்டு "ஆமாம் அப்பா, நான்தான் உன்னுடன் வியாபாரம் பண்ணினவன், அதற்கென்ன?" என்றேன். "சார், நீங்கள் ஒரு செல்லாத இரண்டணாவைக் கொடுத்து விட்டீர்கள் வேறு துட்டு கொடுங்கள் சார்" என்றான். 'நான்தான் அந்த இரண்டணாவைக் கொடுத்தேன் என்று உனக்கு எப்படித் தெரியும்? யாரிடமோ நீ வாங்கியிருக்கலாம். நான் கொடுத்திருக்க முடியாதே" என்று ஒரு சாதனை போட்டுப் பார்த்தேன். அவன் "இல்லைங்கோ சார், நான் அந்தத்தடவையில் தங்களுக்கு மாத்திரம்தான் சோடா முதலியன விற்றேன்; வெளியே போய் துட்டைப் பார்க்கும்போது அது செல்லாததாக யிருந்தது" என்று என் கையில் அந்த, என் இணைபிரியாத இரண்டணாவை வைத்தான். அப்போதும் நான் என் பிகுவை விடாமல் "சரிதானப்பா எந்த கடைப் பயலோ கொடுத்துவிட்டான்; போகிறது போ, இந்தத் துட்டை எடுத்துக்கோ" என்று வேறொரு அணாவை மரியாதையாக எடுத்து அவன் கையில் சமர்ப்பித்துவிட்டேன்.

ஃ

"பழையகுருடி கதவைத்திறடி" என்றபடி அந்த இரண்டணாக் காசு என்னிடமே இப்போதும் இருக்கிறது. அது எவ்விதமும் என்னைப் பிரியாதுபோலிருக்கிறது! நானென்னமோ முயற்சி உடையவன்தானப்பா. ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் நான் அந்த இரண்டணாவைத் தொலைக்கத்தான் செய்வேன். ஆனால், அதற்காக நான் மிகவும் பாடுபடவேண்டி யிருக்கும்போலும்!

S. ஸ்ரீரங்கராஜு.

சிலர் தங்களின் ஊருக்கு வரவேண்டுமென்று ஓயாமல் அழைப்பார்கள். அதைநம்பி வருகிறேன் என்று கடிதம் எழுதினால், அந்தசமயம் வேற்றூருக்கு மெதுவாகச் சென்றுவிட்டு அங்கிருந்துகொண்டு, தாம் இந்தசமயம் தம்மூரில் இல்லாததற்காக மிகவும் வருந்துவதாய்க் கண்ணீர் வடித்துக் கடிதம் எழுதிவிடுவார்கள். இதில் முக்காலணாதான் செலவு. அவர்கள் வந்துவிடின் மூன்று ஐந்துரூபாய் செலவாகுமல்லவா?

ஒரு உத்தியோகஸ்தர் தமது மேலதிகாரிக்கு ஒரு தாசியை ஏற்பாடு செய்து, அவள் இன்னும் அதிக ரூப சோபிதமாய் விளங்கவேண்டுமென்று தமது சொந்தமான இரண்டாயிரம் ரூபாய் பெறுமான நகைகளையும் அணிவித்து உத்தியோஸ்தரின் பங்களாவில் விட்டுவிட்டுக் காலையில் வருவதாகச் சென்றாராம். தாசியோ அதிகாரியுடன் இணங்கிவிட்டு உடனே ரயில் ஏறித் தன் ஊருக்குச் சென்றுவிட்டாள். பிறகு உத்தியோகஸ்தர் காலையில் வந்து பார்த்துத் தாசியைக் காணமல் அவளுடைய ஊருக்குச் சென்று தமது நகைகளைக் கேட்க, 'நகையா? நான் ஏதும் அறியேனே!' என்று கூறிவிட்டனளாம்! இன்ன சங்கதிக்காக அவளுக்கு நகைகளை யணிவித்ததாய்க் கூறவும் உத்தியோகஸ்தரால் முடியவில்லை. மீறித் தெரிவிப்பினோ தமது மேலதிகாரியின் பெயர் வெளிக்குவந்து, அதன் மூலம் தமது உத்தியோகமும் தொலைந்துவிடுமானதால் என் செய்வதென்று ஏங்கினர் என்பதாக ஒரு கதை "இந்துநேசனில்" வெளிவந்துள்ளது. பக்கத்து வீடானாலும் அவ்வீட்டிலுள்ள தாசியின்நட்பு கூடாது.





இன்று கூடிய நமது கடையில் உலக நீதி உத்தமப் பிள்ளை, 'கொடுத்துவிட்டுத் திருப்பிக் கேட்பதைப்பற்றி'ப் பேசினார்." தான் ஒரு பெண்ணை ஒரு இடத்திலே வாழக்கொடுத்ததில், அந்தப் பெண் விரும்பியவற்றை யெல்லாம் அவ்வப் போது அன்புடன் வாங்கித்தந்து சந்தோஷப்படுத்துவது எங்குமே ஸர்வ சாதாரணம். இப்போது ஒரு பட்டுச் சேலையைக் கொடுக்கிறதும், நாளைக்கு ஒரு மனஸ்தாபம் புகுந்துகொண்டால் அதைப் பிடுங்கிக்கொள்வதும், இவ்விதமே இதற்கு முன்பு கொடுத்த சாமான்கள் ஏதாவது இருந்தால் அதைத் திரும்ப எடுத்துக்கொண்டு வந்துவிடுவதும் சில அற்ப மனுஷ மனுஷிகளின் ஸ்வபாவம்! சந்தோஷத்தில் ஒன்றைக் கொடுத்துவிட்டு, அந்த சாக்கில் பலநாள் பலபேருடன் அங்கு தங்கிப் பல செலவுகள் வைத்துவிட்டுப் பிறகு ஏதேனும் சச்சரவுகள் முட்டிக்கொள்ளும்பொழுது பல வருஷங்கட்குமுன் கொடுத்தவற்றையெல்லாம் தரும்படி கேட்பதும், வாய்க்கு வந்தபடி வசைமாரி வழங்குவதும் மெத்த கேடுகெட்ட ஈனச்செயல்களாகும். மனஸ்பூர்வமாகக் கொடுத்துவிட்டதைத் திருப்பிக் கேட்டு வைவதானது, வாந்தியெடுத்தவற்றை மறுபடியும் நக்கிப் பார்க்க எண்ணும் நாயின் சுபாவத்திலும் இழிந்ததே" என்று கூறினார்.

ஃ

நன்னெறி அல்லாப் பிச்சை "தூஷிப்போருக்குப் பதில் வார்த்தை சொல்வதைப்பற்றி" விஸ்தரித்தார். "ஒருவரிடமிருந்து ஒன்றைக்கேட்டு அதை இன்னொருவருக்கு எட்டவிடுவோர் அதிகம். உன்னைப்பற்றி அவர்கள் அவ்வாறெல்லாம் பேசினார்களென்று சொல்வதற்கு வருவோரிடம் அந்த வார்த்தையை நான் செவியில் போட்டுக்கொள்ளப்போவதில்லையென்று தெரிவித்து விடுவதுதான் சரி. உன்னிடம் கூறவந்தோரிடத்தில் ஒன்றைப்பற்றித் தெரிவிப்பின் அது உன் செவிக்கு எட்டும் என்றே தூஷிப்பவர்கள் மேற்கண்டவர்களிடம் கூறுகின்றனர். அதைக் கேட்டு ஆத்திரம் பொங்குவதைவிட, "இனி உங்களிடம் அவர்கள் கூறவந்தால் அதை என்னிடம் தெரிவிக்க முடியாதென்று அவர்களுக்குச் சொல்லி விடுங்கள்" என்று உன்னிடம் கூற வருவோருக்கு நீ தெரிவித்துவைப்பது சிலாக்கியம். மேலும், ஒருவர் உன்னைப்பற்றித் தூஷணையாய்ப் பேசும்பொழுது, அவர் இதற்குமுன் இருந்த நல்ல மாதிரிகளையும், அவர் உனக்குச் செய்திருக்கும் உபகாரங்களையும் நினைவுக்குக் கொண்டுவந்து, இப்போது அவரது மனம் பேதமடைந்து கெட்டுவிட்டிருப்பதற்குப் பரிதாபப்படப் பழகிக்கொள்ளுவது நலமாகும். அன்றியும், உன் மனத்

ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு வியாபாரம் மிகவும் பெருத்து, எல்லோரும் அதையே தொடங்கிக்கொள்கிறார்கள். பிறகு அந்த வியாபாரம் எங்கோ மறைந்து விடுகிறது.

தைப் பரிசோதித்துப் பார்த்து அந்தத் தூஷணைகளுக்கு நீ பாத்திரனல்லவென்று தெரிந்துகொண்டால், அந்த அநியாய வசைமொழிகளைக் கடவுளுக்குத் தெரிவித்துவிட்டு சாந்தப்படக் கற்றுக்கொள். உன்னை வைததற்குப் பிரதிபலன் அவர்களுக்குப் பிறகு கிடைத்துவிடும்" என்று இயம்பினர்.

ஃ


கிராமவாசிகளைப்பற்றிக் கிராம போன் செட்டியார் கூறியதாவது:— "சில கிராமவாசிகளுக்குத் தெரியும் ஸாமர்த்தியம் பட்டணவாஸிகளுக்குத் தெரியாது. பட்டணத்தில் வசிப்போர் அனுவசியமாக வெளியிற் போவதில்லை. வம்புபேசக் கூட்டம் கூடுவதில்லை. எந்த வழக்குக்கும் செல்வதில்லை. யார் எவ்விதமாய் நடந்தாலும் அனுஷ்டித்தாலும் அவ்விஷயங்களில் தலையிட்டுக் கொள்வதில்லை. தங்கள் காரியத்தைக் கவனித்துக்கொண்டு நல்ல நடத்தையோடு காலந்தள்ளுவார்கள். பிறருக்குக் கஷ்டத்தைக் கொடார். கிராமவாசிகளோ யார் வீட்டில் என்ன நடக்கிறது, எவர் வீட்டில் கலகம் சண்டை இழவு, எந்த வீட்டில் கல்யாணம், யாருடைய பேச்சைப்பேசிப் பொழுதைப் போக்கலாம், எந்த மனுஷ்யனைக் கெடுக்கலாம், இல்லாத அபவாதங்களை யார்பேரில் கற்பிக்கலாம், வலுவில் எவரைச் சண்டைக்கு இழுக்கலாம்—என்ற யோசனைகளுடன் வீடுவீடாய் நுழைவதும். ஊரெல்லாம் பொய் வர்த்தமானங்களைப் பரப்பி ஊளையிடுவதுமாக ஆநந்திப்பதே வழக்கம். கிராமத்தில் வசித்துவரும் யோக்கியர்களும், நீதி நியாயம் தெரிந்தவர்களும் இந்த வகுப்பாரின் வாய்க்குப் பயந்து விசேஷகாலங்களிலெல்லாம் இவர்களின் இச்சைப்படி வேண்டியதை யளித்து நல்லவர்களாக்கிக்கொள்ள வேண்டியதாயிருக்கும்" என்றார்.

ஃ

இதைக் கேட்டதும் கிராமவாஸியான கிருதா கிளிமுத்துப்பிள்ளை கோபத்துடன் கர்ஜித்து எழுந்தார். கிராமவாஸியைவிடப் பட்டணத்து வாஸி எவ்வளவோ மோசம்! கிராமவாசிக்கு இரக்க சிந்தையுண்டு. எதிலும் மயங்கிப்போவான். பட்டணவாசியோ பலவற்றிலும் தேர்ந்து பாஸ் செய்தவன். பிச்சைக்காரர்கள் தன்னைச் சுற்றி எவ்வளவு கதறினாலும் மௌனமாகப் பார்த்துக்கொண்டு போய்விடுவானே தவிர, காலணா எடுத்துக்கொடுப்போன் எங்கேயோ ஒருவன்தான்! எப்பொழுதும் பணம் சேகரிப்பதிலேயே திருஷ்டியாக இருப்பான். பேசுவதும் மணியைப் பார்த்துக்கொண்டே பேசுவான். எங்கும் பிரபலமான பேர் வாங்கிக்கொண்டிருந்தாலும், இருக்க சொந்தவீடு நிலங்கள் எதும் இராது. எந்த ஐவேஜியும் உள்ளுக்கு இராது. அதிக வாடகை கொடுத்து மிக்க கனவான்போல் பசுப்புவான். ஒரு பத்துரூபாயைக் கொடுத்துவிட்டுத் திரும்பிப் பெறுவதென்பது வெகு பாடாய் முடியும். சுத்தம், சுசீலம் என்பதும் வெகு அருமையே. வீட்டில் எல்லோரும் பாத்திரங்களை எச்சில் செய்தே பருகுவர். இத்தகையோருக்குக் கிராமவாசியைப் பழிக்க யோக்கியதை யுண்டா?" என்று ஒரு துள்ளு துள்ளிக் குதித்தார். அதிக நேரமாய் விட்டதால் இத்துடன் நமது கடையும் முடிவுபெற்றது.

'பஹதூர் போன்வண்டுசெட்டியார்.

எந்த தேசத்தின் அபிவிர்த்தியும்—மகாஜனங்களுக்கிடையில் மாணவர்கள் செய்துவந்திருக்கிற வேலையின் பலனேயாகும்.



அவர்கள் சம்பாதிக்கிறார்கள், வாரிக்கொண்டு போகிறார்கள். நமக்கு அதில் வந்த லாபமென்னவென்று கோணுகிற புத்தியோடு எதையும் பார்ப்பவர்களுக்குத் தங்களை அறியாமலே ஆத்திரம் குப் குப் என்று வருமாம்!

ஃ

இவர்களெல்லாம் ஏன் இங்கே வந்து சுற்றி வட்டமிட்டுத் தின்று கிடக்கவேணுமோ என்று நினைப்பவர்களுக்கு உள்ளே பகைத்ததன்மையும், வெளியே சிரித்த மூஞ்சியும் இருக்குமாம்!

ஃ

தங்கள் கோபத்தைக் காட்டி அது மதிக்கப்படாமற் போனபோது, அந்த இடத்திலே மறுபடி தன் பற்களைக் காண்பித்துச் சுற்றித் திரிந்து கெஞ்சப் புத்திபோகுமாம்!

ஃ

பிறருக்காகவென்று ஒருவரிடம் அன்பு காட்டுகிறவர்கள் எவ்வளவு விசுவாசக் கொக்குகளாக நடந்தாலும், அவர்களின் போலி அன்பின் வெளிச்சம் தெரிந்துபோகுமாம்!

ஃ

ஓரிடத்திலிருந்து தான் ரகசியமாய் எடுத்ததை மறைக்கிறவன்தான் பிறர் எடுத்த ஒன்றை வெகு யோக்கியமுள்ளவன்போல் வெளியிட்டுத் தன்னை உயர்த்திக் கொள்வானும்!

ஃ

தன்னிலும் அவன் கைதேர்ந்த மனிதன் என்று தெரிகிறபோது, எவ்வளவு ஒட்டிச் சேரத்தான் எண்ணினாலும் தன் கபடப் பொறுமை மனம் பிரிந்துபோய்விடவே ஏவுமாம்!

ஃ

சொல்வதற்கெல்லாம் சரி சரி என்று ஒப்பித் தப்புத்தாளம் கொட்டுகிறவன் நல்லவனும்! எதிர்த்து நல்லது கூறுகிறவன் பொல்லாதவனும்!

ஃ

எவனிடத்தில் தனக்குக் காரியமில்லையோ, அவனுக்குக் கடிதம் எழுதுகிற தொல்லை யில்லாதிருக்க வழி செய்துகொள்ளப் புத்தி போகுமாம்!

ஃ

ஒருவனிடத்திலே நாலு ரகசிய சங்கதிகளைச் சொல்லி விடுகிறது! பிறகு அவனுடைய நாலு ரகசியங்களை இன்னொருவனிடம் வெளியிட்டு விடுகிறது. இத்தகைய ஓட்டை வாயர்களிலே சிலர் விகட சபைக்கு வேண்டுமாம்!

ஃ

தான் என்னவோ மிக்க உழைத்துக் காரியங்களைக் கவனித்து வந்ததுபோலக் காட்ட எண்ணுகிறவன் மற்றவர்கள்மீது பலதப்புப்புகார்களைக் கூறியே தன்னை மேன்மைப்படுத்திக் கொள்ளவேணுமாம்!

ஃ

உமது வார்த்தை ஒரு பேச்சாகாது என்று ஒருவனை மற்றொருவன் தாழ்த்திப்பேசும்போது, அவனை ஒருபொருட்டாக மதிக்காமலே எழுந்து சென்றுவிடவேண்டுமாம்!

ஃ

பிறர் வியர்க்க வியர்க்க வேலை செய்யும்போது அங்கு நிற்காமல் ஜாடையாக வெளியில் போய்விட்டு, வேலை முடிந்த பின்பு மறுபடி வந்து கூடிக்குந்திக்கொள்ள வேண்டுமாம்!

ஃ

எவர்கள்மீது உள்ளுக்கு எரிச்சலோ, அவர்களுக்கே சில சமயங்களில் ஏமாறிப்போய் பல செலவுகள் செய்துவிடும்படியாக நேர்ந்து கொள்கிறதாம்! பிறகு என் செய்தோமென்று விரலைக் கடித்துக்கொண்டு ஏங்கவைக்கிறதாம்!

மிளகின் பழய நாள் கதை.

மிளகின் விலையை டச்சுக்காரர்கள் இங்கிலாந்தில் வெகு அதிகமாய் எற்றியிராவிட்டால், ஆங்கிலேயர் இந்தியாவைக் கட்டிக்கொள்ள நேர்ந்திராதென்பதற்கு சரித்திரத்தில் ஆதாரமில்லாமற் போகவில்லை. 1599-ஆம் வருஷத்தில் டச்சு குடியேற்றக்காரர்கள் குடித்தன பண்டமாகிய மிளகின் விலையை இங்கிலாந்தில் 3-ஷிலிங்கிலிருந்து பவுன் ஒன்றுக்கு—8 ஷிலிங்காய் உயர்த்திவிட்டார்கள். அக்காலத்தில் இந்தியாவோடு வர்த்தகஞ்செய்து கொண்டிருந்தவர்கள் டச்சுக்காரர்களே யாதலால், இத்தேசத்தின் விளை பொருள்களுக்கு மேல் நாடுகளில் அவர்களிட்டதே விலையாகவிருந்தது. இப்படிப்பட்ட நஷ்டங்களையும் சங்கடங்களையும் உணர்ந்து ஆங்கிலேய ஜனங்கள் அவைகட்குத் தக்க பரிகாரந்தேட முயன்றார்கள். லண்டன் நகரத்தில் வர்த்தகர்கள் லார்ட் மேயரின் அக்கிராசனாதிபத்தியத்தின் கீழ் கூட்டங் கூடி ஆலோசனை செய்ததின் பயனாக, இந்தியாவுடன் வியாபாரம் நடத்த ஆங்கிலேய வர்த்தகச் சங்கமொன்று ஸ்தாபிக்கப்பட்டது.

இந்தியாவின் விஷயம் ஆங்கிலேயரின் கவனத்தை நெருங்கிப் பற்றுவதற்கு அநுகுணமாக அதே சமயத்தில் பின்னுஞ் சில சம்பவங்கள் நேர்ந்தன. வர்த்தகப் போட்டியும் பகையும் மிகுந்தவர்களாய் அம்பாலாவிலிருந்த டச்சு வர்த்தகர்கள் 1623-ம் வருஷத்தில் ஒன்பது ஆங்கிலேயரையும் ஒன்பது ஜப்பானியர்களையும் கொலைசெய்து விட்டார்கள். இந்தக் குரூரமான கொலையைப்பற்றிக் கேள்விபட்டபோது ஆங்கிலேய ஜனங்கள் மிகுந்த ஆத்திரங் கொண்டார்கள். இந்தியா நாட்டின் விஷயத்தில் அவர்களின் கவனமும் கவலையும் அதிகமாயிற்று. அதுவரையில் ஸ்பைஸ்தீபங்கள் வரைக்குமே வந்திருந்த இங்கிலீஷ் வர்த்தகர்கள் கொரமாண்டல் கரைகளில் வந்திறங்கினார்கள். இங்கிலீஷ் வர்த்தகக் கம்பனியார் மதராஸ் பட்டணத்தில் ஆதிபத்தியத்தை யடைந்தபின் தங்களுடைய எதிர் போட்டிக்காரர்களைத் தலையெடுக்க வொட்டாமற் செய்ய முயன்று அவ்விதமே கடைசியாய் வென்றார்கள் டச்சுகொடிமறைந்தது.

முந்திய காலத்தை நாம் சற்று திருஷ்டிப்போமானால், கிருஸ்டபர் கொலம்பஸ் ஸ்பெயின் ராச்சியத்தின் ஆதரவில் அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் பிரயாணஞ் செய்ததாக அறிவோம். அப்படிக் கொலம்பஸ் 1492-ம் வருஷத்தில் யாத்திரை செய்தது இந்தியாவைக் கண்டுபிடிக்கும் நோக்கத்தினாலேயே யாகும். அட்லாண்டிக் சமுத்திரத்தை தாண்டினால் இந்தியாவைச் சேரலாமென்று அப்போது நம்பப்பட்டது. ஆனால், கொலம்பஸ் இந்தப் பிரயத்தனத்தில் வெஸ்ட் இந்தீசை (அமெரிக்கா) தப்பிச் சேர்ந்தான். கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தது இவ்விதமாகவேயாம்.

ச. முனிஸ்வாமி பிள்ளை.

சரஸ்வதி சபைத்தலைவர் டர்டன்.

செலவுக்குக் கேட்டுப் பெறுவது.

வந்த சம்பளத்தை அப்படியே மனைவியிடம் தந்துவிட்டு, அவ்வப்போது தனக்கு வேண்டிய சமயங்களில் அவளிடம் கேட்டுப்பெறுவது சிலர் வழக்கம். இது செலவிட்டு நிர்வகிக்கும் கஷ்டம் தனக்கு இருக்கக் கூடாதென்று செய்வதாகும். வேறு சிலர் பிறரிடம் கொடுத்து வைத்துப் பல சில்லரையாகக் கேட்டுப் பெறுவதுண்டு. சில சமயங்களில் இவர்கள் தாங்கள் கொடுத்ததற்கு அதிகமாகவே வாங்கி ஏமாற்றி விடுவதுமுண்டு. சில சமயங்களில் அந்தப் பிறர் ஒரு கணக்கைச்சொல்ல இவர்கள் ஒரு கணக்கைச் சொல்ல, அதில் மனஸ்தாபம் ஏற்பட்டு, அந்தப் பிறர் தன் பணத்தை அபகரித்துக்கொண்டு பொய்க் கணக்கைக் கூறினரென்று பழிப்பதுமுண்டு. சுதந்திர நினைவுள்ள சிலர் ஒருவரிடம், மனைவியிடங்கூடக் கொடுத்து வைத்துக் கேட்க விரும்பாமல், தம் கையிலேயே பணத்தை வைத்துக் கொண்டு தம் இஷ்டப்படிச் செலவிடுவர். இதில் எந்த மனஸ்தாபமும் வர வழியில்லையாதலின் இதுவே சிறந்ததாகும். சிலர் பிறரிடம் ஒரு ரூபாய் கொடுத்துவைத்துவிட்டு, அப்பால் வெகு அவசரம் போல வந்து; "உங்களிடம் என்னுடைய ஒரு ரூபாய் இருக்கிறதல்லவா? இப்போது ஐந்து ரூபாய் கொடுங்கள்; நாளை நான்கு ரூபாயையும் திருப்பிக் கொடுத்து விடுகிறேனென்று நம்பிக்கையாகக் கூறிப் பெற்று பிறகு தாமல் ஏமாற்றி விடுவர்.

பித்தலாட்ட அண்ணாத்தைகள்.

இவனால் அவன் ஏமாறியவன். அவனால் இவன் ஏமாறியவன். ஒருவனை யொருவன் ஏமாற்ற வேண்டுமென்று நினைத்தே ஏமாற்றினார்களோ, அல்லது அகஸ்மீகமாய் எதிர்பாராதவிதமாக ஏமாறும்படி நேர்ந்ததோ யாதோ! எப்படியானாலும், இருவரும் ஒருவரை யொருவர் நம்பி ஏமாறியது உண்மை. இப்படி ஏமாறிப் பிரிந்த இருவரும் பிறகு ஒருகாலத்தில் ஒரு சங்கதியில் சேர்ந்துகொண்டு வேலை செய்யவேண்டி வரும்போது தாங்கள் முன்பு ஏமாறியதை இருவருமே மறப்பதில்லை. மறுபடியும் ஏமாற்றப் படுவோமோ, என்ற கவலை ஒரு பக்கத்திருப்பினும் அதை மறைத்துக்கொண்டு இருவருமே புது சங்கதியில் சேர்ந்து ஒருமித்து வேலை செய்கிறார்கள்.

ஃ

இவ்விதமே, தன் தங்கையைக் கொடுத்த இடத்தில் அவன் கணவன் தன்னையும் தன் பெற்றோர்களையும் அவமானப்படுத்திக் கேவலம் செய்துவிட, அந்த மனஸ்தாபத்திலே அந்த வீட்டையே அடியோடு ஒழித்து மறந்து தங்கள் பெண்ணையும் திரும்பிப் பாராதிருந்துவிட, இப்படியே வெகு காலம் சென்றுவிடுகிறது. பெண்ணின் பெற்றோரும் காலமாகி விடுகின்றனர். அப்பெண்ணும் ஒரு ஆண் குழந்தையைப் பெற்றுவிட்டுக் கடவுளிடம் சென்றுவிடுகிறாள். அவன்

குமாரனுக்கு இப்பொழுது வயது வந்து, அவனுக்கு விவாகம் செய்வதற்காக அப்பெண்ணின் தமயனிடம் அப்பெண்ணின் கணவன் வருகிறுன். வெகுகாலத்திற்குப் பிறகு வந்த தன் தங்கையின் கணவனை உபசரித்து, தன் குமார்த்தியைத் தன்தங்கையின் குமாரனுக்குக் கேட்கவந்திருப்பதை யறிந்து, முன்பு தங்கையைத் தந்து பட்டபாடு போதாதா? இப்போது தன் குமார்த்தியையும் அந்த இடத்திலேயே தரவேணுமா என்று வெறுப்புடன் உள்ளுக்குள் எண்ணமிட்டாலும் வெளிக்குச் சிரித்தபடி யிருக்கிறுன். பெண்ணின்புருஷனே. தான் முன்பு செய்த அவமானக் கொடுமைகளை இப்போது எண்ணி அதை ஏதாவது நினைத்துக்கொண்டு தர மறுத்துவிடுவார்களோ என்று தன்னில்தானே எண்ணமிட்டபடி வெளிக்குமட்டில் புன்னகையுடன் நிற்கிறுன். இருவரும் தங்கள் மனதில் நினைத்தவற்றை வெளியிற் சொல்வதில்லை. மேலுக்குமட்டும் வெகு அன்பாகக் குலாவுகிறுர்கள். விருந்துகளும் நடக்கின்றன. கடைசியில் இருவரும் தங்களின் உள்ளத்தை மறைப்பவர்களே! எவ்வளவு நேரம் மறைப்பது? கடைசியில் தமயன் தன் குமாரத்தி பெரியவளான பின்பே யோசிக்க வேண்டுமென்றும், அதற்குள் விவாகப் பேச்சைப் பேசத் தனக்குப் பிரியமில்லை யென்றும் ஜாடையாய்ச் சொல்லிவிடுகிறுன். சரி, இவன் தன் குமாரத்தியைக் கொடுக்க மாட்டான் என்று அவனும் ஜாடையாகத் தெரிந்துகொண்டு, மேல் பேச்சாக, உன் குமாரத்தி பெரியவளானபிறகு வந்து கேட்கிறேன்; அப்போதாவது தரவேண்டும் என்கிறுன். மற்றவனும் தந்திரமாக, "பிராப்தம் இருந்தால் விட்டுப் போகுமா? என் தங்கையின் குமாரன் என் குமாரத்தியை மணக்க வேண்டு மென்றிருந்தால் நான் தடுத்தாலும் நடந்தே தீரும்" என்கிறுன். கடைசியில் அவன் சமாதானமாகவே விடையெற்று ஊர் போகிறுன். இதில் இருவரும் தம் உள்ளத்தை வெளியிற் காட்டாது மறைந்த கபட மணிகளே!

ஃ

ஒருவன் தன் மைத்துனன் வீட்டில் விருந்தாளியாக வந்திருப்பவனிடம் வெகு அவசரமாய் மூன்றுரூபாய் கேட்கிறுன். விருந்தாளியோ இல்லையென்று சொல்லமுடியாமல் அப்படியே தருகிறுன். பிறகு அந்தப் பணம் திரும்பி வருவதேயில்லை. விருந்தாளி இதைத் தான் இறங்கியுள்ள வீட்டில் தெரிவிக்க, அவர்கள் அவருக்கு ஏன் பணம் கொடுத்தீர்கள்; வரட்டும் கேட்கிறேம் என்று இவன் கண்ணைத் துடைக்கிறுர்கள். பணம் பெற்றுச் சென்றவனே விருந்தாளிக்குத் தன் மைத்துனனே தரட்டுமென்று ஜாடையாய் இருந்துவிடுகிறுன். மைத்துனனே அவன் வாங்கிப்போன கடனைத் தான் ஏன் தரவேண்டுமென்று அதில் பட்டுக்கொள்ளாமல் இருந்து விடுகிறுன். கடைசியில் விருந்தாளி ஏமாறிப்போய் ஊர் புறப்படும்படியாகிறது. இது ஒருவித ஏமாற்றுதல் தினுசு! இதில் அவரவரும் தம் உள்ளத்தை மறைப்பவரே! விருந்தாளி தான் ஏமாறித்

சிலர் வெளிக்குமட்டும் சுகதேகிகள் போன்றுங் காணப்பட்டு, உள்ளுக்கு ஓயாமற் பலவகைப்பிணிகளால் வருந்துவோராயிருக்கிறுர்கள். வேறு சிலரோ எவ்வித ரோகமு மின்றி ஆரோக்கிய ஸம்பன்னர்களா யிருக்கிறுர்கள். சிலர் பஹிரங்கமாகவே தீராப்பிணியாளிகளாகின்றனர். யாவும் அவரவரது பாவ புண்ய பலனே.

தந்தையை, அதைப் பெற்றவனுடைய மைத்துனனான அவ்வீட்டுக்காரன் கொடுத்துவிட மாட்டானா என்று உள்ளுக்குள் எண்ணமாயினும், அதை வெளியில் காட்டிக்கொள்வதில்லை!

ஃ

ராமன் ரங்கனுக்குத் தன் பெண்ணைக் கொடுத்துப் புண்பட்டு ஏமாறியவன். ரங்கனோ ராமனுக்குத் தன் பணத்தைக்கொடுத்து இழந்து நொந்து ஏமாறியவன். இந்த இரண்டு ஏமாற்றக்காரர்களும் பிறகு ஒரு காலத்தில் ஒன்று சேர்ந்து ஒரு காரியத்தை முடிக்கவேண்டி யிருப்பதில், ஒருவரிடம் ஒருவர் ஏமாறிப் போகாதபடியிருக்க, வெகு ஜாக்கிரதைப் பட்டுக் கொள்கிறார்கள். ஆனால், அப்படித் தாங்கள் ஜாக்கிரதையாக இருப்பதை இருவரும் வெளியிட்டுக் கொள்வதில்லை. மேலுக்கு மட்டும் வெகு ஒற்றுமையாகக் காணப்படுகிறார்கள். உள்ளுக்கோ வேற்றுமனத்தினர்கள் தான்! கடைசியில் இருவர்களும் கபடஸ்தர்களே!

ஃ

ஒருவன் தன்னை வெகு யோக்கியன்போல் காண்பித்துக்கொண்டு தன்னுள்ளே யிருக்கும் வஞ்சகத்தை மறைக்கிறான். அவனிடம் வந்தவனோ அவன் வஞ்சக மோசக்காரன் என்பதை யுணர்ந்தாலும், வெளிக்கு மிகவும் அவனைக் கௌரவித்துப் பேசிக் கொண்டாடுகிறான். முடிவில் இருவரும் பொய்யரே! இவ்வுலகமே பெரும்பாலும் இத்தகைய பித்தலாட்ட அண்ணாத்தைகளாலேயே சூழப்பட்டிருக்கிறது. சத்தியவந்தர்கள் எங்கேயோ ஒருவர்!

பிறரிடம் ஒரு உதவியைப்பெற்றால் அவர்கள் அதன் மூலமாக எங்கே தம்மிடம் நெருங்கி வந்துவிடுகிறார்களோ வென்று அஞ்சி, அந்த உதவியை விரும்பாமலே மறுத்துவிடுகிற முன்யோசனைக்காரர்களும் சிலர் உண்டு. நீ, நீர் என்கிற பதப்“பிரயோகம் மிக்கத் தாழ்வானது. அதிகார தோரணையிலுங்கூட “நீங்கள், தாங்கள்” என்ற பதத்தை உபயோகிப்பதே சிலாக்கியமாகும்.

சுவானத்தை மெத்தையில் படுக்கும்படி உபசரிப்போர் சிலர். மடியில் போட்டுக்கொண்டு முத்தமிடுவோர் சிலர். வண்டியில் வைத்துக்கொண்டு திரிவோர் சிலர். அதற்கு நல்லுடைகளைத் தரித்து, ஆபரணங்களைமூட்டி அழகு பார்ப்போர் பலர். தயிரும் சோறும்வைத்து உண்ணும்படி உபசரிப்போர் சிலர். நாயைத்தேய்த்து ஜலத்தில் முழ்குவித்து சுத்தமாக்குவோர் பலர். இவ்விதம் எவ்வளவு உபசரிப்பினும் மலத்தை முகர்ந்துபார்க்கிற நாயின் புத்தி அதை விட்டுப்போவதில்லை. மனிதர்களுடம் இவ்விதமே சிலர் உண்டு.

ஒரு நியாயாதிபதியோ, ஒரு பத்திராசிரியரோ தமது கையில் எழுதுகோலைப் பிடித்தவுடன் ஒரு புதிய தனிமனிதர்களாக மாறி விடுகிறார்கள். அப்பொழுது எவரும் அருகில் நெருங்குவதற்கு முடிகிறதில்லை. அந்தவேலை முடிந்தபின்னர் அவர்கள் சாமான்ய மனிதர்கள்போன்று எவருடனும் குலாவத்தொடங்கி விடுகிறார்கள்.

தான் மறைத்த ஒன்றை மற்றவர் மறைவிலிருந்து கண்டுவிட்டு நேரில் அதைச்சொல்லிக் காட்டும்போது எத்தகைய சாதுவுக்கும் உள்ளம் கொதித்து எரிந்துவிழவே செய்யும்.

பகல் வேஷ சாமர்த்தியங்கள்!

பிச்சைக்காரர்கள் வெகு லச்சைக்காரர்கள்! இதில் பக்தி வேஷக்காரர்கள் இன்னும் பெரிய ரோசக்காரர்கள்! பிக்ஷை என்கிற பெயரை நீக்கி "அக்ஷயபாத்திரை" என்பார்கள்! இவ்விதமே பழனியாண்டவன் காவடி என்றும், அன்னக்காவடி என்றும் ஏமாற்றுவார்கள். அநேகமாய்ப் பிறரிடம் தமது பொய்ப் பரிதாப நிலையைக் காட்டி அவர்களின் மனத்தில் இரக்க வருத்தத்தை யுண்டுபண்ணி, அவர்கள் கொடுக்கும் பொருளைப் பெறுதற்கு ஏதேதோ மாயவித்தை, ஜால வித்தை, பக்தி வித்தை செய்கிறது பிச்சைக்காரர்களின் வழக்கம்.

ஃ

நாம் உத்ஸவகாலங்களில் கோயில்களில் எத்தனை ரோகங்களையும் விகாரங்களையும் காண்கிறோம். கண்ணில்லாக் குருடரைப்போலும், நொண்டிகளைப்போலும், நோய் நொடி பிடித்தோரைப் போலும், நாமத்தையும் ஸ்ரீ சூர்ணத்தையும் பயங்கரமாய் நெற்றி முழுதும் பூசிப் பரமபாகவதரைப்போலும் அநேகம் பெயர்கள் பிச்சை எடுக்கிறார்களல்லவா! சாஸ்திரஞானம் ஏதுமே அறியாத "லைஸன்ஸ்" பூஜ்யங்களாகிய நம்மவர்களுக்குள்ளேயே இவ்வளவு தந்திரங்களும் அயோக்கியதைகளும் நடையாடுவனவாயின், வஸ்துக்களுடைய சேர்க்கைகளும், இயற்கைகளும், ரஸாயனமுறைகளும் அதற்கேற்ற கல்வியும் செவ்வனே அறிந்துள்ள அந்நிய நாட்டுப் பிச்சைக்காரர்கள் பாசாங்கு செய்வதென்றால் கேட்க வேண்டுமோ?

ஃ

1. குருட்டு வேஷக்காரர்கள்:— தமக்குக் கண் தெரியவில்லை யென்று அநேகர் ஐரோப்பாவில் மஹா ஸாஹஸ சமத்காரங்களோடு தமது மறைப்புத் தொழிலைச் செய்து வருகிறார்கள். இவர்கள் "ஈஸரைன்" என்னும் மருந்தைக் கண்ணுக்குள் விட்டுக் கொள்வதனால் 'பாபா' மிகவும் சிறுத்துவிடுகின்றது. கண்ணில் அதிக உபத்திரவ முண்டென்றும், டாக்டர்கள் அதைச் சொஸ்தப்படுத்துவது முடியாதென்றும் சொல்லிக் கைவிட்டு விட்டார்களென்பதாய்ப் பரிதாபமாகக் கதறுவார்கள். கேட்டவர்கள் மனம் இறங்கி, கையிலுள்ள துட்டைக் கணத்திற் கொடுக்கவும், உடனே வாங்கிக்கொண்டு மனமகிழ்ந்து மறுகணத்தில் வேஷக்காரத் திரிதராஷ்டிரப் பாவிகள் மறைந்து விடுவார்கள். இவர்கள் கண்களிலே விட்டுக் கொள்ளுகிற மருந்தானது யாதொரு துன்பமும் செய்யாமல் பழையபடி குணமான நிலையைக்கு வந்துவிடுகின்றனவாம்.

ஃ

தனக்குச் செய்யத் திறனில்லாமற்போயினும், பிறனொருவன் புதிதாய்த் தொடங்கிய வியாபாரத்தைப் பழித்துப் பேசி அதில் நஷ்டம் வருமென்று கூறுவோருக்குக் குறைவில்லை.

2. செவிட்டு வேஷக்காரர்கள்:—சிலர் சமயங்களில் செவிடர்களென்று பக்காவேஷம் போடுகிறார்கள். அதிக செவிடாயிருப்பவன் சாதாரணமாகப் பெரிய ஊமையாக இருப்பான். பிறர் பேசும் வார்த்தையைக் கேட்க முடியாதிருப்பதால் தான் ஊமையாகின்றனர். மற்றபடி செவி நோய் என்பது இரத்த சம்பந்தமுள்ள நெருங்கிய பந்துக்களுக்குள் தானே விவாகங்கள் செய்வதால் உண்டாகின்றதென்பர். ஊழ்வினையாலும் நேருவதுண்டு. இவைபோக, இனி மேனாட்டு வேஷக்காரர்களைக் கவனிப்போம். செவிடர்கள் என்று வேஷம் போடுகிறவர்கள், தங்களின் பிரட்டைக் கண்டுபிடிக்க முடியாதிருக்கும்படி வெகு ஜாக்கிரதையாயிருப்பார்களாம். அவர்களின் பின்புறத்தில் நின்று துப்பாக்கிகொண்டு சுட்டாலும், கண்ணாடியை வெடிக்கச் செய்தாலும் எதற்கும் நகராமல் ஒன்றுக்கும் பிசகாமல் அந்த சப்தத்தையே அறியாதவர்கள்போல் நடித்து நின்ற நிலையில் இருப்பார்கள். இவ்வகுப்பினரைச் சேர்ந்த ஒரு வேஷக்காரனை ஒரு டாக்டர் மிகச் சமத்காரமாய்க் கண்டுபிடித்தார். அது பின்வருமாறு:—ஒரு வேஷச் செவிடனைப் பல முறைகளிலும் அவர் பரிசோதித்தார். வேஷக்காரன் சர்வ ஜாக்கிரதையாய் எல்லாவற்றிற்கும் 'ஈடுகொடுத்துக்கொண்டு' ஒன்றுமே தனக்குக் கேட்காதவன்போலிருந்தான். அவன் அயர்ந்து தூங்கும்போது, ஒரு போலீஸ் உத்தியோகஸ்தரை மேற்படி டாக்டர் வரவழைத்து, கொலை செய்த குற்றத்திற்காக வாரண்டுடன் வந்திருப்பதாய்ச் சொல்லச் செய்து திடீரென்று அவனை "காபரா" படுத்தச் சொன்னார். போலீஸ் உத்தியோகஸ்தர் அவ்வாறு செய்ததும், அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த மாயவேஷக்காரன் அச்சொற்களைக் கேட்டுவிட்டுத் தன் வேஷத்தை மறந்துபோய், திடீரென்று விழித்து, "ஐயோ! அக்கோ! ஏது! எங்கே! நான் கொலையொன்றும் அறியேனே! என்று கூறியவண்ணம் விழித்துத் திகைத்தானும்!

ஃ

வேறு ஒரு திருடன் செவிட்டு வேஷம் போடுபவன், டாக்டர் அவனைச் செய்த பரீக்ஷைகட்கெல்லாம் உட்பட்டிருந்து, தான் ஜெயித்ததாய் நினைத்துக்கொண்டு வெளியே போகும்போது, முன்னதாகவே டாக்டர் செய்திருந்த ஏற்பாட்டின்படி, அங்கிருந்த சேவகன் "வலது பக்கமாகப் போ" என்று மெதுவாய்ச் சொன்னானும். தன்னைப் பரீக்ஷை செய்தாய் விட்டதென்று நம்பிக்கையாய்ப் போன வேஷக்காரன் தான் பூண்டிருக்கும் வேஷத்தை மறந்துவிட்டு சேவகன் சொன்னதைக் கவனித்து அப்படியே வலப்பக்கமாய்த் திரும்பினானும். இவ்வாறு அதிக கெட்டிக்காரத்தனமாய் சில டாக்டர்கள் இந்த வேஷக்காரர்களைக் கண்டுபிடித்திருக்கின்றனர்.

ஃ

சண்டைக்குச் செல்லாமலிருக்க விரலைச் சுட்டுக் கொள்ளல்:—மேனாடுகளில் சில தேசங்களில் ஒவ்வொருவனும் கட்டாயமாய் யுத்தத்திற்குச் செல்லவேண்டுமென்கிற நிபந்தனையிருக்கிறது. இதனின்றும் தப்பித்துக்கொள்வதற்கே முக்கியமாய் அத்தேசங்களில் அநேக பாசாங்குகள் செய்கிறார்கள். துப்பாக்கி வாயில் 'ஆள்காட்டி' விரலை வைத்

துக்கொண்டு தாங்களே மேற்படி விரலைச் சுட்டுக்கொள்வதுண்டு. இவ்வாறு செய்வதனால் யாதொரு நோயில்லாமலும் தொந்தரையில்லாமலும் அந்த விரல் அறுபட்டுப்போகும். ஆனால், அதில் ஒருவித கருநிறம் தோன்றுவதனாலும், வெடிமருந்து ஒட்டிக்கொண்டிருப்பதனாலும் அவர்கள் செய்த பாசாங்கு சில வைத்தியர்களால் கண்டு பிடிக்கப்பட்டது. இவ்வாறு சண்டைக்குப் போகாதிருக்க வேஷம்போட்டதன் நிமித்தமாக அது பெருங்குற்றமாகக் கருதப்பட்டு அவர்களில் அநேகர் மரணதண்டனைக்குட் படுத்தப்பட்டதுமுண்டு.

ஃ

4. பார்ஸவாயு வேஷக்காரன்:—சிலபேர் தங்களுக்கு ஒரு பக்கம் பார்ஸ வாயுவால் அசைக்கமுடியாமல் அவஸ்தையாயிருக்கிறதென்று பாசாங்கு செய்கிறதுண்டு. இதைக் கண்டு பிடிப்பது வெகு கஷ்டமென்று சிலர் சொல்லுகிறார்கள். ஒரு ஆஸ்பத்திரியில் இந்த நோயால் வருந்துவதாகப் பாசாங்கு செயத் ஒருவன் வந்து சேர்ந்தானாம். அங்கு இருந்த டாக்டர் இவன் விஷயத்தில் சந்தேகமடைந்து, இவனது உள்ளங்காலில் இருந்தாற்போலிருந்து கூச்சமுண்டாகும்படிப் பலமாகச் சொரிய எதடாவென்று திகைத்துக் காலைத்தூக்கி விட்டானாம். வேறு சிலர் இதற்குங்கூடச் சமாளித் திருந்தாலும், எலெக்ட்ரிஸிடியைக் காலில் ஏற்றுவது என்பதாலும், ஊசியால் ஏற்றுவது என்பதாலும், உள்ளே திகில் அடைந்து ஜாடையாய் ஓடிப்போகிறதுண்டாம். ஒரு பார்ஸவாயு வேஷக்காரனைப் பார்த்து ஒரு டாக்டர் நல்லமாதிரியாகவே, "ஐயா, தங்களுக்குக் காலில் உணர்ச்சி யில்லாததனால் யாதொரு தொந்தரையும் உண்டாகமாட்டாது; எவ்வித உபத்திரவமுமின்றி இந்த இரும்பு ஊசிக்கம்பியை மெதுவாய்க் காலில் ஏற்றிவிடுகிறேன். அது தங்களைச் சொஸ்தப்படுத்திவிடும்" என்று சொல்லவே, அவன் அதற்குச்சம்மதியாது, சிறிதுபோதுக்கு கெல்லாம் கால் சௌக்கியமா யிருக்கிறதென்று சொன்னானாம்.

ஃ

பிரமைநோயும், பிரமாத வேஷமும்:— சிலர் பிரமைநோயால் இல்லாத நோயெல்லாம் தம்மிடம் குடிகொண்டிருக்கிறதென்று தப்பெண்ணம் கொள்ளுகிறார்களாம். இது உண்மையில் மனதைப்பற்றின நோயாகும். இதுதான் நமது ஊர்களில் பேயென்றும், பிசாசென்றும், காட்டேரியென்றும், கருப்பண்ணன் என்றும் ஆடிப்பாடி அதற்கென்று சில மூடர்கள் கூடிக்கொண்டு ஆர்ப்பாட்டம் செய்து, கோவிலுக்கும் குளத்திற்கும் ஓடச்செயவதாகும். இது சம்பந்தமாய் உண்டாகும் காக்கைவலி, பனிக்கட்டி போன்று பல்லைக்கிட்டும் குளிர்ந்த ஜலத்தில் பதைக்கப் பதைக்கக் குளிப்பாட்டுவதால் பரிகாரமாய் விட்டதாம். சிலர் பேச்சு மூச்சற்று செத்தாப்போலிருந்து விடுகிறதுமுண்டாம். இவையெல்லாம் ஊமையாக மனதைப்பற்றிய வியாதிகளென்று தேர்ந்த டாக்டர்கள் கூறுகின்றனர். ஒருவன் வாஸ்தவத்தில் இறந்துவிட்டானென்று டாக்டர்கள் தீர்மானித்து, அவனது தேகத்தைஅறுத்துச் சோதிக்கவேண்டுமென்று ஒரு டாக்டர் கத்திவைத்தறுக்க ஆரம்பிக்சுவும், "அப்பா! ஐயா!" வென்று அவன் எழுந்து துடித்துப் பதைத்தானாம். டாக்டர்களையும் ஏமாற்றும் சாமர்த்தியம் என்ன விநோதம்! இவையெல்லாம் அதிகப்படிப்பின் தேர்ச்சியினால் செய்யப்படுபவைகளாகும். ஒழுக்கமில்லாத கல்வியினாலுண்டாகும் பயன் துன்மார்க்கத்தைத் தவிர்த்து வேறென்ன?

குழந்தைகள் பக்கம்

என் இரு ஸகோதரர்களின் கதி.



நான் ஒரு பூனைக் குட்டி, என் தாய்க்கு நாங்கள் மூவர் பிறந்தோம். தாய்ப்பாலையுண்டு வளர்ந்தோம். என் பிரியமான அன்னை எங்களைத் தேகமுழுதும் நக்கி அழுக்குகளைப் போக்கி சுத்தம் செய்துவைக்கும். நாங்கள் இருந்த வீட்டிலும் எங்கட்குப் பால் ஊற்றி மிக்க அன்பாக இருந்தார்கள். என் அண்ணனுக்குப் பாதி உடம்பு கருத்திருக்கும். அவனை ஒரு துஷ்டநாய் கவ்விப்போய்க் கொன்றுவிட்டது! ஆ! ஒரு சகோதரனை இழந்துவிட்டேன். என் தாய்க்கு மிக்க துக்கமாகிவிட்டது. பின் என் மற்றொரு தமயனுடன் கூடிக் குலாவி விளையாடி மகிழ்ந்தவாறிருந்தேன். அவனும் நானும் வேடிக்கைச் சண்டைகளிட்டும் ஒருவரையொருவர் விளையாட்டாகக் கடித்துக் கொண்டும் இன்புறுவோம். நான் என் அண்ணாவின்மீது படுத்து ஆநந்தமாய்த் தூங்குவேன். உடற்பிறப்பான அண்ணனை ஒட்டிக்கொண்டு அவன்மேல் சாய்ந்து தூங்கும் இன்பத்தின் ருசியையும் காணலானேன்.

ஃ


இவ்விதம் நாட்கள் மிக்க இன்பமாகச் சென்றுகொண்டிருந்தன. எங்களின் தாய் எங்கெங்கோ சுற்றிவிட்டு எங்களின் இருப்பிடத்திற்கு வரும். நாங்கள் இருந்த வீட்டினர் எங்கள் இருவரையும் வெகு சிரத்தையுடன் கவனித்து ஆகாரம் கொடுத்து வந்தனர். எங்களை எடுத்துக் கொஞ்சுவோரும் அநேகர். சிறுவர் சிறுமியர் எங்களுடனும் விளையாடுவர். இவ்வாறு உல்லாஸமாகப் பொழுது போக்கிவரும் நாளில், ஒரு நாள் மாலை வேளையில் நானும் என் தமயனும் அறைக் கதவைத்தாண்டி அப்பால் திரிந்துகொண்டிருந்தோம்! ஐயோ! அப்பொழுது திடீரென்று ஒரு நாய் ஓடிவந்து என் அண்ணனுடைய பஞ்சுபோன்ற மிருதுவான முதுகில் வாயை வைத்துக் கௌவிக்கொண்டு ஓடிற்று! ஹா! அதை நான் என் இருகண்களாலும் கண்டுவிட்டு அப்படியே சோர்ந்து மயக்கமாய் விட்டேன்! உடனே; அருகில் இருந்த ஒருவர் இந்தப் பரிதாபக் காட்சியைக் கண்டு கதறினார். மற்றவர்களும் அந்தப் பாழான நாயைத் துரத்திக் கொண்டு ஓடினர். நாயின் வாயிலேயே என் அண்ணனின் பாதி பிராணன் போய்விட்டது! ஓடித்தொடர்ந்தவர்கள் நாய்ப் பேயினிடமிருந்து என் அண்ணனை விடுவித்தனர். ஆயினும் என்ன, அடுத்த நிமிஷத்தில்

வயிற்றைக்கட்டியாவது, செலவைச் சுருக்கியாவது மாதந்தோறும் ஒரு நூதன புஸ்தகத்தை விலைக்குவாங்க எவர் முற்படுகிறாரோ, அவர் அதிசீக்கிரத்தில் மேதாவியாகி விடுவார். அனுபவத்தில் அறிக.

என் அண்ணன் தன் வாயில் ஊற்றியபாலைக் குடிக்கமாட்டாதவனாகி, ஒரு வலிப்பு இழுப்பு இழுத்து அப்படியே ஆவிபிரிந்தான்.

ஃ

ஆ! ஈசா! நான் ஒண்டிமரமானேன்! துணையற்றவனானேன்! பூனைப் பிறப்பெடுத்தபோதிலும் இரு ஸகோதரர்களுடன் பிறந்ததில் நமக்கு வேண்டிய துணையிருக்கிறதென்று பூரித்திருந்தேன். ஐயோ! ஒரு அண்ணன்தான் போய்விட்டான்! மற்றொருவனாவது எனக்குத் துணையாயிருக்கக் கூடாதா? நேற்று என் அண்ணாவின்மீது பலகணிக் கம்பிக்கருகே சாய்ந்துகொண்டு தூங்கினேனே! புஸ்தக மூட்டைக்குள் இருவரும் படுத்துக்கொண்டு உல்லாஸமாயிருந்தோமே! இருவருமாக, இட்டிலியும், பக்ஷணமும், பாலும் ஒருவரையொருவர் பார்த்தபடி ஆநந்தமாய்ப் புசித்தோமே! என் பக்கத்திலேயே என் அண்ணன் இருந்துகொண்டு என்னை சந்தோஷப்படுத்திவந்தானே! இன்று அவனது அழகிய முகத்தைக் காணக்கூடாமற் போயிற்றே! இன்றைய மாலைக்காலம் என்னையும் என் அண்ணனையும் பிரித்துவிடுமென்று சொற்பனத்திலும் நான் நினைக்கவில்லையே! இரண்டு உடற்பிறப்புகளும் என்னைவிட்டுப் போயினவே! இவ்வுலகத்தில் தனித்த கட்டையாய் விட்டேனே! அங்கும் இங்கும் நடந்து எங்கெங்குமே மேலேயும் கீழேயும் பார்க்கிறேன்! எங்கும் என் அண்ணனின் உருவம் தென்படவில்லையே! ஒண்டியாக இருப்பதற்கும் கூடாமல் தவித்துக்கிடக்கிறேனே! வாயில்லாப் பிராணியாகிய என்தாய் என் அண்ணாவைக் காணோமே என்று அங்குமிங்கும் நடந்து பார்த்துத் தேடுகி



றது! நாய் கௌவிப்போன சங்கதி என் தாய்க்குத் தெரியாது. என் துக்க முகத்தைப் பார்த்து என் தமயன் செத்துவிட்டானென்று என் தாய் கண்டுகொண்டதுபோலிருக்கிறது. சோர்ந்து அப்படியே என் தாய் படுத்துக்கிடக்கிறது. எனக்கு வெளியில்வரப் பயம்! வெளியில் வராமலிருக்கவும் கூடவில்லையே!

ஃ

என்ன கண்ராவியான காட்சி! என் அருமை அண்ணாவே! நாய் உன்னைக் கூரிய பற்களால் கௌவிப் போனபோது உன் உடம்பு எப்படி நோவெடுத்துத் தத்தளித்ததோ! நீ எப்படித் துள்ளித் தவித்தாயோ! நீ என்னென்ன எண்ணினாயோ! என்னை நீ நினைத்தாயோ! என் தாயை நினைத்தாயோ! என் ஆசை அண்ணா! என்னைவிட்டுப் போய்விட்டாயே! உன் ஜீவியகாலம் இவ்வளவு சுருக்கத்துடன் பிந்திய கஷ்டங்களில்லாமல் முடிந்துவிட்டது. அந்தமட்டில் நீ புண்ணியசாலிதான். பாவியா

வீட்டில் யாதொரு வேலையுமின்றி உண்டு கிடப்பவர் செய்யும் காரியங்கள் அபாரமாகும். அவர்கள் இல்லாவிடில் வீட்டுச் சத்தம் வெளியிலேயே வராது.

கிய எனக்கு இந்தத் துக்கம் ஆறுவது எப்போதோ !

உன் தம்பியாகிய பூனை.

ஃ

[தன் ஸகோதரனுக்குப் பின்னர் இப்பூனைத் தம்பி மிக மிக இளைத்துப் போயது. தன் அண்ணனின் ஏக்கமே அதிகமாயிற்று. அதற்கு வைக்கப் பட்ட பாலையும் சரிவரப் பருக வில்லை. பால் அப்படியே கிடந்தது. அதிற் சக்கரை கலந்தும் குடிக்க வில்லை. தனியே திரிந்து தவித்தது. பக்ஷணமோ, அன்னமோ, எதையும் தொடவில்லை. ஒருநாட் பகலில் அது ஆயாசமாய்ப் படுத்திருக்கையில் ஒரு நாய் எமஸ்வரூபமாக அங்குதோன்றி அதன் ஆவியைக் கொள்ளைகொண் டது. அதனை அன்புடன் கவனித்துப் பார அன்னம் இட்டு அதைத் தடவிக் கொடுத்து அதனிடம் ஆசைவைத்து நின்ற சிறுவன் அதுமரித்துச் சவமா னது நோக்கி உள்ளங் கலக்கிக் கரை ந்து பெருமூச்சு எழும்பக் கண்ணீ ரானன்.]



நமது கதாப் பிரஸங்கி.

புது மாப்பிள்ளையின் தடபுடல்!

சீதாவுக்கும் ராகவனுக்கும் சிறு பிராயத்திலேயே விவாகம் நடந்து விட்டது. பெண் கொடுத்தவர்களும் வாங்கியவர்களும் நெருங்கிய இரத்த சம்பந்தமுள்ள பந்துக்கள். இருவரும் மிக்க மரியாதையும், ஒருவர் மீதொருவர் பற்றுதலும், அதற்கேற்றதுபோல் தகுந்த அந்தஸ்துமுள்ளவர்கள். ராகவனது தந்தை ஸர்க்கார் உத்தியோகஸ்தரானதால் அடிக்கடி வெவ்வேறு ஊர்களுக்கு மாற்றப்பட்டு வெகு தூர நாட்டில் இருக்கும்படியாயிற்று. இது பூர்வ கதை.

ஃ

ஒருநாட் காலையில் எட்டு மணிக்கு சீதாவின் வீட்டிற்கு ஒரு வண்டி வந்து நின்றது. அதிலிருந்து ஒருவர் இறங்கி வீட்டுக்குள் சென்றார். மிக்க நேர்த்தியான உடையில் அவர் காணப்பட்டார். சீதாவின் தமயன் அவரையார் என்று விசாரிக்க, தான் ராகவலு என்றும், சீதாவின் கணவன் என்றும் தெரிவிக்கவும் உடனே அவருடன் கைகுலுக்கினார். அதிக உபசரிப்புகளும் மரியாதைகளும் தொடங்கின. சீதாவின் விவாகத்தின் போது சீதாவின் தமயனான ஜெகநாதன் இரங்கூனில் வியாபார விஷயமாகத் தங்கி விட்டபடியால் விவாகத்திற்கு அவன் வரவில்லை.




மாப்பிள்ளையையும் அவனுக்கு அடையாளம் தெரியாது. சீதாவுக்கு ஆறு வயதில் விவாகம் நடந்தால் கணவனின் உருவத்தையே அவள் அறிய முடியாதவளானாள். சீதாவின் தாய் தந்தையர் அந்த சமயம் சென்னையில் ஒரு விவாகததுக்குச் சென்றிருந்தனர். இவ்விதம் வீட்டில் தன்னைத் தெரிந்தவர்கள் ஒருவருமில்லாத சம

ரயிலில் அனாவசியமாகப் பேசவருகிறவர்களிடம் வாய் மூடிக்கொள்வது உத்தமம். தன்னை இன்னார் என்று தெரிவிக்காதிருப்பது அதைவிட ஸர்வோத்தமம். சிலருக்கு வலியநெருங்கிப் பேசும் சுபாவமுண்டு. இத்தகையோர் பிறகு வெற்றிலையோ பொடியோ இரவல் கேட்க முந்துவர்.

யத்தில் ராகவலு தன் மனைவியைத் தேடிக்கொண்டு வந்து சேர்ந்தார்.

ஃ

ராகவலு வீட்டுக்குள் வந்த சமயம் சீதா புளியோதரைச் சாதத்தைப் புசித்துக்கொண்டிருந்தாள். அவள் இன்னும் பருவ மடையாததால் கூச்சமின்றி வீட்டின் தாழ்வாரத்தில் உட்கார்ந்து தின்றவாறு இருந்தாள். இதை ராகவலு பார்த்து விட்டார். ராகவலுக்குப் புளிச்சாதம் என்றால் பிடிக்காது. ஒருநாள் புளியோதரை புசித்து விட்டால் ஒருவாரம் வரையில் அவருக்கு வயிற்றாலேயே போகும். ஆனதால், தன் மனைவி சீதாவுக்குப் புளிச்சாதத்தைப்போட்டு அவள் வயிற்றைக் கெடுப்பது சரி



யல்லவென்று தெரிவித்தார். மாப்பிள்ளை வீட்டுக்குள் நுழைந்தவுடனே குற்றம் கண்டு பிடிக்க ஆரம்பித்து விட்டதைக் கண்டு வீட்டிலிருந்தவர்கள் திடுக்கிட்டனர். ஜெகநாதன் அதற்குப் பதிலாக சீதாவுக்குப் புளியோதரை என்றால் வெகு பிராணன்; அவள் வயிற்றுக்கு அது ஒன்றும் கெடுதி செய்யாது என்றான். அதற்கு ராகவலு, "இதென்ன இப்படிச் சொல்லுகிறீர்கள்? கணவனுக்குப் பிடிக்காதவற்றை அவன் மனைவியும் விட்டு விடவேண்டியது தானே" என்றார். இதைக்கேட்டதும் ஜெகநாதன் வருந்தியவனாய் 'சீதா சிறு பெண், அவள் மேல் கோபிக்கக் கூடாது என்றான். "நீங்கள் இப்படி அவளைத் தடிக்கழுதையாக வளர்த்துக் கெடுத்து விட்டீர்கள்; பெண்களை அடக்கி முறுக்கியே கொண்டு வரவேண்டும்" என்று ராகவலு கூறினார்.

ஃ

ஜெகநாதன் பல்லைக் கடித்துக் கொண்டு மௌனமாய்க்கண்ணீருடன் எழுந்து சென்று விட்டான். வீட்டிலிருந்தவர்கள் ஐயோ! சீதாவுக்கு இப்படிப் பட்டவனா வந்து வாய்க்க வேண்டும்? ஒரு புளியோதரையை அவள் புசித்ததற்கு இவ்வளவு ஆரவாரமா? என்று கலங்கினர். சீதாவோ நடு நடுங்கினாள். மாப்பிள்ளைக்கு மத்தியான விருந்தும் ஆயிற்று.

ஃ

புசிப்பு முடிந்ததும் சீதாவை இராத்திரி வண்டிக்கு தன்னோடு ஊருக்கு அனுப்பிவைக்க வேண்டுமென்று மாப்பிள்ளை வீட்டுப் பெண்களிடம் கூறினார்: ஜெகநாதன் வெளியிற் சென்று திரும்பி வந்ததும்

நாடகத்திலுள்ளவர்களிற் சிலர் எத்துணைக் கல்வி பயின்றிருப்பினும் தமது அந்தரங்க இழிதகைமையான சுபாவங்களையும், இலவச நுழைப்பில் எதையும் நக்கிப் பெறமுந்துவதையும், தம் கைக்குச் செலவின்றி பிறரது காசுக்கே செலவு வைப்பதையும் தவிர்க்க முடிகிறதில்லை. நீண்ட காலப்பழக்கம் இலகுவில் தொலைகிறதா?

வீட்டுப் பெண்கள் மாப்பிள்ளை பெண்ணை யழைத்துப்போக இருப்பதைத் தெரிவித்தனர். ஜகநாதன் ஓ! என்றான். அங்கு கூடிய இருந்த பெண்கள், அப்படிக் கண்டிப்பாகச் சொல்லிவிடக் கூடாதப்பா, நாளைக்கு சீதா அவருடன் தானே வாழவேண்டும். அதை மனதில் வைத்து தாயார் தகப்பனார் வந்த பிறகு அனுப்புவதாக மரியாதையாகவே சொல்லு என்று ஜகந்நாதனுக்கும் பாடம் கற்பித்தார்கள். ஜகந்நாதன் இப்படி உட்பட்டுக் கிடக்கவும் தலைவிதியா என்று மௌனமாய் எழுந்து தன் அறைக்குச் சென்றான்.

ஃ

மாப்பிள்ளை சிகரட் பிடித்துக்கொண்டு சோபாவில் சாய்ந்தபடி இருந்தார். ஜகநாதன் தன் அறையிலிருந்தும் வெளிவரவே, அவனை நோக்கி. பெண்ணை இன்றைக்கே அனுப்பி வைக்கவேண்டும், இங்கு இருந்தால் வீணாகக் கெட்டுப்போவாள் என்று மாப்பிள்ளை தெரிவித்தார். அதற்கு ஜெகந்நாதன் நான் இந்த வீட்டின் அதிகாரியல்ல, என் பெற்றோர்களே இதற்குப் பதில் சொல்ல வேண்டியவர்கள். அவர்கள் வந்த பிறகு அவர்களிடம் தெரிவித்துக் கொள்ளலலாம் என்றான். இது மாப்பிள்ளையை எடுத்தெறிந்து பேசுவது போலிருந்தது. உடனே மாப்பிள்ளை, ஆ! நான் உங்களுக்கு அத்தனை கேவலமாகப் போனேனே! உமது பெற்றோர் வரும் வரை நான் காத்திருக்கக் கூலியாளா என்றார்.

ஃ

இந்த சமயம் ஒரு வாலிப கனவான் கையில் ஒரு பிரம்புடனே அங்கு வந்து, ஜேகநாதர் யார் என்று கேட்டார், அதற்கு ஜெகநாதன் தானே என்று தெரிவித்து நீங்கள் யார் என்றார். நான் உங்களின் வீட்டைப் பெருக்க, சட்டிகழுவ, சேலைகள் துவைக்க வந்திருக்கிறேன். வயிற்றுக்கு இவ்வளவு சோறு போட்டால் போதும், சொன்னபடி யெல்லாம் நடப்பேன் என்றார். ஜகந்நாதர் சிரித்துக்கொண்டு, ஐயா! கனம் பொருந்திய கூலிக்காரரே! இந்த நாற்காலியிலே சற்று உட்காருங்களென, அவரும் அப்படியே உட்கார்ந்துகொண்டார். இந்த நூதன மனிதரின் பேச்சைக் கேட்ட வீட்டுப் பெண்கள் இவரை எட்டிப்பார்க்க, அவரும் அவர்களைப் பார்த்து விட்டு, அந்தச் சிறிய பெண்தான் சீதாவா என்று ஜெகநாதரைக் கேட்டார்.

ஃ

ஜகந்நாதன் பதில் சொல்வதற்குள் மாப்பிள்ளை சீறி எழுந்து, ஓய் மரியாதை கெட்டவரே! வீட்டிற்குள் புது மனிதனாக வந்து நுழைந்தால் வீட்டுப் பெண்களை யெல்லாம் உற்றுப் பார்ப்பதுதான் மரியாதையோ என்று ஆங்காரத்துடன் கேட்க, கூலிக்காரர் சிரித்துக்கொண்டே— நான் அயோக்கியனல்ல, சாதாரணமாகக் கேட்ட வார்த்தை, இதற்கு இவ்வளவு கோபமா? இந்த வீட்டிலே நீர் எந்த வகையில் உறவு என்று வினவினார். "உறவா?—நான்தான் சீதாவின் கணவன்; இனி, நீர் உமது நாக்கை ஜாக்கிரதையாக இழுத்து வைத்துப் பேசும்" என்று

சிலர் தங்களுக்கு விவாகமே வேண்டாமென்கிறார்கள். ஆனால் காதல் வர்ணனைகள்மட்டும் வெகு அழகாகச் செய்கிறார்கள். இந்த அனுபவம் இவர்களுக்கு எங்கிருந்துதான் இடைத்ததோ? உள்ளுக்கு என்னென்ன கேடு பாடுகளோ? பிணிகளோ?

மாப்பிள்ளை சொல்லி விட்டு, ஜெக நாதனைப் பார்த்து, "இந்த வீட்டிற்குக் கண்ட பயல்கள் வருகிறபடியால், சீதாவை இனி இங்கு வைக்க முடியாது. இந்த நிமிஷமே யனுப்பா விட்டால், பலாத்காரமாய்க் கொண்டு போக சட்டப்படி புருஷனுக்கு சுதந்திரம் உண்டு என்றார். உடனே கூலிக்காரர் சிரித்தவராக மாப்பிள்ளையைப் பார்த்து, நீர் சட்டத்தை எடுத்துக்கொண்டு பேசத் துவக்கிமீறி விட்டதால், சட்டபடி கோர்ட்டில் தீர்ப்பு பெற்று வந்து உமது இஷ்டப்படி செய்து கொள்ளலாம். இப்பொழுது ஒரு சுண்டு விரலைக்கூட நீர் இங்கு ஆட்ட முடியாதென்று போலீஸ் உத்தியோகஸ்தராகிய நான் உமக்குத் தெரிவிக்கிறேன் என்றார். இந்த வார்த்தை ஜெகநாதனுடைய மனதுக்கு மிக்க ஆறுதலாயிருந்தது.

ஃ

மாப்பிள்ளை துள்ளி விழுந்தார். குதித்தார், தடபுடல் செயதார். சீதாவை அனுப்புகிறாயா இல்லையா என்று ஜெகநாதனைக் கேட்டார். ஜெகநாதன் பதில் பேசவேயில்லை. அவனுக்குப் பதிலாகக் கூலிக்காரர் மாப்பிள்ளையைப் பார்த்து, வீணாக ஆத்திரப்படாதீர், சற்றுப் பொறுமைப்படும், இரவுக்கு சீதாவின் பெற்றோர்கள் வந்து விடுவார்கள், சென்னையில் நடந்த பந்துக்களின் விவாகத்தில் நானும் அவர்களுடனேயே வந்ததன், எல்லோரும் இங்கு புறப்பட்டபோது அவர்கள் நடுவில் ஒரு ஊரில் இறங்கினார்கள். நான் முன்னதாக ஜகந்நாதரின் முகத்தைக்கண்டு சந்தோஷப்பட வந்து விட்டேன். வந்து உமது ஆரவார சந்தோஷங்களும் பார்த்தாய் விட்டது என்றார். மாப்பிள்ளை உறுமிக்கொண்டு நின்றார்.

ஃ

கூலிக்காரர் ஜெகநாதனை வீட்டுக்குள் அழைத்துச் சென்று ஏதோ கொஞ்சம் பேசினார். ஜகந்நாதன் திகைத்துப்போய் ஆச்சரியத்துடன் அவரைக் கட்டிப் பிடித்துக்கொண்டு சீதாவைக் கூப்பிட சீதாவும் அறைக்குள் வந்தாள். ஜெகநாதன் அவளிடம் ஏதோகூற, அவளும் ஆச்சரியப் பட்டவளாய் நின்றாள். மூவரும் அறைக்குள்ளேபோய் என்ன ரகசியம் பேசுகிறார்களோ என்று மாப்பிள்ளை ஆத்திரத்துடன் சிந்தித்தவாறு இருந்தார்.

ஃ

மாலையில் எல்லோரும் காபியருந்தினர். மாப்பிள்ளைக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. சீதா உல்லாஸமாகத்திரிந்து கொண்டிருந்தாள். இரவு யாவரும் புசித்தனர். மாப்பிள்ளையை எவரும் உண்ணும்படியழைக்கவில்லை. மாப்பிள்ளை தனக்கு உண்டான அவமானங்களைப் பார்த்துத் துடித்துக்கொண்டு நின்றார்.

ஃ

இரவு ஒன்பதுமணி வண்டியில் ஜெகநாதன் பெற்றோர்கள் வீட்டுக்குள் வந்து நுழைந்தனர். கூலிக்காரர் அவர்களிடம் சீதாவை யழைத்துப்போக மாப்பிள்ளை வந்து செய்த ஆரவாரங்களைச் சொல்லிச் சிரித்தார். ஜெகநாதனின் தகப்பனார் சுந்தரநாதர் வியப்புற்றவராய் மாப்பிள்ளையைப் பார்த்து, நீர் யார், எவ்வூர் என்று கேட்டு, மாப்பிள்ளையின் பெற்றோர்களுடைய பெயர் விவரங்களையும் விசாரித்தார், மாப்பிள்ளையும் அவமானத்தை சகித்துக்கொண்டு எல்லா விவரமும் கூறினார். இதைக் கேட்டதும் வீட்டிலுள்ள அனைவரும் கொல்லென்று சிரித்தார்கள். சீதாவும் கூடச் சிரித்தாள்.

மாப்பிள்ளை கோபாவேசமாய், "அடியே! சீதா! சிரிக்கிருயா, இரு உன் கொழுப்பை யடக்குகிறேன்" என்ருர். உடனே சுந்தரநாதர், மாப்பிள்ளையைப் பார்த்து, "மூடனே! உன் வாயை அடக்கு; மீறினல் உதை படுவாய். இந்த வீட்டை எங்களுக்கு விற்றுவிட்டுப் போய்விட்டவர்களுக்கு சீதா என்கிற ஒருபெண் இருந்தது உண்மைதான். அவளைச் சிறுவயதில் ராகவன் என்ற 12-வயது வாலிபனுக்கு விவாகம் செய்துகொடுத்தனர். அந்த வாலிபன் எங்கோ ஓடிவிட்டான். சீதாவின் பெற்ருேர்களும் பெரிய கடன்காரர்களாகி, பாதிரிகளின் உதவியால் கடன் தீர்ந்து அவர்களும் கிறிஸ்துமதம் சேர்ந்துவிட்டனர். சீதாவின் முந்திய விவாகத்தைக் கோர்ட்டு மூலம் ரத்து செய்துவிட்டு, அவளுக்கு வேறிடத்தில் விவாகமும் செய்தானது. சீதா தன் கணவனேடும் அவனுக்குப் பெற்ற குழந்தைகளோடும் தஞ்சாவூரில் பெரிய ராஜா வீதியில் இருக்கிருள். அவள் கணவன் தானியேல் செல்லய்யா அங்கு கோட்டைத் தபாலாபீஸில் உத்தியோகமாயிருக்கிருன். அங்கே போய் உன் அதிகாரத்தைக் காட்டிக்கொள். "சீ! -நாயே வெளியே போய்விடு" என்ருர்.

ஃ

மாப்பிள்ளைக்கு எல்லாவிவரமும் தெளிவாகத் தெரிந்துவிடவே, அவர் அடங்கிவெட்கிப்போனர். அச்சமயம் கூலிக்காரர் அவரைப் பார்த்து என் பெண்டாட்டியான சீதையை உன் பெண்டாட்டியாக நினைத்துக்கொண்டு அதிகாரம் செய்கிறபாக்கியத்தைப் பெற்ருயே அப்பா என்று சொல்லிச் சிரித்தார். இனி, சீதா வேண்டிய வரையில் புளியோதரையைப் புருஷனின் பயமில்லாமல்தின்று குதிக்கலாம் என்ருர். இதற்குள் ஜெகந்நாதன் கோபத்துடன்" போய்வாருங்கள் மாப்பிள்ளையவர்களே!" என்று வெளி



யில் தள்ளினன்; மாப்பிள்ளையும் தன் பெட்டியைத் தூக்கிக்கொண்டு அந்த நிமிஷமே பறந்துவிட்டார். சீதாவைப் பிடித்த எழரைநாட்டுசெனியன் ஒரேநாளில் ஆட்டிவிட்டுத் தொலைந்துபோயிற்று. ராகவனும் சிலநாள் இருந்து மகிழ்ந்து தன் உத்தியோக ஊருக்குச் சென்ருன்.

ஃ

அந்த வருஷக் கடைசியில் ராகவனுக்கும் சீதைக்கும் சாந்திநடந்தது. ராகவனின் பெற்ருேர்களும் வந்திருந்தனர். சீதையின் மற்ெருரு மாப்பிள்ளையினது செய்தியைக் கேட்டு சிரித்துச் சிரித்து வயிறு புண்ணுயினர். இந்த விசேஷங்களை யெல்லாம் நமது நண்பன் ஜெகநாதன் நமக்குத் தொவித்ததால், அதை ஒருகதாரூபமாக இங்கு எழுதலானேம். சீதா தன இனியநற்கணவனுடன் சுகமே இருக்கிருள். ஜெகநான் மனைவியுடனும் பெற்ருேர்களுடனும் ஆநந்தமாக வாழ்ந்து வருகிருன்;

எலியும் பூனையும் ஒரே வீட்டில் வசித்தபோதிலும் உட்பகை போவதில்லை.

பெண் படிப்பின் வேடிக்கை.

பெண்மணிகட்குக் கல்வி வேண்டுமென்று எல்லோருந் தான் பேசுகிறார்கள். வெகு காலத்திற்கு முன்னரே ஸ்ரீமான் வேதநாயகம்பிள்ளை ஸ்திரீகட்குக் கல்வி அவசியம் என்று பேசிப் பெரிய புஸ்தகமும் எழுதிவைத்துவிட்டுப் போய்விட்டார். இப்பொழுது ஏராளமான பெண் பாடசாலைகள் தோன்றி, பெண்மணிகளிலும் அநேகர் பட்டதாரிகளாய் வெளிவந்திருக்கிறார்கள். இந்த ஆடம்பரங்களெல்லாம் வெளிப்பார்வையில் சரிதான்; மனோகரமான சாக்ஷிதான். ஆனால் உள்ளுக்குப் பெண் கல்வியின் முயற்சி வெகுவாக அழுகிப்போயிருக்கிற தென்பது என்னைப்போன்ற சிலரது அபிப்பிராயம். எதற்கும் யோசியாமல் உடனே மறுப்பு தந்துவிடலாம். அப்படியே "அநுபவ"த்திற்கும் மறுப்பு தருவது சுலபமல்ல.

ஃ

என் அநுபவத்தை இங்கு கொஞ்சம் பேசுகிறேன். இதை எழுதும் நான் தமிழ் ஜில்லா ஒன்றில் கலெக்டர் ஆபீஸின் தலைமைக் குமாஸ்தா. எனக்கு மாதசம்பளம் எண்பது ரூபாய். என் மனைவியின் தங்கமான குணத்திற்கு எவ்வளவு பொறுமையுள்ள வேலைக்காரியுங்கூட ஒரு வாரத்திற்குமேல் என் வீட்டில் இருக்கமாட்டாள். அந்த ஒரு வாரத்திற்குள்ளாக அவளிடம் ஆயிரத்தெட்டு குற்றங்கள் பேசிச் சண்டையிட்டு வெளியே அனுப்பிவிடுவாள். இந்த நிலையில் என் வீடு என்றால் எவரும் வேலைக்குவர இணங்குவதில்லை. பெரிய ஏககுடும்பமாயிருந்த என் இல்லம் என் மனைவியின் திருவாய் காரணமாகப் பத்தெட்டுச் சுக்கலாகச் சிதறுண்டுபோய் இப்பொழுது நானும் என் மனைவியும் எங்கள் இருவருக்குமாகப் பிறந்த செல்வி பத்மாவதியுமாகத் தனிக்குடித்தனம் செய்து வருகிறோம்.

ஃ

எனக்கோ பெண் கல்வியில் மிக்க அவா. என் குமார்த்தி பத்மாவதியைப் பி. ஏ. வரைக்கும் வாசிக்கவைத்து, அப்பால் அவளை ஒரு லேடி டாக்டராக்க வேண்டுமென்று எவ்வளவோ ஆசை. அதற்காகப் பத்மாவதியின் படிப்பில் நான் அதிக கவனம் செலுத்தலானேன். இது என் மனைவிக்குப் பிடிக்கவில்லை. எப்பொழுதும் படித்துக்கொண்டே கிடந்தால் அந்த வீடு விளங்குவதெப்படி என்று என் மனைவி என்னைக் கோபித்துக் கொள்வாள். அதிகாலையில் நான்குமணிக்குப் பத்மாவதியை எழுப்பிப் பாடங்கள் சொல்லிக்கொடுத்

பேதிக்குச் சாப்பிட்ட தினத்தன்று அந்தமருந்து முற்றும் மலத்துடன் கலந்து குறைந்தது ஐந்தாறு விசையாவது பேதியானபிறகுதான் சாதம் உண்ணவேண்டும். வயிற்றுக்குள் மருந்து இன்னும் தங்கியிருக்கையில், சரியாகப் பேதியாவதற்குமுன் அன்னம் அருந்தினால் சில சமயங்களில் அவ்வளவும் வாந்தியாகிவிடுவதுமுண்டு.

துக்கொண்டிருப்பேன். அந்தப் படிப்பு காலையில் ஏழுமணி வரையில் நடந்தால் உத்தமமாயிருக்கும். அது தான் காணோம். மணி ஆறு அடித்ததும் என் மனைவி சிடுசிடுப்புடனே என் முன்பாக ஆஜராகிவிடுவாள். "சரி சரி படித்துப் பாஸ் செய்தது போதும்! கழுநீர் எடுத்துக்கொண்டு போய் ஊற்றிவிட்டுச் சாணி வாங்கி வா; இன்று வெள்ளிக்கிழமை; சாணி வந்துதான் வீடு மெழுகவேண்டும் என்பாள்.



ஃ

"சரி, போய்வா, வீட்டுக் குடித்தனமும் ஒரு பாடம்தான். அதையும் கற்றுக்கொள்ள வேண்டியதுதான்" என்று சொல்லிப் பத்மாவதியை அனுப்பி வைப்பேன். உடனே பத்மா கழுநீர்க் குடத்துடனும் சாணிவாங்க ஒரு முறத்துடனும் புறப்பட்டுக்கொள்வாள். இவ்விதம் சென்றவள் திரும்பி வருவாளென்று அவளுக்காக வெகுநேரம் காத்துக்கிடப்பேன். கழுநீர் ஊற்றுவதற்காகச் சென்ற பத்மா மறுபடியும் என்னிடம் வருவதேயில்லை. இது ஒரு தினத்துச் சங்கதியல்ல; பல தினத்துச் செய்தி. நெடுநேரமாகப் பத்மாவதியை எதிர் நோக்கியும் காணாமையால் எங்கே அவள் என்று உள்ளுக்குச்சென்றால், அங்கு




பாத்திரங்களை யெல்லாம் பத்மா தேய்த்து விளக்கிக்கொண்டிருப்பதையும், பாத்திரங்கள் சரிவரத் தேய்க்கவில்லை யென்று ஒரு பாத்திரத்தை எடுத்துக் காட்டி, "எண்டி இப்படியா தேய்ப்பது, பற்றுவிடாமல் அப்படியப்படியே இருக்கிறதே" யென்றுகூறி அவளை யடிக்க என் மனைவி கை ஓங்குவதை





யும் காண நேர்கிறது. அதற்குள் பத்மாவதி அவளிடம் அடிபட்டு அழ, அதைக் காணச் சகியாமல் நான் மனைவியை ஓங்கி அறைய, அடுத்த வீட்டார் கூட்டம்கூட ஒரு பெரிய கலகமாகிறது. காலைப்படிப்பு இப்படியாக முடிகிறது.

ஒன்பது மணியானதும் பலகாரம் சாபிக்குப் பிறகு பத்மாவதி பள்ளிக்கூடம் போய்விடுகிருள். நானும் என் உத்தியோகத்திற்குப் போய்விடுகிறேன். பிறகு இரவிலே பாடம் கற்பிக்க ஆரம்பிக்கும்போது கைக்குழந்தை அழுகிறது; அதை என் மனைவி பத்மாவதியிடம் தந்து தொட்டிலில் போட்டு ஆட்டும்படியும் தான் சமைக்கப் போகவேண்டுமென்றும் கூறுகிருள். பாடத்தை நிறுத்திவிட்டு





பத்மாவதி குழந்தையைத் தொட்டிலில் போட்டுத் தாலாட்டச் சென்றுவிடுகிருள். பிறகு புசித்துவிட்டு ஒன்பது மணியானதால் தூங்கப் போய்விடுகிருள். இவ்வாறே பிரதிதினமும் நடப்பதானுல் பத்மாவதி படிப்பது எப்போது? இனி என் மனைவிக்கு நோய்—மாதவிலக்கு உண்டானுல் அன்று பள்ளிக்கூடம் போதல் குட்டிச்

சிலர் ஒருவனிடம் ஒரு ரூபாயாகுமென்று ஒரு சங்கதிக்குச் சொல்லி, பத்தணுவில் அந்த சங்கதியை முடித்துவிட்டு, பாக்கியைத் தங்களின் சொந்தச் செலவுக்கு எடுத்துக்கொண்டு, அவனிடம் ஒரு ரூபாய் செலவானதாகச் சொல்லி விடுகிருர்கள். ரூபாய் கொடுத்தவன் பிறகு உண்மையை அறிந்து கேட்பின் ஆத்திரம் பொங்கி ஏதோ சமாதானம் சொல்லுகிருர்கள்.



கூவர்தான். பத்மாவதியை யழைக்க உபாத்தியாயினி சிறுமிகளை யனுப்ப, அவர்கள் வீட்டுக்கு வந்து பத்மாவதியை யழைக்க, உலக்கையை எடுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்துள்ள மாதவிலக்கான என் மனைவி அவள் வரமுடியாது, வீட்டு வேலை செய்யவேண்டுமென்று கூறிச் சிறுமிகளை யனுப்பிவிடுவாள். இந்த நிலையில் சிறுமிகளின் கல்வி விருத்தியாவது எவ்வாறு? இதுவேதான் பல வீடுகளிலும் காணும் விஷயம். வீட்டு வேலைகளையும் செய்துவிட்டுத் தங்கள் பள்ளிப் பாடங்களையும் படித்துத் தயாராகவேண்டிய இரட்டிப்புப் பாரம் பாலிகைகளின்மீது விழுகின்றது. பையன்களுக்கோ இந்த சங்கடமில்லை. அவர்கட்குப் பள்ளிப்படிப்பு ஒன்றேதான் வேலை. இதனால் வீட்டு வேலைகளைச் சிறுமிகள் செய்யக்கூடாதென்று நான் சொல்ல வரவில்லை. அந்த வேலைகளின் இடையே படிக்கவும் சாவகாசம் விட்டுக்கொடுத்துப் படிப்பையும் கவனிக்கவேண்டு மென்பதே என் பிரலாபிப்பாகும்.

ஜப்பானியப் பெண்களுக்கு சமையல் போதனை!

மேனாட்டு நாகரீகம் ஜப்பானில் தலைவிரித்தாடுவதனால், ஜப்பானியப் பெண்களிற் பல்லோர் கைத்தொழில் இவைகளிலும், உத்தியோக வேட்டையிலும் புகுந்து சமையல் சாஸ்திரத்தையே அடியோடு மறந்துவிட்டனர். பிள்ளைகளை வளர்க்கத் தாதியொருத்தி வேண்டியிருக்கிறது. இவர்களை மணந்த ஆடவர்களின் கதி அதோகதிதான். மிருக பக்ஷி இனங்களுக்குத் தெரிந்த குழந்தை வளர்ப்புகூட இவர்கள் அறிய முடியவில்லையாம்! ஆகவே இவர்களுக்காகப் பாடசாலைகள் ஏற்பட்டு, வீட்டுக் குடித்தன முறைகளைக் கற்றுக் கொடுக்கப் படுகிறது. சமைக்கும் விதங்களும் காட்டப்படுகின்றன. குழந்தைக்குப் பால் கொடுக்கும் விதம் முதற் கொண்டு போதிக்கப்படுகிறதெனில், இதனினும் ஆபாச நாகரீகம் வேறு வேண்டுமோ! வீட்டுக் குடித்தனம் தெரியாதவளுக்கு நாட்டுக் குடித்தனம் தெரிந்து பயனென்னவென்றார் ஸ்ரீ வேதநாயகம்பிள்ளை. இந்திய நாகரீகத்தைப் பழிக்கும் மேதாவிகள் இதற்கென்ன பதில் சொல்வார்களோ!

" அமிர்த குணபோதினி "

ஸ்ரீமுக ஸம்வத்ஸரத்திய ஆடி மாத பஞ்சாங்கம்.

யோகம்	இங்	தமிழ்	வார	திதி, நக்ஷத்திரம், விரதாதிகள், முதலியவை.
பி-சி	16	1	ஞா	நவ-6-1, பர-47-35.
ம-அ	17	2	திங்	தச-11-20, கிரு-54-43, கரிநாள்.
அ	18	3	செ	ஏகா-17-11, ரோக-60-0, ஸர்வைகாதசி.
சி	19	4	புத	துவா-23-12, ரோக-2-12
ம	20	5	வியா	திர-29-1, மிரு-9-32, சிவராத்திரி.
சி	21	6	வெ	சசி-34-19, ஆரு-16-28.
சி	22	7	சனி	● 38-54, புந-22-48, ஆடி அமா அப்பர்காக்ஷி.
சி	23	8	ஞா	பிர-42-46, பூச-28-21, ஸிம்மாயனம் 19-29.
சி-ம	24	9	திங்	துவி-45-41, ஆயி-32-2.
சி	25	10	செ	திரி-47-31, மக-36-44, கரிநாள்.
அ	26	11	புத	சது-48-13, பூர-39-16, திருவாடிப்பூரம், திருச்செந்தூர் வெள்ளித்திருமணம்.
ம-சி	27	12	வியா	பஞ்-47-40, உத்-40-40, கருடநாக பஞ்சமி.
அ-சி	28	13	வெ	ஷஷ்-45-48, ஹஸ்-40-46, சூரிய ஷஷ்டி.
ம-அ	29	14	சனி	ஸப்-42-28, சித்-39-35, ஸப்தமி அசுபம்.
சி-உ	30	15	ஞா	அஷ்-38-10, ஸ்வா-37-5.
ம-அ	31	16	திங்	நவ-32-31, விசா-33-30.
சி-உ	1	17	செ	தச-25-56, அநு-28-50, 18-ம் பெருக்கு.
சி-ம	2	18	புத	ஏகா-18-35, கேட்-23-29, திதிதுவயம்.
சி	3	19	வியா	துவா-10-46, மூல-17-41, காளஹஸ்தி ரதம்.
பி-சி	4	20	வெ	திர-2-45, உப-52-10, பூரா-11-43, வரலக்ஷ்மி விரதம், கரிநாள், ரக்ஷாபந்தனம். [அவிட்டம்.
சி	5	21	சனி	○ 47-40, உரா-6-0, கஜேந்திரமோக்ஷம் ஆவணி
அமசி	6	22	ஞா	பிர-41-23, ஶ்ரூவ-0-53, உப-55-52.
சி	7	23	திங்	துவி-36-17, சத-54-5, அசூன்யசயன விரதம்.
ம-அ	8	24	செ	திரி-32-45, பூட்-52-59, கஜ்ஜலி திரிதியை.
சி உ	9	25	புத	சது-30-54, உட்-53-31.
சி-அ	10	26	வியா	பஞ்-30-53, ரே-55-59.
அ	11	27	வெ	ஷஷ்-32-44, அசு-60-0, ஹலஷஷ்டி.
சி	12	28	சனி	ஸப்-36-11, அசு-0-7, கோகுலாஷ்டமி, ஸீதலா விரதம்.
பி-சி	13	29	ஞா	அஷ்-40-56, பர-5-48, கிருத்திகா விரதம்.
ம-அ	14	30	திங்	நவ-46-30, கிரு-12-31.
அ-சி	15	31	செ	தச-52-32, ரோ-19-47, ஆடிபண்டிகை தசமிதிதி.

(5—23) கடகம் — ஆகஸ்டு

ரா	15உ-க்கு ராசி		ரவி 4
சனி			சுக் குரு கேது
			குஜ

" அமிர்த குணபோதினி " பிரஸ், 158 A, பிராட்வே, சென்னை—1933.